பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

புதுமை : 01 | 29 ஏப்ரல் 2017 | விதி : 46




**அந்த மூன்று நாள்கள்**



**சைற்றத்தின் குட்டிகள் யாழ்ப்பாணத்தில்**



**மிரள வைக்கும் நடைபாதை**



**புலிகளுக்கு தூது அனுப்பிய சம்பந்தன்**



# ஓயாத சவாரிகள்

**'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாவடு

தொடர்கதை 45



சயந்தன்

அவன் என்னவோ வாய்க்குள் முணுமுணுத்தபடி அப்பால் நகர்ந்து சென்றான். ஒரு முடிவுக்கு வரமுடியாதபடி இரவு நீண்டுகொண்டிருந்தது. அகிலாவின் அப்பா ஏன் அப்படி கேட்டார் என்று தெரியவில்லை. மூன்று வருடங்கள் பனிஸ்மென்ட் என்றால், அதற்குப் பிறகு உடல் தளர்ந்து நெஞ்சு உள்ளொடுங்கி முதுகு கூனி வெளியேறி.....

கண்களை இறுக்க மூடுவதும், பிறகு திறந்து இருட்டுக்குள் துழாவுவதுமாக நேரம் கழிந்தவண்ணம் இருந்தது. எல்லாம் பண்டாரவன்னியனாலே வந்தது. 'யாருக்கோ சட்டை காற்றில் மேலே பறக்கிறது. நமக்கென்ன' என்று இருந்திருக்க வேண்டும். இரத்தக் கொதிப்பில் அவனைக் குத்தப்போய் எல்லாம் பிழைத்து நிற்கிறது. அது மட்டும் நடந்திருக்காவிட்டால் அகிலாவின் படிப்பு முடிகிற இரண்டு ஆண்டுகள் வரை சரியாகப் போயிருந்திருக்கும்.

இற்றைவரை மூளைக்குள் கோடுகளையும் வரைபடங்களையும் வரைந்து பழக்கப்பட்டிருந்த நான் முதற்றடவையாக இதயமொன்றைக் கீறினேன். அதன் குறுக்காக நிற்கிற மனிதர்களை கோடுகளாய் சித்திரித்தேன். அகிலாவின் அப்பா, அவளது அம்மா, தினமும் ஒரு ரூபா தண்டம் செலுத்துகிற மணிவண்ணன், என் வீட்டில் யாரேனும், வேறும் வேறும் யாரேனும்.... எந்தக் கோடுகளும் குறுக்காக நிற்கவில்லை. ஒரு பெரும் தனிக்கோடு துப்பாக்கியைப் போல இதயத்தைக் குறுக்கறுத்துப் போனது. அந்தக் கோட்டை நான் இயக்கம் என்று குறித்தேன்.

ஒருமுறை கண்களை இறுக்கி மூடித் திறந்தபோது நேரு ஐயாவின் குரலில் ஒலிப்பது போலத் தோன்றிய அந்தச் சொற்கள் இப்படியிருந்தன.

" இந்த உலகத்தில, இயக்கம் இல்லையென்று ஒருதடவை கண்ணை மூடி யோசித்துப் பார்த்தேன். நீயும் அகிலாவும் எவ்வளவு சந்தோசமாக இருக்கிறீர்கள்..."

நடுநிசி தாண்டிய பிறகு எனக்கு தூக்கம் வருவது போலத் தோன்றிற்று.

☹ ☹ ☹

அலைகளின் பேயாட்டத்தில், வள்ளத்தின் பக்கவாட்டு விளிம்புகள் நீரைத் தொடுவது போலச் சரிந்து நிமிர்ந்தன. 'கிறீச் கிறீச்' என்ற சத்தங்கள் கேட்கத் தொடங்கிய போது ஒன்றிரண்டு இடங்களில் மரச் சட்டகங்கள் விலகியிருந்தன. திசையை அனுமானிக்க முடியவில்லை.

மிகத்தூரத்தே கன்டெயினர்கள் அடுக்கப்பட்டிருந்த பெரிய கப்பலொன்றில் வெள்ளை நுரைகள் ஓர் அருவியைப்போல மோதுவதையும் மலை சாய்வதைப் போன்று நீருக்குள் அது தாழ்ந்து அசைவதையும் கண்டபோது, இவன் ஒரு நொடியில் வெறுமையுற்றதைப் போன்று உணர்ந்தான். அப்போதுதான் அது நடந்தது. மின்னல் பொழுதின் பேரிரைச்சலுக்குப்பின் இவன் நீரில் மூழ்கிக்கொண்டிருந்தான்.

பெருநிலத்தில் மூண்டு ஓடிப்படர்ந்து மூசி எரியும் தீயின் நாக்குகளைப் போன்றே நீரின் நாக்குகளும் அசைந்து மேலெழுந்து மடிந்து சுருண்டு விழுந்தன. அச் சுழல்களுக்கிடையில் இவன் மனிதர்களைக் கண்டான். அவர்கள் அலைகளைத் தோற்கடிக்கின்ற வெறியில் கைகளையும் கால்களையும் கண்டபடிக்கு அடித்தும் உதைத்தும் பெருங்குரலில் ஓலமிட்டும் மறைந்தனர். கரிய பூதமொன்று தன் நீண்ட நாவினால் கவ்விப் பற்றுவதுபோல கடல் அவர்களை உள்ளிழுத்தது. அது கருமையுற்றிருந்தது அன்றைய வானத்தைப்போல.

இவன் தத்தளித்தபடியிருந்தான். ஒரு வீடொன்றைப்போல முப்பத்தியிரண்டு நாள்களாக மனதுக்கு நெருக்கமாயிருந்த வள்ளம், முழுவதுமாக உடைந்து உருக்குலைந்திருந்தது. துண்டுகளாக அது மிதந்தபடியிருந்தது. அவற்றினிடையே பைகள், மண்ணெண்ணெய் பரல், ரொய்லெட் தகரம், பாய், சோற்றுப்பானை, கம்பளிப்போர்வை முதலானவை குப்பையைப் போல பரவியிருந்தன. மிதக்கும் அப்பொருள்களைப் பற்றிப்பிடிக்க முயற்சித்த சில மனிதர்கள் தோற்றபடியிருந்தனர்.

தண்ணீருக்குள் முழுவதும் மூழ்கியபோது கால்கள் தம் பாட்டில் அடிக்கத்தொடங்கின. நீரின் இழுப்பு இவனை ஓரிடத்திலன்றி அலைக்கழித்தது. தலையை அங்குமிங்கும் உதறித் திணறியபோது உப்புநீர் தொண்டைக்குழிக்குள் கசந்து உள் நுழைந்தது. மேலே வானத்தைப் பார்க்குமாற்போன்று தலையை உயர்த்தி முதுகை நீரில் அணைத்து நீந்துவதற்கு இவன் முயற்சித்தான். கால்களை உதையத் தொடங்கியபோது வலது கால் திடீரென்று பாரம் கொண்டதைப் போலத் தோன்றிற்று அதனை உயர்த்தி நீரில் உதைக்கமுடியவில்லை. கைகளால் சமநிலை செய்யப் படாதபாடு பட்டான். மூழ்குவதைத் தவிர்க்கமுடியவில்லை. உடல் சோர்வடைந்திருந்தது. நீருக்குள் தாழ்ந்த போது வெளிச்சம் குறைந்து கண்கள் இருளடைந்தன. இடது காலைத் தண்ணீருக்குள் உதைத்தபடி கைகளினால் மற்றைய முழங்காலில் பொருத்தப்பட்டிருந்த பட்டிகளின் கட்டுகளை அவிழ்த்தான். ஒற்றைக் காலினால் தண்ணீரைத் தள்ளி மிதித்தபடி ஒரு பறவையைப்போல கைகளை வீசி நீரின் மேற்பரப்புக்கு வந்தான்.

பளபளப்பான பைபர் கிளாஸினால் வார்க்கப்பட்டிருந்த இவனது வெண்புறா செயற்கைக்கால், முன்னைப்போல் கொப்பளிக்கும் இரத்தமும் பச்சை வரிகளாலான பிய்ந்து போன சீருடைத் துணியும் இன்றி வேகத்தோடு தண்ணீரில் மிதந்து சென்றது.

நீர்த்திரளொன்று இவனைப் புரட்டி வீசிய போது தண்ணீர் உடலை மூடி மேற்பரவியது. நிமிர்ந்தும் புரண்டும் உடல் தன் பாட்டில் சுழன்று கொண்டிருந்தது. கண்களை வலிந்து திறந்தான். வெளிச்சத்திலிருந்து இருளுக்குள் நுழைவதைப்போன்று தோன்றிற்று. வாயிலிருந்து குமிழிகள் வெளியேறின. மூச்சை அடக்கி உடலை இறுக்கி மேல்நோக்கி உந்தும் தருணங்களில் யாரோ தலையைப் பிடித்து ஆழத்துக்கு அழுத்துவது போலிருந்தது. நெஞ்சுக்கும் வயிற்றுக்குமிடையில் பலூனொன்று வெடிக்குமாற்போல ஊதி ஊதி விரிந்தது. கைகள் ஓய்ந்தன. உடல் அழுந்தியது. நினைவுகள் திணறின.

பொங்குகிற அலைகளையும் கடலையும் தோற்கடித்து விடுகிற வெறியில் பச்சை நிறத்தினாலான பனியனை அணிந்த ஆமிக்காரனொருவன் நீந்திக்கொண்டிருந்தான். சுவரில் சாய்ந்து நின்று சிணுங்கிய அகிலா 'என்னையொரு வழி பண்ணவோ' என்று வெட்கித்தாள். அம்மா தலைவிரி கோலமாய் இந்தியச் சிப்பாயொருவனின் முன்னின்று தலையிலும் வயிற்றிலும் அடித்துக் குளறினாள். அலையரசியில் சிறு குழந்தையொன்று கால்களை உதைத்து வீரிட்டுக் கத்தியது. மைதிலி காதலிக்கிற இளைஞனை யாரென்று தெரியவில்லை. நைட்டியணிந்திருந்த அகிலா கழுத்துச் சட்டையைக் கைகளால் அழுத்தியபடி குனிந்து தேநீர் கோப்பையை வைத்தாள். "பொங்கும் இன்பக் காதலென்றால் பூமணம்". அகிலா கண்களை இடுக்கிச் சிரித்தாள். அம்மா "இனியாவது உனக்கொரு வாழ்க்கை வேணும்" என்றாள். அகிலாவின் வெற்று மார்புகள் சுட்டன. அவள் "இண்டைக்கு மட்டும் தான். நெடுகிலும் கேட்கக் கூடாது" என்று காதுக்குள் கிசுகிசுத்தாள்.

☹ ☹ ☹

இத்ரிஸ் என்கிற எரித்திரியக் கிழவனுக்கு முப்பது வருடங்களுக்கு முன்னர் திரண்ட தோள்களும் உருக்குலையாத கட்டான உடலும் வாய்த்திருந்தது. இப்பொழுது போன்று இடுங்கிய கண்களும், ஒடுங்கிய கன்னங்களும் கோடுகளாய்ச் சுருங்கிய தோல்களும் அவனுக்கு இருக்கவில்லை. அகன்ற நெற்றியும் தலையோட்டினை ஒட்டிச் சுருள் சுருளாயிருந்த தலைமயிரும் அவனுக்கிருந்தன. எப்பொழுதும் எதையோ சொல்லத் துடிப்பதுபோலத் தடித்த உதடுகள். உறுதியான கரங்கள் எத்தியோப்பியப் படைகளிடமிருந்து பறிக்கப்பட்ட துப்பாக்கி களைத் தாங்கியிருந்தன. இருண்ட வானத்தில் இரண்டு சூரியனைப் போன்ற பிரகாசமான கண்கள் அவனுக்கிருந்தன. அவற்றில் சதா காலத்துக்கும் ஒரேயொரு கனவு மீதமிருந்தது. அது தனி எரித்திரிய விடுதலை தேசம்.

இத்ரிஸ் வீட்டை விட்டு ஓடி வந்து எரித்திரிய விடுதலை முன்னணிப் படையில் இணைந்து கொண்டபோது அவனுக்கு இருபது வயதாய் இருந்தது. துப்பாக்கிகள் மீதான காதலையும் தாண்டி எரித்திரிய தேசக் கனவுகள் அவனில் சஞ்சரித்த வண்ணம் இருந்தன.

சீனாவுக்குப் பயிற்சிக்குப் போயிருந்த ஐசேயாஸ் அபேவேர்கி திரும்பி வந்த சற்றுக் காலத்தில் அவரை கொமாண்டர் ஆக்கியிருந்தார்கள். இத்ரிஸின் வயதுதான் அவருக்கும். சீனப் பயிற்சியின் பின்னர் எத்தியோப்பிய சிப்பாயினர் மீது பரவலாக கெரில்லாத் தாக்குதல்களை ஐசேயாஸ் தொடங்கினார். இத்ரிஸ் அவர் மேல் கவரப்பட்டிருந்தான். ஆனால், சீனாவா, யாரோ எவரது உதவியோடும் சுதந்திரத்தைப் பெற முடியுமென்று அவன் நம்பாதவனாயிருந்தான். சண்டையற்ற அமைதியான இரவுகளில், வெம்மைக் காற்று உடலைத் தழுவியபடி இருக்க, துப்பாக்கியை நெஞ்சில் அணைத்து வெறுத்தரையில் உடல் சாய்த்து நட்சத்திரங்களைப் பார்த்தபடி அவன் பாடுவான்.

"ஓ வழிப்போக்கனே, உன் வழியில் என் எரித்திரிய தாயைப் பார்த்தால் கூறு, அவள் விடுதலையை நானே பெற்றுத் தருவேன் என்று".

(வலிகள் இன்னும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சைட்டத்தின் குட்டிகள் யாழ்ப்பாணத்தில்



எந்திரி.சி.சந்திரசேகரன்
(ஓய்வுபெற்றபொறியியலாளர்)
உரும்பிராய்.

'பட்டக் கடைகளை மூடு' என்பது போன்ற ஒரு சுவரொட்டி யாழ். நகரின் பல்வேறு இடங்களில் காணக் கிடைக்கிறது. இது பற்றிப் பொதுமக்கள் கவனம் செலுத்த வேண்டும். முக்கியமாக, யாழ்ப்பாணத்தைப் பொறுத்தளவில், பொறியியல் சார்ந்த கற்கை நெறிகளுக்கு இது பொருந்தும்.

சிவில் பொறியியல், கனிய அளவீடு (Civil Engineering, Quantity surveying) துறைகளில் உயர் டிப்ளோமாவும் தொடர்ந்து பட்டப் படிப்பும் தருவதாக யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ள சில நிறுவனங்கள் கூறுகின்றன. இவர்கள் தரும் பட்டமும் அங்கீகாரமும் செல்லுபடியானவையாக இருக்குமா? என்பதை மாணவர்களும் பெற்றோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அண்மையில் "இலங்கை பொறியியலாளர் நிறுவனம்" பத்திரிகைகளில் பொது அறிவித்தல் ஒன்றை விடுத்திருந்தது. (IESL) "எமது நிறுவன அங்கீகாரம் உள்ளதெனப் பல நிறுவனங்கள் விளம்பரப்படுத்துகின்றன. கணிதப் பிரிவில் க.பொ.த. உயர்தரத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து பின்னர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் நான்கு ஆண்டு காலப் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்த கற்கை நெறிகளைப் பின்பற்றியோரையே எமது நிறுவனம் அங்கீகரிக்கும்" என்பதே அதன் சாராம்சம்.

நிலைமை இப்படியிருக்க, முறையாக க.பொ.த (உ/த) கல்வி இல்லாமலும், இரண்டாண்டு கால - அதுவும் பரீட்சைகளே கூட இல்லாத 'உயர் டிப்ளோமா' என்கிற பெயரோடும், தொடர்ந்து ஓர் ஆண்டில் பொறியியல்/கணிய அளவீடு பட்டம் பெற்றுவிடலாம் என்பது இயலாத காரியமாகும். உண்மையில இவர்கள் கூறும் "பல்கலைக்கழகங்கள்" எல்லாம் வெளிநாட்டில் உள்ளவை. அவற்றில் எவை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) வின் அங்கீகாரமோ பெற்றவை? அல்லது IESL அங்கீகரிக்கும் பாட நெறிகளை நடத்துபவை? கணிய அளவீடும் இவ்வாறானதே.

சரியான அங்கீகாரம் இல்லாவிடில் தொழில் வாய்ப்பு மிகமிகக் கடினம் என்பது சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பதில்லை. முக்கியமாக அரச துறைகளில் வேலையே கிடைக்காது. படிக்கிற அந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் ஒழுங்காகப் படித்து ஏதோ அறிவைப் பெற்றிருந்தால் தனியார் துறைகளில் கஷ்டப்பட்டு வேலை வாய்ப்பைத் தேடி அதில் நின்று நிலைக்கலாம். ஆனால் மிக முக்கியமானது என்னவெனில் பரீட்சைகள் என்பதே இல்லாத இந்த முறையில் ஒழுங்காகக் கற்பவர் எத்தனை பேர்?. ஒப்படைகள் என்று செல்லப்படுபவற்றை ஏதோ ஒப்புக்குக் கொடுத்துவிட்டு கற்கைநெறியைப் பூர்த்தி செய்வதுதான் நடைமுறை. இப்படி எடுக்கும் சான்றிதழை ஆசைக்கு மட்டும்தான் பயன்படுத்தலாம்.

மாறாக, பயிலும் காலத்தில் கவனமெடுத்துப் படித்தால் அறிவு கிடைக்கும். அதனால் குறைந்தபட்சம் தொழில்நுட்ப அலுவலர்கள் மட்டத்திலாவது தனியார்துறையில் வேலை தேட முடியும். மாணவர்கள் இப்படி அறிவைப் பெற்றுக் கொள்ள முயற்சிப்பது ஒருபுறம் இருக்கட்டும். அந்த நிறுவனங்களாவது மாணவர்களுக்கு அறிவைக் கொடுக்க முயற்சிக்கின்றனவா என்றால், அதுதான் இல்லை. கல்வித் தரத்தைப் பேணுவதைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்தால் எங்கே தமது வியாபாரம் படுத்துவிடுமோ என அவர்கள் கவலைப்படுகிறார்கள்.

கண்டிப்பையோ கல்வித் தரத்தையோ பேணாத இந்தக் கல்வி நிறுவனங்கள் வெறும் கவர்ச்சிகளை மட்டுமே காட்டுகின்றன. இதனிடையே அவற்றுக்கிடையே போட்டி வேறு. குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள் - ஆனால் ஆய்வுகூட வசதிகள் இல்லை, சுற்றுலாக்கள், ஒன்று கூடல்கள் என்று மாணவர்களை ஈர்க்கின்றன. அண்மையில் ஒரு நிறுவனம் தென்னிந்திய திரைப்பட நடிகர்களை அழைத்து மாணவர்களின் அறிவை(?) வளர்த்ததாக அறியமுடிகிறது. இதில் முக்கிய விடயம் என்னவெனில் யாழ்ப்பாணத்தில் இந்தக் கல்வி / பட்ட விற்பனையில் ஈடுபடும் நிறுவனங்கள் யாவுமே வெளியூர் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களே. ஒரு விதத்தில் பார்த்தால், இங்கு கடை விரித்திருக்கும் நிதி நிறுவனங்களைப் போன்றவையே இவையும். இவர்களின் விற்பனைப் பண்டமாகத் திகழ்வது "பட்டம்". இவர்களுக்குத் தம் வியாபாரமும் வருமானமும் பெரிதே தவிர, எம் பிள்ளைகளின் ஒழுக்கமோ கல்வித்தரமோ, இந்த மண்ணின் எதிர்காலமோ அல்ல.

உண்மையில் இப்படியான தனியார் கல்வி நிறுவனங்களின் தேவை சில ஆண்டுகளுக்கு முன்னர் ஓரளவு இருந்தது. அப்போது பொறியியல்சார் கற்கைகள் அரசினர் தொழில்நுட்பக் கல்லூரியில் மட்டுமே பயிற்றப்பட்டன. ஓரளவுக்கு திறந்த பல்கலைக்கழகம், பயிலுநர் சபை போன்றவையும் பல கஷ்டங்களுக்கு மத்தியில் செயற்பட்டன. ஆனால், இன்று நிலைமை அவ்வாறில்லை. மேற்குறிப்பிட்ட மூன்றும் முழுவீச்சுடன் செயற்படும் அதேவேளையில், கூடுதலாக உயர்தொழில்நுட்ப நிறுவனம், பல்கலைக்கழகக் கல்லூரி என்பனவும் திறம்பட இயங்கத் தொடங்கியுள்ளன. இது எமது மண்ணுக்கும் மாணவர்களுக்கும் கிடைத்த மிகப்பெரிய நல்வாய்ப்பு. இவற்றை நாம் பயன்படுத்திக்கொள்வதே அறிவுடைமை. துன்பகரமான விடயம் என்னவெனில் இந்த அரசு நிறுவனங்களின்பால் எமது மாணவர்கள் கவனம் செலுத்தாமல் இருக்கையில் இவற்றில் இணைந்து பயன்பெறுவோர் பெரும்பாலும் வெளி மாகாணங்களைச் சேர்ந்தவர்களே என்பதுதான்.

இந்த விடயத்தில் மாணவர்கள் மற்றும் பெற்றோரின் கவனத்தை ஈர்க்க, ஓரிரு மாதங்கள் முன்பு இந்த அரசு நிறுவனத்தினர் பலர் கலந்து கொண்டு விளக்கமளித்த கருத்தரங்கு ஒன்றும் இடம்பெற்றது. ஆனால் இதன் பிறகும்கூட மாணவர்கள் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. 'சுகமாகச் செய்து முடிக்கலாம்' என்ற மனப்பான்மை இந்தக் கவர்ச்சிகளை நாட வைக்கின்றது. அறிவும், தரமும் இலகுவில் பெற்றுக்கொள்ளக் கூடியவையல்ல என்பதையும் அர்ப்பணிப்பு, கற்றல் மற்றும் பயிற்சிகள் மூலமே அடையக்கூடியது. இதற்குக் குறுக்கு வழியோ? இலகு வழியோ? இல்லை.

இன்னுமொரு முக்கியமான விடயத்தையும் கவனத்தில் கொள்ளவேண்டும். அது என்னவெனில் மேற்சொன்ன அரச கல்வி நிறுவனங்களின் கற்கை நெறிகள் முற்றுமுழுதான அரசுத்துறை / தனியார்துறை/ வெளிநாட்டு அங்கீகாரங்கள் கொண்டவை என்பதோடு அவற்றுக்கான கல்விக் கட்டணம் எதுவுமில்லை. மாறாக தனியார் நிறுவனங்களில் பல இலட்சக் கணக்கில் காசைக் கட்டிக் காண்பது பூச்சியம். இலவசமாகக் கிடைக்கும் பழத்தைப் புறக்கணித்து விட்டு பணத்தைக் கொடுத்து வெம்பல் பழத்தை வாங்குபவர்களாக நாம் இருந்துவிடக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CMYK

# கடந்தவார சமூக இணையத் தரவரிசை

## 1 ஒரே இரவில் ஒபாமா ஆன செல்லூர் ராஜூ



ஒரே இரவில் பிரபலம் ஆக வேண்டும் என்பது அனைவருக்கும் கனவு. ஆனால் இது நடக்குமா? நடக்கும் என்று நிரூபித்துக் காட்டியிருக்கிறார் தமிழர் ஒருவர். அவர் வேறு யாருமல்ல தமிழகத்தின் கூட்டுறவுத்துறை அமைச்சர் செல்லூர் ராஜூ.

வைகை அணையின் வெப்பத்தால் நீர் ஆவியாகாது தடுக்கும் நோக்கில் றெஜிபோம் மட்டைகளை இணைத்து ஆற்றில் விட்டிருக்கிறார் அமைச்சர். இதற்காக 10 இலட்சம் இந்திய ரூபாவை வாரிக் கொடுத்திருக்கிறார்கள். அமைச்சர் றெஜிபோம் பரப்பிய மறுகணமே அவை கரை ஒதுங்கி விட்டன.

அமைச்சரின் இந்த கூரிய சிந்தனை(?) சமூக வலைத்தளங்களை அதகளப்படுத்தியிருக்கிறது. செல்லூர் ராஜூவை வைத்து மீம்ஸ், ஸ்டேட்டஸ், ஜோக்ஸ் எனப் பலவற்றை தெறிக்க விட்டதுடன். விஞ்ஞானி என்று அடைமொழி வேறு வைத்திருக்கிறார்கள்.

கடந்த வாரம் இவரைப் பற்றி சமூகவலைத்தளத்தில் எழுதாதவர்களே இல்லை எனலாம். எது எப்படியோ ஒரே இரவில் ஒபாமா ஆகியிருக்கிறார் செல்லூர்ராஜூ.

## 2 பெற்றோல் தட்டுப்பாட்டு திணறல்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் வேலை நிறுத்தம் என்ற தகவல் வெளியானதுதான் தாமதம். பெற்றோல் நிலையங்களின் முன் குவிந்து விட்டார்கள் மக்கள். இரவு முதல் கூடிய மக்கள் கூட்டத்தால் பெற்றோல் நிலையங்களுக்கு மூச்சு முட்டியது.

மக்கள் கூட்டத்தால் பெற்றோல் நிலையங்களுக்கு மூச்சு முட்டியது போல், பெற்றோலுக்குத் தட்டுப்பாடு, பெற்றோல் நிலையங்களில் நிரம்பி வழியும் மக்களின் படங்களால் சமூகவலைத்தளங்களுக்கு மூச்சு முட்டியது.

பெற்றோலுக்கு காத்திருந்த பலரும் ஒரு கையில் கானும் மற்றக் கையில் போனுமாக நின்று தகவல்களையும் படங்களையும் சமூகவலைத்தளங்களில் பதிவேற்றிக் கொண்டிருந்தனர். இந்தத் தருணத்தையும் சிலர் செல்பி எடுத்து பகிரவும் தவறவில்லை. இந்த ரணகளத்திலும் ஒரு கிளுகிளுப்பு கேட்கிதாம் அவர்களுக்கு.




## 3 பாரிசவாதக் காந்தி

முல்லைத்தீவில் சிக்குன்குனியா பண்டாரவன்னியன் சிலை சர்ச்சை இப்போதுதான் ஓய்ந்திருக்கிறது. இந்த நிலையில் பாரிசவாத காந்தியின் சிலை சர்ச்சை எழுந்திருக்கிறது. பண்டாரவன்னியன் சிலை சர்ச்சை எழுந்த அதே முல்லைத்தீவு மண்ணிலேயே இந்த சர்ச்சையும் எழுந்துள்ளது.



காந்தியின் கால்கள் வேறு வேறு பக்கமாகவும் கைககள் இரண்டும் வேறு வேறு அளவிலும் காந்தியின் வாய் ஒரு பக்கம் இழுபட்டதாகவும் இருக்கும். அந்தச் சிலையின் கலையம்சம் அனைவராலும் விமர்சிக்கப்பட்டு வருகிறது.

இதே சிலைதான் திறக்கப்படும் எனத் தெரிந்திருந்தால் அதை உடைக்காமலே விட்டிருக்கலாம் என்ற குரல்களும் ஒலிக்காமல் இல்லை.

## • சுவரில் கொய்தவை •

**Pirashanth Kamalanathan**

5 mins •

பல ஆண்டுகளாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விஞ்ஞான விதிகள், கோட்பாடுகள், கருத்துக்களை பொய்யென சில இந்திய விஞ்ஞானிகள் நிறுவியிருக்கின்றனர். அந்த விஞ்ஞான விதிகளும் விஞ்ஞானிகளும்.

- புவியீர்ப்பு விசை

"சிங்கம்" சூர்யா, வில்லன்களை ஆகாயத்தில் பறக்க விட்டு புவியீர்ப்பு விசை இல்லையென நிரூபித்துக் காட்டியிருக்கின்றார்.

- சார்பு வேகம்

"தொடரி" தனுஷ், 120 கிலோ மீற்றர் வேகத்தில் ஓடும் ரயில் மீது எதிர்திசையில் அசால்டாக ஓடி சார்பு வேகம் தொடர்பான அத்தனை கருத்துக்களையும் தவிடு பொடியாக்கியிருக்கின்றார்.

- மிதப்பு விதிகள்

விதியின் பெயரை வாசிக்கும் போதே யாரென்று புரிந்தி ருக்கும். "சுறா" விஜய், ஒரேயொரு நீச்சல் மூலம் மிதப்பு விதிகள், ஆர்க்கி மிடிஸ் தத்துவம் என்றனைத்தையும் பொய்யாக்கி யிருக்கின்றார்.

- மின்னோட்ட விதிகள்

சொல்லித்தான் தெரிய வேண்டுமென்றில்லை. "நரசிம்மா" விஜயகாந்த், கரண்ட்டுக்கே ஷாக் அடிக்க வைத்து ஓமின் விதி, கிர்ச்சாஃபின் (Kirchhoff) விதிகள், ஏனைய மின்னோட்ட விதிகள் அனைத்தையும் அடித்து துவைத்து காயப்போட்டு விட்டிருக்கின்றார்.

- பெர்னௌலி (Bernoulli) சமன்பாடு

"ஆம்பள" விஷால், ஹெலிகொப்டர் பறப்பதற்கு அடிப்படையான சமன்பாடென அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெர்னௌலி சமன்பாட்டை தம்மாத்துண்டு ஜீப்பை வைத்து அடித்து விரட்டியிருக்கின்றார்.

- இயக்கவியல் விதிகள்


"வேதாளம்" அஜித், "தெறிக்க விடலாமா!" என்று தொடங்கும் ஃபைட் சீனில் நியூட்டனின் இயக்க விதிகள், உந்தக் காப்பு விதி, மொத்தல் விதிகள் என்றனைத்தையும் தெறிக்க விட்டிருக்கின்றார்.








### இந்தவார மீம் (Meme)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 492 7470
விளம்பரம் : 021 492 7466

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com

## ஹர்த்தாலோடு கோபித்த அக்ஷய திருதியை


எல்லாவற்றுக்கும் ஓர் எல்லை தெரிந்தால் தான் பயணம் வசப்படும். எல்லை தெரியாப் பயணமென்பது கொடுந்தண்டனை. எங்கே முடியும், எப்போது எல்லையை அடைவது, முடிவை நெருங்க இன்னும் எவ்வளவு பயணிக்க வேண்டும், எந்தப் பாதையால் போக வேண்டும், என்னென்ன இடர்களைச் சந்திக்க வேண்டும் என்பதெல்லாம் இந்த எல்லை தெரியாப் பயணங்களில் கட்டாயம் அனுபவிக்க வேண்டிய துயரங்கள். இலங்கையில் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டங்களும் இத்தகைய எல்லை தெரியாப் பயணங்களே. யாரிடம் சென்றால் நீதி கிடைக்கும் என இவர்களுக்குத் தெரியாது. எப்போது தங்கள் போராட்டத்துக்கு முடிவு என்றும் அவர்கள் அறிந்திருக்கப்போவதில்லை. இவ்வளவு ஏன், தங்கள் உறவுகள் உயிரோடு இருக்கிறார்களா? இல்லையா என்பது கூட இந்த ஏதிலிகளுக்கு தெரியவே தெரியாது. அவர்களுக்கு தெரிந்ததெல்லாம் தங்கள் உறவுகளை மீட்க குரல் கொடுப்பதும், போராடுவதும்தான்.

ஆரம்பத்தில் எப்போதாவது இருந்துவிட்டு போராட்டக் களத்தில் குதிக்கும் காணாமலாக்கப்பட்டோரின் பெற்றோர் இப்போது தொடர்ச்சியாக நீதி கிடைக்கும் வரை வீடு, வாசல், பசி, தூக்கம் எல்லாவற்றையும் மறந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். புராணக் கதைகளில் அடைய முடியாத ஏதாவது இலக்கு ஒன்றை அடைய விரும்புபவர்கள் வீடு, வாசல், குடும்பம், பசி, தூக்கம் எல்லாவற்றையும் உதறித்தள்ளிவிட்டு, காட்டுக்குச் சென்று தவம் செய்வார்கள். அவர்களின் தவத்தின் வலிமையைக் கண்டு கடவுளர்கள் மனமிரங்கி, அவர்கள் கேட்கும் வரத்தைக் கொடுப்பார்கள். கிட்டத்தட்ட அதேபோன்ற தவத்தினைத்தான் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஊனின்றி, உறக்கமின்றி, எல்லாவற்றையும் துறந்து தமது உறவுகள் நிலையை அறிதலை மட்டுமே ஒரே இலக்காகக் கொண்டு, கண்ணீரால் ஒரு வேள்வியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த வேள்விக்கு கொஞ்சம் பலம் சேர்க்கும் வகையில்தான் கடந்த வியாழக்கிழமை வடக்கு - கிழக்கு பகுதிகளில் ஹர்த்தால் அனுஷ்டிக்க கோரிக்கை விடுக்கப்பட்டது. "வழக்கமாக அவர்கள் ஆதரித்தால் நாங்கள் எதிர்ப்பு" என்ற கொள்கையுடைய அரசியல் கட்சிகள் , ஊடகங்கள் என்பன கூட இந்தக் ஹர்த்தாலுக்காக ஒரேகுரலில் அழைப்பு விடுத்திருந்தன. மக்களும் இந்த அழைப்பின் பின்னாலுள்ள நியாயத்தை உணர்ந்து, ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவை வழங்கினர். ஆனால் வர்த்தகர்களில் ஒரு பகுதியினர்தான் இந்தக் ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்கப் பின்னடித்துள்ளார்கள். அதற்கு அவர்கள் சொன்ன காரணம் இன்னும் விநோதமானது. "அக்ஷய திருதியை காலம் என்பதால் எமது வியாபாரம் பாதிக்கும்" என்பதே அவர்களின் வாதம். இந்த அக்ஷயத் திருதியை என்பது மிகச் சில வருடங்களுக்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட ஒன்று. 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர்வரை இந்த அக்ஷய திருதியை இலங்கையின் தமிழர் பகுதிகளில் சிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்தியாவில்தான் இது நடைமுறையில் இருந்தது. அதுவும் நகைக்கடைக்காரர்கள் தங்கள் விற்பனையை அதிகரிக்கச் செய்யும் நோக்கோடு சாதாரண ஒரு பண்டிகையை "அக்ஷய திருதியையில் பொன் வாங்கினால் பிறகு வீட்டில் தங்க மழை கொட்டும்" என்று பிரமாண்டமாக விளம்பரப்படுத்த, அதற்கு எடுபட்ட எம்மவர்கள் காலப்போக்கில் அதை இங்கும் இறக்குமதி செய்து கொண்டாடத் தொடங்கிவிட்டார்கள். அக்ஷய திருதியையில் தங்கம் வாங்கினால் அது வற்றாத தங்க நதியை வீட்டில் பெருக்கெடுக்க வைக்கும் என்பது உண்மையெனில் இப்போது இந்தியாவில் இருந்தும், இலங்கையின் வடக்கு - கிழக்கில் இருந்தும் வெளிநாடுகளுக்கு கப்பல் கப்பலாக தங்கத்தை ஏற்றுமதி செய்து கொண்டிருப்போம்.

மக்களின் மூடநம்பிக்கைகளை மூலதனமாக்கி, பணம் பார்க்க நினைப்பவர்கள், கொஞ்சமேனும் கண்ணீரோடு முடிவின்றி அலையும் காணாமலாக்கப்பட்டோரின் வலிகளைப் புரிந்து கொண்டிருந்தால் இப்படி ஹர்த்தாலுக்கு ஒத்துழைப்புக் கொடுக்க பிகு பண்ணியிருக்க மாட்டார்கள். மனிதர்களை விடவும் பண்டிகைகளும், பணமுமே பெரிதாகிக் கொண்டிருக்கும் காலத்தில் இதெல்லாம் சகஜமே.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



# சிங்காரக் கொண்டையும் கீழிறங்கும் கல்வித்தரமும்

**வர்சி**

*2016 ஆம் ஆண்டுக்கான சாதாரணதரப் பெறுபேறுகள் வந்தவுடன் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பலரும் ஆனந்தத்தில் துள்ளிக் குதித்தார்கள். ஏனெனில் கடந்த சில வருடங்களில் இல்லாதளவுக்கு ஏராளமான மாணவர்கள் 9 ஏ சித்திகளைப் பெற்றிருந்தார்கள். இதன் மூலம் மீண்டும் கல்வித்துறையில் வடக்கு மாகாணம் தலையெடுக்கத் தொடங்கிவிட்டதாக புளகாங்கிதம் அடைந்தோர் பலர். ஆனால் சிங்காரக் கொண்டைக்காரிக்கு உள்ளே ஈரும் பேனும் போல, அதிக 9 ஏ சித்திகளை மாணவர்கள் பெற்றுக்கொண்ட போதும், ஒப்பீட்டளவில் தமிழர்களின் தாயகப் பகுதியான வடக்கு-கிழக்கு மாகாணங்கள் ஏனைய மாகாணங்களை விடவும் இந்த வருடம் இன்னும் கீழ்நிலைக்கு சென்றுள்ளதுதான் யதார்த்தமாக இருக்கிறது. போருக்குப் பின்னால் ஒரு சமூகத்தை நிலை நிறுத்த வேண்டிய பொறுப்புக்களில் கவனம் செலுத்தாதன் விளைவைப் படிப்படியாக உணரத்தொடங்கியிருக்கிறோம். கலை, கலாசாரம், பண்பாடு என்ற வகையில் தரமிழந்து போய்க் கொண்டிருந்தோம். தற்போது கல்விச் செயற்பாடுகளிலும் தரம் குறைந்தவர்கள் என்று உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறோம். சகல துறைகளிலும் அதிக கவனம் தேவைப்படுகின்றது. அது மட்டுமல்லாது எல்லாத் துறைகளிலும் தொடக்கத்திலிருந்தே செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டியவர்களாக இருப்பதையும் ஆய்வாளர்கள் உறுதிப்படுத்தியிருக்கின்றனர்.*

*அண்மையில் வெளியான சாதாரணத்தேர்வுப் பெறுபேறுகளின் அடிப்படையும் அந்த ஆய்வுகளை உறுதிப்படுத்தியிருக்கின்றது. அதிகளவான 9 ஏ சித்திகளை வடக்கு மாகாணம் பெற்றுக் கொண்டாலும், நாடளாவிய ரீதியில் வடக்கு மாகாணம் 8 ஆவது இடத்தையும், கிழக்கு மாகாணம் 9 ஆவது இடத்தையும் பெற்றுப் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன. பெறுபேறு கிடைக்கப்பெற்ற பின்பு, மாணவர்களின் தேர்ச்சி வீதத்தின் அடிப்படையில் முதல் 25 இடங்களைப்பிடித்த கல்வி வலயங்களைப் பட்டியலிடுவதுண்டு. அத்தகைய பட்டியலிலும் வடக்கு மாகாணத்தில் எந்தவொரு கல்வி வலயமும் இடம் பெற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதே போன்று கடந்த 2015ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரத் தேர்விலும் வடக்கு மாகாணத்தின் எந்தவொரு கல்வி வலயமும் முதல் 25 இடங்களுக்குள் இடம்பெற்றிருக்க வில்லை என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.*

*எந்தத் துறையிலாயினும் நாம் முன்னணியில் இல்லை. அப்படியாயின் எதை எண்ணி நாம் பெருமைப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம்? பெரும்பாலான குடும்பங்களில் கல்வி தொடர்பான செயற்பாடுகள் காலை 5மணிக்கு முன்பதாகவே ஆரம்பித்துவிடுகின்றன. விடுமுறைகள் கூடக் கிடையாது. முழுக் குடும்பமுமே கல்வி என்ற அந்த இலக்கை நோக்கிப் பயணிக்க வேண்டியவர்களாக குடும்பக் கட்டமைப்பை உருவாக்கியிருக்கிறோம். ஓய்வொழிச்சல் இல்லாது பிள்ளைகளின் கல்விக்குப் பின்னால் ஓடுகின்றவர்களாகப் பெற்றோர் இருக்கின்றனர்.*

*கடந்த வருடம் சாதாரணதரத் தேர்வு மட்டத்தில் பின்னடைவை சந்தித்திருக்கிறோம் என்றால், அடுத்தவருடத்துக்கான பெறுபேற்றை மேம்படுத்த துரித நடவடிக்கையை எடுத்திருக்க வேண்டும். இது கல்விசார் துறையிலுள்ள அத்தனை பேர்களின் கடமை என்பது அனைவரும் அறிந்த விடயம். முக்கியமாக வடக்கின் கல்வியமைச்சர் மற்றும் அவரின் கீழான அதிகாரிகள் விரைந்து செயற்பட்டிருக்க வேண்டும். பெறுபேறுகள் வெளிவந்தவுடன் "பனர்" போட்டுக் கொண்டாடும் கல்வி வியாபார நிறுவனங்களாயினும் சரி ஒரு சமூகப்பொறுப்பென்ற விடயத்தில் இதில் அக்கறை செலுத்தியிருக்கலாம். ஏனெனில் அவர்கள்தானே கல்வியின் மூலம் பல லட்சங்களைச் சம்பாதிப்பவர்கள். மொத் தத்தில் எல்லோரும் இது விடயத்தில் அக்கறை யற்றவர்களாக இருக்கிறோம் என்பது தெளிவாகிறது.*

*2015 பெறுபேறுகளைக் கண்டவுடன் நாம் விழிப்படைந்திருக்க வேண்டும். அப்படி விழிப்படைந்திருந்தால் இந்த வருடம் நாம் முன்னேற்றம் கண்டிருக்க வேண்டும். தொடர்ந்து பெறுபேற்றில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதென்றால் எங்கே பிழை உள்ளது? அப்படியென்றால் தவறு எங்கே உள்ளது? மாணவர்களின் ஆர்வம் குறைவடைந்துள்ளதா? அல்லது ஆசிரியர் மாணவர்களுக்கு முழு மனதுடன் கற்பித்தலில் ஈடுபடவில்லையா? அல்லது கல்வி அதிகாரிகள் இந்த விடயத்தில் அக்கறை கொள்ளாமல் இருக்கின்றார்களா என்ற இன்னோரன்ன கேள்விகள் இயல்பாகவே எழுகின்றன.*

*நாம் கல்வியில் கொண்டிருந்த ஈடுபாடே தமிழர்களுக்கான தேசிய விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கும் காரணமாக இருந்திருக்கிறது. கல்வியில் சிறப்பாக படித்த தமிழர்கள் பல்கலைக்கழகங்களையும், அரசபணிகளையும் கூடுதலாக ஆக்கிரமிக்கின்றனர் எனக் கருதியதால்தானே, அரசாங்கம் தரப்படுத்தலை கொண்டு வந்தது. தமிழர் தமது உரிமைக்கான போராட்டங்களைப் பல வழிகளிலும் நடத்தி வந்தாலும் கல்வியில் நீதி மறுக்கப்பட்டபோது தான் போராட்டம் பெரியளவில் வெடிக்கத் தொடங்கியது.*

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K



# பவுணன்

■ சிக்மலிங்கம் றெஜினோல்ட்

பவுணுக்கு வேட்டையையும் வெள்ளாமையையும் தவிர, வேறு எதுவுமே தெரியாது. இந்த நாற்பத்தியாறு வயசில் அவன் வேறு எதையும் பழகவில்லை. அதுக்கு அவசியமும் இருக்கேல்லை.

வெள்ளாமை செய்யிறதுக்கு அப்புவின் காணிகள் இருந்தன. தண்ணீரூற்றில் மூன்று போகமும் விளையும் வயல். கற்பூரப்புல் வெளியில் ஒரு இரண்டு ஏக்கர் நிலம். குமுழமுனையில் அம்மா வழி உரித்தான வெட்டுக்காட்டுப்பிலவு. அதில் ஆண்டுக்கு ஒரு போகம்தான் விளைக்கலாம். என்றாலும் ஏக்கருக்கு இருபது மூடை அடிக்கும்.

போதாதென்று பிறகு ஒட்டுசுட்டானுக்கு அருகே கருவேலங்கண்டல் பக்கமாக கூட்டாளிகளுடன் ஒரு நாலு ஏக்கர் அளவில் காடு வெட்டிப் புலவாக்கியிருந்தான்.

பவுண் பெரிய கமக்காரன் இல்லையென்றாலும் ஒரு ஏழு எட்டு ஏக்கர் விதைப்பான். சில காலம் நிலைமையை, வசதியைப் பொறுத்து, வேறு காணிகள் வசதியாக அமைந்தால் இன்னுமொரு இரண்டோ மூன்று கூடுதலாகச் செய்வான். அதுக்கு மேல் அவன் ஆசைப்படுவது கிடையாது. வயல் விதைப்பைத் தவிர பவுணுக்குப் பிடித்தமான தொழில் அல்லது பொழுது போக்கு வேட்டை. பத்துப் பன்னிரண்டு வயதிலேயே பழகிய தொழில் அது. அதில் அவன் வலு விண்ணன்.

பவுணின் வீட்டில் காட்டிறைச்சி வேகாத நாள்களே இல்லை. காட்டுக்கோழி, உக்கிளான், முள்ளம்பன்றி, மான், மரை, மரஅணில், கூழைக்கிடா, உடும்பு, பன்றி, முயல், நாவி என்று ஏதாவது ஒன்று வேகும். மறந்தும் காட்டெருமையையோ மாட்டையோ அவன் சுடுவதோ கறிக்காகத் தொடுவதோ இல்லை.

வெள்ளி, செவ்வாய் என்ற பேதமெல்லாம் அவனுக்குக் கிடையாது. ஆனால், பொங்கல், திருவிழாக்காலங்களில் அவன் துவக்கே தூக்கமாட்டான். காட்டில் இறங்குவதுமில்லை. அவனிடம் பெல்ஜியம் 304 - 10 ஆம் நம்பர் சொட்கண் இருந்தது. அது அவனுடைய விருப்பங்களை எல்லாம் நிறைவேற்றியது. ஊருக்குள் 'வேட்டைப்பவுண்' என்று அவனுக்கென்றொரு பேரையும் பெற்றுக் கொடுத்தது. சொட்கண்ணைத் தவிர 'இடியன்' துவக்கொன்றையும் கம்மாலைப் பயில்வானுடன் சேர்ந்து செய்து வைத்திருந்தான்.

இவ்வளவும் போதும் அவனுக்கு. உலகம் ஆனந்தமானது. அவனுடைய காலடியில் காடும் கையில் வானமுமிருந்தன. உலகத்தின் பெருங்கோடீஸ்வரர்கள், செல்வந்தர்களைப் பற்றியெல்லாம் அவன் கவலைப்பட்டது கிடையாது.

வற்றாப்பளை அம்மன் கோவில் பொங்கலில், காட்டா விநாயகர் கோவில், ஒட்டுசுட்டான் சிவன் கோவில், தண்ணீரூற்றுப் பிள்ளையார் கோவில், முள்ளியவளைக் கல்யாண வேலவர் கோவில் திருவிழாக்களில் செலவழிக்கக் காசிருக்க வேணும். குமுழமுனையிலோ, முள்ளியவளையிலோ வற்றாப்பளையிலோ ஆண்டு தோறும் ஆடுகின்ற கூத்துகளுக்கு கொடுக்கக்கூடிய மாதிரியும் கையிலையோ மடியிலையோ கொஞ்சம் இருக்கோணும். ஊருக்குள்ளும் சொந்த பந்தங்களுக்குள்ளும் வருகிற நன்மை தீமைகளுக்குப் போகக்கூடிய அளவுக்கும் கொடுத்து மாறக்கூடிய மாதிரியும் கையில ஏதாவது இருந்தால் போதும்.

இதைத்தவிர, பிள்ளைகளுக்கும் மனுசிக்கும் உடுபுடைவைகள். கழுத்திலையோ கையிலையோ போடக்கூடிய அளவுக்கு நகை. அவர்களுடைய விருப்பம் எப்படியோ ஆண்டுக்காண்டு வேறுபட்டுக் கொண்டே இருக்கும். அதுவும் பொங்கல், திருவிழாக்காலங்களில் இந்த விருப்பங்களும் தெரிவுகளும் இன்னும் கூடும். கூடவே வருசத்துக்கு இரண்டு நூல் புடைவையும் தைப்பொங்கல், சித்திரை வருசம், தீபாவளி என்று வரும் காலங்களில் கையில் கொஞ்சக்காசும் அம்மாவுக்குக் கொடுக்க வேணும். இதையெல்லாம் சமாளித்தால் எல்லாமே சரியாகி விடும்.

சாப்பாட்டுக்குக் குறைவில்லை. வீட்டில் போதியளவவு நெல்லுண்டு. பாலுக்கும் தயிருக்குமாக மாடுகள் நிற்கின்றன. வயல் வேலைக்கு முதலில் மாடுகளையும், வண்டிலையும் வைத்திருந்தான். பிறகு அவை தோதாக இல்லை என்று கொஞ்சக் காலம் அதையெல்லாம் விற்றுப் போட்டு, பெத்தப்பாவின் மெசினை (உழவு இயந்திரத்தைப்) பிடிச்சு வயல் வேலைகளைச் செய்தான்.

ஆனால், வன்னியில் போர் பெருத்து, மண்ணெண்ணெய், டீசல், பெற்றோல் எல்லாத்தையும் அரசாங்கம் தடுக்கத் தொடங்கியபோது மீண்டும் பட்டிமாடுகளையே பழக்கினான். இரண்டு சோடி எருத்தன்கள் (காளைகள்). நின்றாலும் அழகு நிமிர்ந்தாலும் அழகு என்று துடித்துக்கொண்டு நின்றன நான்கும்.

அவனுக்கு [illegible] என்ன செய்யலாம். அமாவாசையில் எதைச் செய்யலாம். அட்டமி, நவமி நாள்களில் எது வாலாயப்படும். பனிக்காலம் காற்றுக்காலம், மழைக்காலம் எல்லாத்திலும் எது வாய்க்கும் என்றெல்லாம் தெரியும். மழையையும் வெயிலையும் அவனுடைய உடலும் மனமும் நன்றாகவே அறிந்து வைத்திருந்தன.

காட்டுப் பூக்களின் வாசம் அத்துபடி. பங்கிராயின் வாசனை, மாதங்கியின் மணம், கொண்டலின் வாசம்... எல்லாம் அறிவான். இன்ன போகத்துக்கு இன்ன வாசனை, இந்தப் போகத்தில் இந்த மரங்கள் பழுக்கும், இந்தக் காலத்தில் இது பூக்கும் என. வைகாசியில் பாலை என்றால், ஆடியில் வீரை, ஆவணியில் நாவல், புரட்டாசியில் துவரை, ஐப்பசியில் கரும்பை.. என்று. இந்தக் காலத்தில் இன்ன பறவைகள்தான் சிறகடிக்கும். இவை முட்டையிடும் என்று. காட்டிலும் வயலிலும் மண்ணின் இதமும் தகிப்பும் தண்மையும் எல்லாம் அவனறிந்தவை.

போர் வந்தபோதும் அவன் பத்திரமாகவே இருந்தான். இந்தியன் ஆமிக்காலத்தில் கொஞ்சம் கூடுதலாகக் கஷ்டப்பட்டதைத்தவிர பிறகெல்லாம் அந்தளவுக்கு கஷ்டங்களிருக்கவில்லை. ஆனால், போர்க்காலத்தில் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. எல்லாமே விலை. பொருள்கள் உள்ளே வருவது தடைப்பட்டால் பொருள்களின் விலைக்கு ஏணி வைக்கத்தேவையில்லை. தானாகவே ஏறிவிடும். அதனால், அதைச் சமாளிப்பதற்காக இரவு பகல் பாராமல் உழைத்தான்.

ஊரோடு ஒத்து, இயக்கத்துக்கும் உதவினான். அப்படியிருக்கும்போதே பவுணுடைய மூத்த மகன் இயக்கத்துக்குப் போனான். அது பவுணுக்கு முதலில் கொஞ்சம் கவலையே. தலைப்பிள்ளையல்லவா! கைக்கு உதவியாக இருக்கும் என்று அதிகம் நம்பியிருந்தவன். இப்பிடித் திடீரென்று தன்னைவிட்டு, இயக்கத்துக்குப் போய்விட்டால்....! அவனால் எப்படி அதைத் தாங்கிக் கொள்ளமுடியும்?

பவுணின் தம்பி ஒருத்தன் இயக்கத்துக்குப் போய், இந்தியன் ஆமிக்காலத்தில காலில் காயப்பட்டு சிகிச்சை பயனளிக்காமல் இறந்தான். மனைவியின் தங்கை ஒருத்தியும் இயக்கத்தில் இருக்கிறாள். இப்ப மகனும் போயிருக்கிறான் என்று பவுணுக்குக் கவலை. பவுணைவிட அவனுடைய மனைவி ஒப்பாரி வைத்தே அழுதாள். இப்படி ஒரு குடும்பத்திலிருக்கும் உழைக்கும் வயதிலுள்ளவர்கள் மூன்று நான்கு பேர் என்று இயக்கத்திற்குப்போனால குடும்பத்துக்காக உழைப்பது யார்? வீட்டுக்கு வருமானம் எப்பிடி வரும்? எப்படி அந்தக் குடும்பத்தின் பாரத்தைத் தனியே ஒருவரால் சுமக்க இயலும்?

"சில குடும்பத்தில ஆருமே இயக்கத்தில இல்லாமல் எப்பிடியோ சுழிச்சுக் கொண்டு தங்கட காரியத்தைப் பாத்துக் கொண்டு போறாங்களே" [illegible] நினைத்திருக்கிறான்.

அவங்கள்தான் இயக்கத்தோடயும் பரவாயில்லாமல்தான் இருக்கிறாங்கள். வெளியில வவுனியாவுக்கோ, கொழும்புக்கோ கூட அவங்களாலைதான் சுகமாகப் போய் வரக்கூடியதாக இருக்கு. ஆனால், பவுண் வவுனியாவுக்குப் போகவே பல சந்தர்ப்பங்களில தயங்கினான். இயக்கக் குடும்பம் என்று வவுனியாவில் தலையை எடுப்பார்கள்.

பவுண் தன்ரை இந்த வயதுக் காலத்தில் ஆடிப்போனது 2007, 2009 இறுதிக்காலப்பகுதியில்தான். சண்டை முற்றி, தொண்டையை இறுக்கியது. அவனால் எதுவுமே செய்ய முடியவில்லை. அவன் மட்டுமா அப்படித் தவித்தான்? எல்லாருந்தான் தவித்தார்க்ள்.

பவுணுக்கு ஆணும் பெண்ணுமாக ஆறு பிள்ளைகள். இயக்கத்துக்குப் போனவனைத் தவிர மற்ற ஐந்தும் அவனோடிருந்தன. அதை விட மனைவி, அவனுடைய அம்மா, மாமியார் (மனைவியின் தாயார்) என்று மொத்தமாக ஒன்பது பேர். போர்க்காலத்தில் அளவுக்கதிகமான எல்லாமே சுமைதான். இந்தச் சுமையைக் குறைப்பதற்கோ அல்லது இன்னும் சுமையைக் கூட்டுவதற்கோ தெரியாது, அவனுடைய இரண்டாவது பிள்ளையையும் (பெண்) போருக்கு என்று சேர்த்துக் கொண்டார்கள்.

போர் முற்றி, விரிந்து கொண்டேயிருந்தது. சனங்கள் ஒவ்வொரு இடங்களிலிருந்தும் இடம் பெயர்ந்து கொண்டேயிருந்தார்கள். அவனுடைய குமுழமுனை வயல் பறிபோனது. பிறகு கருவேலங்கண்டல் பிலவு போனது. பவுண் குடும்பத்தோடு முள்ளியவளையில் இருந்து வெளியேறினான். அதுவொரு வெள்ளிக்கிழமை. பொறுத்துப் பொறுத்துப் பார்த்து இனி முடியாது என்ற நிலையில், அன்று காலை வீட்டை விட்டுக் கிளம்பியது குடும்பம்.

'வெள்ளிக்கிழமையில் வீட்டைவிட்டு, ஊரை விட்டுப் போகக் கூடாது' என்று பவுணின் அம்மா சொல்லிக் கவலைப்பட்டுக் கொண்டே வெளியேறினா. அவனுக்கு மட்டும் அப்படிக் கிளம்புவது என்ன விருப்பமா? அல்லது அந்த ஊர்ச்சனங்களுக்குத்தான் அது விருப்பமா? ஊரிலே இருக்க முடியாதென்றால் வேறு என்னதான் செய்ய முடியும்?

வற்றாப்பளை அம்மனைக் கும்பிட்டுக் கொண்டு, காட்டா விநாயகரை, தண்ணீரூற்றுப் பிள்ளையாரை எல்லாம் நினைத்துக் கொண்டு அவர்கள் வெளியேறினார்கள். வடக்கே கேப்பாப்பிலவுப் பக்கமாகப் போய் மாலையில் புதுக்குடியிருப்பைச் சேர்ந்தார்கள்.

வீட்டில் ஏராளம் பொருள்கள் கைவிடப் விடப்பட்டிருந்தன. சாப்பாட்டுக்குத் தேவை என்று ஐந்து மூடை நெல், இன்னும் முக்கியமான பொருள்கள், உடுபுடைவைகள் என்று அத்தியாவசியமானவற்றை மட்டும்தான் பவுண் எடுத்துக் கொண்டான். எல்லாப் பொருள்களையும் ஏற்றிக் கொண்டு போய் ஆற்றையும் வீட்டை வைக்கேலாது. அதையெல்லாம் அங்கையும் வைக்கேலாமல், வீட்டிலையும் வைக்காமல் போற வாற இடமெல்லாம் தொலைக்க முடியாதென்று விட்டான்.

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அந்த 3 நாள்கள்

■ ஆதங்கன்

நடுச்சாமத்தை நெருங்கிக் கொண்டிருந்த இருளின் அமைதி ஒற்றைச் செய்தியால் ஒரே நொடியில் தொலைந்தது.

" இண்டைக்கு இரவில இருந்து இன்னும் மூண்டு நாளைக்கு பெற்றோலியம் கோப்பிரேசன் ஆக்கள் ஸ்ட்ரைக்காம்"

இந்தச் செய்திதான் எல்லோரின் தூக்கத்தையும் பறக்கச் செய்திருந்தது. மூன்று நாள்கள் தொடர் வேலை நிறுத்தத்தில் எரிபொருள் கூட்டுத்தாபனப் பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டால், எரிபொருள் குதங்களில் இருந்து விநியோகம் தடைப்பட்டு விடும். எனவே தற்போது எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருக்கும் பெற்றோல் மட்டுமே பாவனையாளர்களுக்கு மிஞ்சும். ஒருவேளை பணியாளர்களின் கோரிக்கைக்கு அரசு செவிசாய்க்காமல், சுரணை கெட்டு எதுவுமே நடக்காதது போல, காதைக் குடைந்து குடும்பி எடுத்துக் கொண்டிருந்தால் திட்டமிட்டதற்கு மாறாக மூன்று நாளையும் தாண்டி, பாகுபலி-2 இற்கு போட்டியாக வாரக்கணக்கில் 'வேலைநிறுத்தப் போராட்ட' படம் ஓடினால், இலங்கையில் முக்கால்வாசிப்பேர் கால்நடைகளாக மாறிவிட வேண்டியதுதான். எரிபொருளைக் குடித்து விட்டு, குறுக்கும் நெடுக்குமாக ஓடித்திரிந்து கொண்டிருக்கும் இரும்புப் பிராணிகளை பழைய இரும்புக்கு கொடுத்து விட்டு, 'தில்லையம்பல நடராசா'எனப் பாடிப் பாடி நடக்க வேண்டியதுதான்.

இப்படியான தொலைநோக்கு சிந்தனைகள் தாமுண்டு தங்கள் பாடுண்டு என்றிருக்கும் சாதாரணர்களை விடவும், கடைக்காரர்களுக்கு எப்படியோ வந்து தொலைத்து விடுகிறது. இந்த வேலைநிறுத்தத்தின் போதும் அதே தொலைநோக்குச் சிந்தனை அவர்களின் அடிமனதில் இருந்து நீண்ட நாளைக்குப் பிறகு உயிர்த்தெழுந்தது. ஆடின காலும் பாடிய காலும் சும்மாயிருக்குமா?

சில வருடங்களுக்கு முன்னர் வரை போர் அவர்களை வாழ்வாங்கு வாழ வைத்தது. எதுவெல்லாம் மக்களுக்கு அடிப்படையாகத் தேவையோ அவற்றையெல்லாம் மறக்காமல் பதுக்கி தங்கள் இரகசிய வளைகளில் நாலைந்து மடங்கு விலை வைத்து விற்ற புண்ணியவான்களல்லவா. அப்படி போரின் நிழலில் பொருள்களை மறைத்து, மற்றவர்களை உருக்கி, தங்களைக் கொழுக்கச் செய்த பதுக்கல் பூனைகள் மீண்டும் நாவைச் சப்புக் கொட்டியபடி மூலையில் கேட்பாரற்றுக் கிடந்த பரல்களைக் காவிக்கொண்டு 'பெற்றோல் செற்றுக்கு' பாய்ந்தன. சிலநொடிகளிலேயே இரவிலும் விழித்திருக்கும் பெற்றோல் செற்களில் திருவிழாக் கூட்டம். சப்பி எறிந்த சுவிங்கம் போல விநோதமான நெளிவு சுழிவுகள், இடைச்செருகல்கள் என நீளத்துக்கு வரிசைகள் களைகட்டின.

தொட்டனைத்தூறும் மணற்கேணியாக குழாய்கள் வழியே பெற்றோல் வந்து கொண்டிருக்க , ஒரு செக்கன்கூட அந்தக் குழாயின் வாய் மூடி ஓய்வெடுக்க முடியாதபடி சித்திரவதை செய்துகொண்டிருந்தார்கள் கூட்டத்தினர். பெற்றோலைக் கக்குவதும், ஓய்வதும் மீண்டும் கக்குவதுமாக அந்தக் குழாயின் பெற்றோல் வாந்தியெடுப்பு விடிந்த பின்னரும் நீண்டு கொண்டே இருந்தது. அப்படியிருந்தும் வர்த்தகக் கோமகன்களின் ஆசைபரல்கள் நிறையவில்லை. கொள்கலனில் இருக்கும் பெற்றோலை விடவும் அவர்கள் அடுக்கி வைத்திருக்கும் பிளாஸ்ரிக் பரல்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகம். சஞ்சீவி மலையைத் தூக்கி வந்ததைப் போல ஏதேனும் அரபுத்தேசமொன்றின் எண்ணெய்க் கிணற்றை சிந்தாமல் சிதறாமல் அப்படியே அனுமன் தூக்கி வந்தால் தான் அந்த பரல்களையெல்லாம் நிரப்ப முடியும்.

எங்களிடம் ஒரு பழக்கம் இருக்கிறது, நம்மைச் சுற்றியுள்ள சிலர் ஏதேனும் ஒன்றைச் செய்தால் அது என்ன, ஏன் என்றெல்லாம் ஆராயாமல் நாமும் அதையே செய்வது. அந்தப் பழக்கம் எப்படி வந்தது என்று எவருக்குமே தெரியாது. சிலவேளைகளில் நாமெல்லாம் செம்மறியாடுகளாக முற்பிறப்பில் இருந்திருப்போமோ என்னவோ. தொட்டிலில் தொடங்கிய அந்தப் பழக்கம் பெற்றோல் செற் வரை தொடரவே செய்கிறது. ஒரு சொட்டுப் பெற்றோலையும் மிச்சம் விடாமல் வர்த்தக முதலைகள் உறிஞ்சுவதற்காக கூடி நின்றதைக் கண்ட சாதாரணர்களுக்கு அடிவயிற்றில் புளி கரைந்தது. பிடரியில் கால் அடிபட அப்படியே வீட்டுக்கு ஓடிச்சென்றவர்கள், கையில் அகப்பட்ட போத்தலோடும் , வாகனங்களோடும் படையெடுப்பைத் தொடங்கினார்கள். வரிசைகளின் வயிறு வீங்கியது. ஒரு பக்கம் பரல்களில் வியாபார விற்பன்னர்கள் பெற்றோலை உறிஞ்ச, அவர்களுக்கு போட்டியாக சூரியனும் இன்னொரு பக்கமாக பெற்றோலையும், வரிசையில் நிற்பபவர்களின் உடலெங்கும் வழியும் வியர்வையையும் சேர்த்து உறிஞ்சிக் கொண்டிருந்தான். சிலவேளைகளில் சூரியனுக்கும் பதுக்கல்காரர்களின் குணம் வந்துவிட்டது போலும்.

சாதாரணர்கள் அப்படியே நின்று கொண்டிருக்க, வரிசை கணிக்கமுடியாத சமன்பாட்டில் நகர்ந்து கொண்டிருந்தது. எவராலும் எந்தப்பக்கத்தில் நின்றால் பெற்றோல் அடிக்கும் இடத்துக்குச் செல்லும் வரிசையை அடையலாம் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. எந்தவரிசையில் நின்றாலும், இரையை விழுங்கிய சாரைப்பாம்பாக அசைய முடியவில்லை. ஆனால் அவர்களுக்கு பின்னர் வந்த பலரும் ஒலிம்பிக்கில் எடுத்த தங்கப்பதக்கத்தைக் காட்டுவது போல, பெற்றோலால் நிரப்பப்பட்ட பரல்களைக் காட்டியபடி பெருஞ்சிரிப்போடு போய்க் கொண்டிருந்தார்கள். கொஞ்ச நேரத்தில் வரிசைப் பாம்பு வேகமெடுத்தது. இவ்வளவு நேரமும் பரல்கணக்கில் அடித்துக் கொண்டிருந்தவர்கள் இப்போது திடீர் அறிவிப்பொன்றை வெளியிட்டார்கள்.

" 200 ரூபாவுக்கு மட்டும் தான் இனி பெற்றோல்"

வரிசைப் பாம்புகள் சீறின. ஒன்றையொன்று தள்ளின. ஊடறுக்க முனைந்தன. பின்னிப் பிணைந்தன. ஒரு வரிசையின் தலையோடு இன்னொரு வரிசையின் வால் ஒட்டிக் கொண்டது. சில வரிசைகளுக்கு பல தலைகள், பல வால்கள். ராகு கேதுக்களின் மாற்றங்கள் வரிசையை கலைந்த தேன்கூடாக்கியது. தேனீக்களுக்கு எப்படியாவது பெற்றோ லியத் தேன் வேண்டும். சொற்களின் கொடுக்குகளால் மாறி மாறி கொட்டத் தொடங்கின. கைகலப்புகளும் எழுந்தன. எல்லாவற்றையும் தாண்டி, நசிபட்டு, வியர்வைக்குள் குளித்தெழும்பி, பெற்றொல் அடிக்கும் இடத்தை நெருங் கியபோது, "பெற்றோல் முடிந்து விட்டது" என்றெழுதப்பட்ட தாலி பெற்றோல் பம்பியின் கழுத்தில் கட் டப்பட்டது. " கைவீசம்மா கைவீசு கடைக்கு போகலாம் கைவீசு" என்று கடுப்போடு பாடிக் கொண்டு போத்தலை எறிந்துவிட்டு, மோட்டார் சைக்கிளை உருட்டிக் கொண்டே திரும்பினார்கள் பலர்.

23ஆம் திகதி நள்ளிரவோடு தொடங்கிய இந்த பெற்றோல் வரிசை 25 ஆம் திகதி வரை நாடெங்கும் நீண்டிருந்தது. எரிபொருள் கூட்டுத் தாபனப் பணியாளர்கள் பல்வேறு கோரிக் கைகளை முன்வைத்து 3 நாள் வேலை நிறுத்தத்தில் திடீரெனக் குதித்ததாலேயே இந்தத் திண்டாட்டம். உண்மையில் 3 நாள் வேலை நிறுத்தத்தால் எரி பொருள் நிரப்பு நிலையங்களில் களஞ் சியப்படுத்தப்பட்டிருக்கும் பெற்றோல் எல்லாம் ஒரே நாளிலேயே ஆவியாகி விடாது.

பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் சுமார் ஒரு வார காலத்துக்கு தேவையான எரிபொருளை களஞ்சியப்படுத்தியே வைத்திருந்தன. எனவே 3 நாள்களும் வழமைபோல, தேவையான அளவு எரி பொருளை மட்டும் மக்கள் நிரப்பியிருந் தால் எந்தவொரு தட்டுப்பாடும் வந்தி ருக்காது. ஆனால் பேராசை யாரை விட்டது? வாங்குமளவுக்கு வாங்கி பதுக் குமளவுக்கு பதுக்கி, விற்குமளவுக்கு விற்று போர்க்கால லாபத்தை எட்ட சிலர் நினைத்ததன் விளைவே சாதாரண ஒரு வேலை நிறுத்தத்தை இந்தளவு பூதாகர மாக்கி, நாடளாவிய ரீதியில் பெற்றோல் மட்டுமே பிரதானமான பொருள் என்ற நிலையை உருவாக்கி விட்டது.

பதுக்கல் வியாபாரிகள், கறுப்புச் சந்தைகள் என்பவற்றை இனியாவது அடையாளம் கண்டு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். எரிபொருள்களை சாதாரண வர்த்தக நிலையங்களில் வைத்து விற்பனை செய்ய முடியாது. ஆனால் பெற்றோலியத்துக்கு தட்டுப்பாடான காலங்களில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் இல்லாவிட்டாலும் பெட்டிக்கடைகளில் தாராளமாகக் கிடைக்கும்.

(08ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் மிகப்பெரிய குப்பைத் தொட்டி!

**இன்றைய சூழலில் உலகத்தின் மிகப்பெரிய குப்பைத் தொட்டி கடல்தான். இதில் கொட்டப்படும் குப்பைகள் ஒவ்வொன்றும் மட்குவதற்கு எடுத்துக்கொள்ளும் கால அளவைக் கொஞ்சம் பார்க்கலாமா?**




டைட்டானிக் கப்பல் 1914 ஆம் ஆண்டு கடலில் மூழ்கியது நமக்கு நினைவிருக்கலாம். ஆனால் இன்னமும் அதன் பாகங்கள் கடலுக்கடியில் ஆய்வுகளின் போது எப்படி சிக்குகின்றன. 104 வருடங்களாக ஒரு பொருள் கடலுக்கடியில் இருக்குமா? என்ற கேள்வி பலருக்கும் இருந்து கொண்டே இருக்கும். ஆம் அது உண்மைதான். கடலில் தங்கும் பொருள்கள் நீரில் மட்கி போக நீண்ட காலம் எடுத்துக்கொள்ளும். ஒவ்வொரு பொருளுக்கும் அதன் மட்கும் காலம் மாறுபடும்.

கடலில் நேரடியாகவோ அல்லது நதிகள் மூலமாகவோ, புயல் மற்றும் இயற்கை பேரழிவுகள் மூலமாக கடலுக்குள் சேரும் கழிவுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. 1990 ஆம் ஆண்டு பசுபிக் பெருங்கடலில் வீசிய புயலில் 5 கன்டெய்னர்கள் மற்றும் படகுகள் நீரில் மூழ்கின. அவற்றின் பகுதியாக 1994ஆம் ஆண்டு 34,000 பொருள்களாக எடுக்கப்பட்டன. இவை அனைத்தும் கடலில் கழிவுகளாக தங்கி இருந்துள்ளன.

உலகம் முழுவதும் 5 பிரிவுகளாக கடலில் உள்ள கழிவுகள் பற்றிய ஆராய்ச்சி நடந்து வருகிறது. வடக்கு அட்லாண்டிக், தெற்கு அட்லாண்டிக், வடக்கு பசுபிக், தெற்கு பசுபிக், இந்திய பெருங்கடல் பகுதிகள் என 5 பகுதிகளில் கடல் கழிவுகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பசுபிக் பெருங்கடலில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியில் மட்டும் 20 மில்லியன் சதுர கிலோ மீற்றரில் தொன் கணக்கில் கழிவுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதில் பிளாஸ்ரிக், இரும்பு மற்றும் மனிதனின் அன்றாட பயன்பாட்டில் இருக்கும் பொருள்கள் கழிவுகளாக மாறியுள்ளன.

மனிதனின் பொருள்கள் பயன்பாடும், அவற்றைக் கண்ட இடங்களில் கொட்டுவதன் மூலமாகவும் இவ்வளவு குப்பைகள் கடல் பரப்பில் விழுந்த கடல் உயிரினங்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தியுள்ளன. கடலின் அடி ஆழம் வரை சென்று தங்கும் இந்த பொருள்கள் மிகப்பெரிய திமிங்கலங்களை கூட கொல்லும் அளவுக்கு சக்தி வாய்ந்தவை என்கின்றனர் கடல் ஆய்வாளர்கள். சமீபத்தில் ஓர் ஆமையின் மூக்கில் இரும்பு கம்பி மாட்டியதும் அதனை அதிலிருந்து கஷ்டப்பட்டு சூழலியலாளர்கள் காப்பாற்றியதும் சமூக வலைத்தளங்களில் வைரல் ஆனது.

இப்படி கடலில் போடப்படும் பொருட்கள் கடலில் மட்கி போக ஆகும் காலம் எவ்வளவு தெரியுமா? என்.ஓ.ஏ.ஏயின் தகவல்படி அப்பிள் - 2 மாதம், காலுறை - 1-5 வருடம், தேநீர் கோப்பை - 50 வருடம், மீன் பிடிக்கும் கம்பி - 600 வருடம், பலூன் - 50 வருடம், பத்திரிகைத்தாள் - 2 மாதம், பிளாஸ்ரிக் பை - 20 வருடம், பிளைவூட் - 3 வருடம், டயப்பர் - 450 வருடம், பிளாஸ்ரிக் போத்தல் - 450 வருடம், அலுமினியப் போத்தல் - 200 வருடம், சிகரெட் துண்டு - 1- 5 வருடம், குளிர்பானம் வைக்கும் தட்டு - 400 வருடம், கொட்டன் துணி - 5 மாதம், கண்ணாடிப் போத்தல் - வரையறையிட்டு கூறமுடியாது என்று ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இனி வாங்கி குடிக்கும் சோடாப் போத்தலை கடலில் வீசி எறிந்தால் அது மட்கி போக 450 வருடம் ஆகும் என்று நினைத்து பார்த்தால் அதனை தூக்கி கடலில் எறிய மனம் வராது.

## சிங்காரக்....

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

குப்பி விளக்கில் படிக்க நேர்ந்த போதிலும் எமது மாணவர்கள் கல்வியில் முன் நின்றனர். பெறுபேற்றைச் சிறப்பாகவே பெற்றனர். ஆனால் இன்று போராட்டம் முடிவடைந்து விட்டது. அரசாங்கம் சகல வசதிகளையும் பாடசாலைகளுக்கு வழங்கி வருவதாக தெரிவிக்கின்றது. ஆசிரிய வளம் போதுமானதாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அப்படியென்றால் எங்கே தவறு நடக்கின்றது? இதனைக் கண்டு பிடிக்க வேண்டியவர்களும் கண்டுபிடிக்காது இருக்கின்றனரா? இல்லாவிடில் தெரிந்தும் தெரியாது பாரா முகமாயிருக்கிறார்களா? இதன் பின்னணியிலுள்ள அரசியலை ஆராய வேண்டியவர்களாக நாமிருக்கிறோம்.

வடக்கு மாகாண சபை ஒன்றுள்ளது. இந்த மாகாண சபை மூலம் கல்விக்கு என்று ஒருவர் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். வடக்கில் ஐந்து மாவட்டங்களே உள்ளன. இவைகளை மையப்படுத்தி எந்தவொரு கல்வி மேம்பாட்டுத் திட்டங்களையும் கல்வியமைச்சர் செய்ததாக ஞாபகமில்லை. வடக்கில் கல்வி நிர்வாகத்திலேயே அதிகளவில் சிக்கல்கள் உள்ளதாக செய்திகள் வெளிவருவதையும் காணக்கூடியதாகவுள்ளது. கல்வி அதிகாரிகளை மேற்கோள் காட்டி இணையச் செய்திகள் பல வந்தவண்ணமிருக்கின்றன. அவற்றை ஆதாரமற்றவைகளாகவோ அல்லது பொய்யானவைகள் என்றோ கருதிக் கடந்து செல்ல முடியாதவாறு சமூகக் கருத்துகள் இருக்கின்றன.

வடக்கு மாகாணத்திலுள்ள யாழ். பல்கலைக்கழகம். யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வரை கிளைகள் பரப்பி நிற்கிறது. இருந்தும் அது ஒரு சமூகமயப்படுத்தப்பட்ட நிறுவனமாக இல்லை என்ற குறை பரவலாக இருக்கிறது. உண்மையிலேயே ஒரு சமூகத்தில் கல்வி தொடர்பான குறைபாடு அல்லது பற்றாக்குறை உணரப்படுமிடத்து பல்கலைக் கழகத்திலுள்ள கல்வித்துறையே பக்கபலமாக இருந்து குறைநிறையைப் பார்த்துக் கொள்ள வேண்டும். அவர்களும் இந்த விடயத்தில் அக்கறையாக இல்லை. அத்துடன் பட்டம் பெற்றவர்கள் பலர் எம்மிடையே இருந்தாலும் அவர்கள் ஒரு நிறுவனமயப்படுத்தப் பட்டவர்களாக இல்லாததும் ஒரு குறைபாடே. அத்துடன் பட்டம்பெற்ற அனைவரும் புத்தி ஜீவிகள் என்று சொல்வதற்கும் இல்லை. ஏனெனில் எமது கல்விச் செயற்பாடுகள் குறைபாடுடையதாக இருக்கிறது.

எனவே இரண்டு வருடமாக வீழ்ச்சியடைந்து செல்லும் கல்வி நிலை குறித்து கூடி ஆராய்வதற்கு இவர்கள் முன்வருவார்களா? கல்விச் செயற்பாடுகளில் ஆர்வமுள்ள சிலரைச் சந்தித்தோம். இந்த வீழ்ச்சிக்குப் பின்னால் மத்திய, மாகாண அரசுகளின் இயலாத் தன்மை இருப்பது தெரிகிறது. ஒரு பின்னணி அரசியல் இருப்பது தெரிகிறது. அத்துடன் அதிகாரிகள் மற்றும் ஆசிரியர்களும் பாடசாலைகளை தாம் பணிபுரியும் அரச நிறுவனங்களாகப் பார்க்கிறார்களே யொழிய ஒரு எதிர்காலச் சமூக நலன்களடங்கிய வித்துக்களை கொண்ட நாற்று மேடைகளாகப் பார்ப்பதில்லை. மொத்தத்தில் தமது பொறுப்புக்களைத் தட்டிக் கழிப்பவர்களாலேயே இந்த நிலை தோன்றியிருக்கிறது எனக் கருதவேண்டி இருக்கிறது. அத்துடன் வட பகுதியிலுள்ள தனியார் கல்வி நிறுவனங்களைக் கட்டுப்படுத்தக் கூடிய சட்டங்களை வட மாகாண அரசு விரைந்து செயற்படுத்த வேண்டும். வட பகுதிக் கல்விச் செயற்பாடுகளை ஒரு வரையறையின் கீழ் கொண்டு வராத பட்சத்தில் கல்வித் துறையில் எமது மக்கள் ஏமாற்றப் பட்டுக் கொண்டிருப்பார்கள் என்பதுதான் உண்மை.

## அந்த மூன்று...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் விலைதான் பல மடங்கு. அப்படியாயின் பெட்டிக்கடைகளின் கொல்லைப்புறங்களில் பெற்றோலியக் கிணறுகள் இருக்கின்றனவா? இல்லையே. அவர்கள் எரிபொருள் நிலையங்களில் வாங்கிப் பதுக்கி வைத்திருந்த பெற்றோல் தான் தட்டுப்பாட்டுக் காலங்களில் பெறுமதி அதிகரிப்போடு சட்டவிரோதமாக விற்கப்படுகிறது. இப்படி சட்டவிரோதமாக பெற்றோல் விற்பனை செய்வதைத் தடுத்திருந்தாலே பதுக்கல்காரர்களை பெருமளவுக்கு கட்டுப்படுத்தி, பெற்றோலுக்கு ஏற்பட்ட செயற்கைத் தட்டுப்பாட்டை இல்லாமல் செய்திருக்க முடியும். ஆனால் கையாலாகாத அரசால் அதைச் செய்ய முடியாது. மக்கள் படுகின்ற துன்பங் களையெல்லாம் கைகட்டி வேடிக்கை பார்ப்பதற்குப் பெயர்தான் நல்லாட்சி.

சூழல் மாசடையும் என்ற காரணத்தால் மேற்கு நாடுகள் பலவும் மாற்று சக்தியில் இயங்கும் வாகனங்களில் கவனத்தை திருப்பியுள்ள நிலையில், இலங்கை போன்ற அபிவிருத்தி அடையவே முடியாத நாடுகள் எரிபொருளில் இயங்கும் வாகனங்களை இன்னும் அதிகமதிகமாக வாங்கிக் குவிக்கின்றன. முன்னரெல்லாம் வீட்டுக்கு ஒரு சைக்கிள் இருந்தாலே பெரிய விடயம். ஆனால் இப்போது வீட்டில் உள்ள ஒவ்வொருவரும் ஆளுக்கொரு ஸ்மார்ட் போனும், மோட்டார் சைக்கிளும் வைத்திருக்கிறார்கள். கொஞ்சம் வசதி படைத்தவர்களிடம் ஆளுக்கொரு காரும் உண்டு. மாற்று எரிபொருளில் ( சூரிய கலம் போன்றவற்றில்) இயங்கும் வாகனங்களை ஓடுபவர்களை விநோதமாக பார்ப்பவர்கள் நாங்கள். [illegible] கோவணம் கட்டியவன் பைத்தியக்காரன்தானே. மாற்று சக்தி வாகனங்களைப் பற்றிச் சிந்திக்காமல் பெற்றோலியத்தை மட்டுமே நம்பியிருக்கும் இலங்கையர்களுக்கு அந்த 3 நாள் திண்டாட்டமும் ஒரு பாடம்.

வடகொரியாவும், அமெரிக்காவும் எப்படியாவது மூன்றாவது உலகப் போரை ஆரம்பித்தே தீருவது கங்கணம் கட்டிக் கொண்டிருக்கின்றன. தங்களுடைய நவீன ஆயுதங்களை பரீட்சிப்பதற்காக மூன்றாவது உலகப்போரை தொடக்கினால், முதலாவதாக உலகெங்கும் எரிபொருள் விநியோகம் தடைப்படும். 3 நாள் வேலை நிறுத்தத்துக்கே விழி பிதுங்கிய இலங்கை, எப்போது முடியும் என்பதே தெரியாத மூன்றாம் உலகப்போரால் உறைநிலைக்குப் போனாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. பெற்றோல் முடிந்தால் வாழ்க்கையே முடிந்துவிடும் என்பது போல, அரக்கப் பரக்க பெற்றோல் நிரப்ப ஓடியவர்களைப் பார்த்து நணபரொருவர் இப்படி சொன்னார்,

" என்னத்துக்கு எங்கட சனம் இப்பிடி பறக்குது? பெற்றோல் ஒரு சொட்டும் வராமல் இருந்த காலத்திலேயே மண்ணெண்ணெயில மோட்டர்சைக்கிள் ஓடின ஆக்கள் நாங்கள். பிறகு மண்ணெண்ணையை வடிச்சு சுப்பர் பெற்றோல் மாதிரி "வடி" எண்ட புதிசா ஒரு எரிபொருளை கண்டுபிடிச்சதும் நாங்கள் தான். சிங்கள ஆக்கள்தான் பெற்றோல் இல்லாம வாழப் பழகேலை. நாங்கள் அப்பிடியில்லையே. எல்லாம் பழசை மறந்ததால வந்த வினை" என்று பெருமூச்சு விட்டார்.

அந்தப் பெருமூச்சில் நியாயம் நிறையவே இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரப்பலன்

**மேடம்**
தொட்டது துலங்கும். புதிய உறவு கொண்டாட்டம். பலம்.

**துலாம்**
தர்ம யுத்தம். கொடுங்கல் வாங்கல் பிணக்கு. காரியத்தடை.

**ரிஷபம்**
தர்ம சிந்தனை. ஆன்மிகப் பயணம். பயிர் பலிதம். நட்பு.

**விருச்சிகம்**
பதவி உயர்வு. கல்வி மேம்பாடு. நினைத்த காரிய சித்தி.

**மிதுனம்**
கோபமிகுதி. நினைத்த காரிய சித்தி. மனைச் சிறப்பு.

**தனுசு**
நட்பு பகையாகும். சிந்தனை வயப்படல் தனிமை. தாகம்.

**கடகம்**
செலவுக்கேற்ற வரவின்மை. வேலையாள்கள் சகாயம்.

**மகரம்**
புதிய தொழில் முயற்சி. பணவரவு. தானியச் சேர்க்கை.

**சிம்மம்**
மன மகிழ்ச்சி. புத்திரர் சிறப்பு. வீண் அலைச்சல்.. பயம்.

**கும்பம்**
தன லாபம். காரியத்தடை. வீண் அலைச்சல். தெளிவு.

**கன்னி**
மனச் சஞ்சலம். பொருள் சேர்க்கை. சமூக சிந்தனை.

**மீனம்**
தெய்வ சிந்தனை. தனிமை. கல்வித்தடை. மனைச் சிறப்பு.




செல்வி மிஷாந்தி செல்வராசாவின் 'காகிதங்கள் பேசுதடி' கவிதை தொகுதி 23.04.2017 அன்று வெளியிடப்பட்டபோது...
ஒளிப்படங்கள் : யாத்திரிகன்







றஸ்மியின் " ஈதேனின் பாம்புகள்" மற்றும் இளங்கோவின் "பேயாய் உழலும் இச்சிறுமனமே" ஆகிய நூல்கள் பற்றிய உரையாடல் 'படைப்புகளுக்கூடான நல்லிணக்கம்' என்ற தொனிப்பொருளில் 22.04.2017 அன்று கொழும்பில் உரையாடப்பட்டபோது....



யாழ்.பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற 'நானும் எனது புத்தகமும்' என்ற நிகழ்வு 23.04.2017 அன்று உலக புத்தக தினத்தை முன்னிட்டு இடம்பெற்றது.




தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் மகத்தான ஒக்ரோபர் சோஷலிஸப் புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக்கும் முகமாக நடத்தப்படுகின்ற கலை இலக்கிய ஆய்வரங்குத் தொடரின் மூன்றாவது ஆய்வரங்கு 'கவிஞர் மாயகோவ்ஸ்கியின் கவிதைகள்' என்ற தலைப்பில் 23.04. 2017 அன்று நடைபெற்றது.





பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் பருத்தித்துறை பிரதேச செயலகம் நடத்திய தமிழ் - சிங்கள புத்தாண்டு விளையாட்டு விழா 2017.04.21 அன்று நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CMYK

# திருந்திய அணில்

மரப்பொந்து ஒன்றில் அப்பு என்ற ஒரு அணில்குட்டி இருந்தது. அப்புவின் அம்மாவும் அப்பாவும் அப்புவுக்கு ரொம்ப செல்லம் கொடுத்து வளர்த்தன. இரண்டு அணில்களும் வெளியே போய்ச் சுவையான பழங்கள், கொட்டைகள் எல்லாம் கொண்டுவரும். அப்பு ஜாலியாகச் சாப்பிட்டுவிட்டு விளையாடும். அப்பு எந்த வேலையும் செய்யாது. எதற்கெடுத்தாலும் பிடிவாதக் குணமும் இருந்தது.

அப்பு கொஞ்சம் வளர்ந்தது. ஒரு நாள் அப்பா அணில் அப்புவிடம், "அப்பு! இனி நீ வெளியே போய் உணவு தேடப் பழகிக்கோ" என்று அறிவுரை சொன்னது. "போங்கப்பா! அதுக்குத்தான் நீங்க ரெண்டு பேரும் இருக்கீங்களே. நான் ஏன் தேடணும்?" என்று சொல்லி அப்பு சிரித்தது.

அப்பு சொன்னதைக் கேட்டு அம்மா, அப்பா அணில்களுக்கு வருத்தம் வந்தது. 'சரி, நாளாக நாளாக அப்பு மாறுவான்' என்று தம்மைத் தாமே அவை சமாதானம் செய்துகொண்டன. நாட்கள் கடந்தன. ஆனால், அப்பு மாறவேயில்லை.

அப்புவுக்குக் கயல், குஞ்சம்மா என்ற இரு காகங்கள் நண்பர்களாக இருந்தன. அப்பு எப்போதும் நன்றாகத் தின்று, தூங்கி, காகங்களுடன் விளையாடிப் பொழுதைக் கழிக்கும். ஒருநாள் அப்புவின் அம்மா, அப்பா அணில்கள் உணவு தேடி வெளியே போய்விட்டன. அப்போது கயலும் குஞ்சம்மாவும் அப்புவைப் பார்க்க வந்தன. "அப்பு! எவ்வளவு நாள்தான் இங்கேயே நாம் விளையாடுறது? நாம எங்காவது தூரமாய்ப் போய்ட்டு வரலாம்" என்றன.

காகங்கள் சொன்னதும், அப்புவுக்கு வெளியேபோக ஆசை வந்தது. "சரி! போகலாம். நீங்கள் பறந்து போவீர்கள். நடந்து வந்தால் எனக்குக் கால் வலிக்குமே" என்றது. அதற்குக் கயல், "ஒண்ணு செய்யலாம். ஓலையில் ஒரு குட்டிக் கூடை செய்வோம். அதில் நீ ஏறிக்கோ. நாங்கள் கூடையைத் தூக்கிக்கிறோம். நீ ஜாலியா வரலாம்" என்று சொன்னது. கயல் யோசனை அப்புவுக்குப் பிடித்தது. கஷ்டமில்லாமல் ஊரைச் சுற்றலாம் என்று நினைத்த அப்பு, "அப்படியே செய்யலாம்" என்றது.

கயலும் குஞ்சம்மாவும் சிறிய கூடையைச் செய்தன. அப்பு அந்தக் கூடையில் ஏறிக்கொண்டது. கயலும் குஞ்சம்மாவும் கூடையைத் தூக்கிக்கொண்டு பறந்தன. அப்பு விமானத்திலிருந்து பார்ப்பதுபோல, கீழே பார்த்து ரசித்தது. ரொம்ப தூரம் பறந்த கயலும் குஞ்சம்மாவும் களைத்துப் போயின. அப்படியே தரையில் இறங்கி, கூடையை இறக்கி வைத்தன. அப்பு கூடையிலிருந்து வெளியே வந்தது. மூன்றும் கொஞ்சநேரம் ஓய்வெடுத்தன. பிறகு காகங்கள் இரை தேடிச் சென்று சாப்பிட்டன.

அப்புவுக்குப் பசி தாங்க முடியவில்லை. அப்புவுக்குத்தான் உணவு தேடிப் பழக்கமே இல்லையே. அது கயலிடம், "நண்பா! எனக்குப் பசிக்குது. நீங்க எனக்கு ஏதாவது உணவு தேடிக் கொடுங்க" என்றது. "அப்பு! இவ்ளோ தூரம் உன்னை நாங்க




தூக்கிக்கிட்டு வந்ததே பெரிய விடயம். உணவு வேறு தேடணுமா? நீயே தேடிக்கோ" - என்றன கயலும் குஞ்சம்மாவும்.

"அப்புறம் ஏன் என்னைக் கூட்டிட்டு வந்தீங்க?" என்று கோபத்தோடு கேட்டது அப்பு. "நீ வரேன்னு சொன்னதால கூட்டிட்டு வந்தோம். பிடிக்கலைன்னா நீ ஏன் வந்தாய்?" ஏன்று அவை பதிலுக்குக் கேட்டன. உடனே அப்பு "உங்கள நம்பி வந்தேனே. இங்கிருந்து போய்டுங்க" என்று கோபமாகப் பேசியது. அப்பு தங்களைத் திட்டியதால் வருத்தடைந்த கயலும் குஞ்சம்மாவும் பறந்து போயின.

அப்புவுக்கோ பசி கூடியது. ஐயோ! எனக்கு உணவு



தேடத் தெரியாதே. காகங்கள் இப்படி என்னை தொலைதூரத்தில் விட்டுவிட்டுப் போய்விட்டார்களே என்று நினைத்த அது, நடக்க ஆரம்பித்தது. அப்போது, "தம்பி" என்று அழைக்கும் குரல் கேட்டு அப்பு திரும்பியது. ஒரு வாதுமை மரம் அப்புவைப் பார்த்துச் சிரித்தது.

"மரமே! நீயா கூப்பிட்டாய்?" என்று கேட்டது அப்பு. "நான்தான் கூப்பிட்டேன். உனக்குப் பசிக்கிறதா? வா! இந்தா பிடி பாதாம் கொட்டைகள். நீ சாப்பிடு" என்று சொன்னதும், பாதாம் கொட்டைகளை உடனே வாங்கித் தின்றது அப்பு. இப்போதுதான் அதற்குக் கொஞ்சம் தெம்பு வந்தது.

"மரமே! முன்பின் தெரியாத எனக்குச் சாப்பாடு கொடுத்ததுக்கு ரொம்ப நன்றி" என்றது அப்பு.

"அணில் குட்டியே! நீ என் சகோதரன். இங்கே நான் நிற்க உன்னோட பாட்டன் அணிலோ, முப்பாட்டன் அணிலோதான் காரணம். அணில்கள் சில சமயம் பழங்களைத் தின்றுவிட்டு, மீதியை அப்புறம் தின்ன மண்ணில் புதைத்து வைக்கும். ஆனால், புதைத்ததை மறந்துவிடுவதும் உண்டு. அப்படி ஓர் அணில் புதைத்து வைத்த விதையிலிருந்து வளர்ந்தவன் நான். அப்போ உனக்கு நான் சகோதரன்தானே?" என்று கேட்டது மரம். அப்பொழுதுதான் அப்புவுக்குத் தம் இனத்தவரைப் பற்றிய உண்மைகள் புரிந்தன.

'என் அப்பாவும் அம்மாவும் தினமும் உணவு தேடிப் போறாங்க. சில சமயம் பழத்தைப் பறிச்சுப் புதைத்து வைக்கிறாங்க. அவர்கள் அவற்றை மறந்துவிட்டாலும், பின்னாளில் பெரிய மரமாக மாறி, பல உயிரினங்களுக்கு உணவைத் தருதே. என் அம்மா, அப்பா என்னை இரை தேடக் கற்றுக்கொள்ளச் சொல்லியும் கேட்காம சோம்பேறியாக இருந்துட்டேனே. இனி அப்படி இருக்கக் கூடாது' என்று நினைத்த அணில்குட்டி அப்பு, தன்னைப் பற்றிய விடயங்களை மரத்திடம் சொன்னது.


"போனது போகட்டும்! இனியாவது உணவை நீ தேடிச் சாப்பிடு. மற்றவர்களுக்கும் உதவு. என் மரத்துல கூடு கட்டிப் புறாக்கள் வாழ்கின்றன. அவற்றிடம் உன்னை உன் அம்மா அப்பாவிடம் கூட்டிக்கொண்டு போகச் சொல்கிறேன்" என்று சொன்னது மரம். மரம் சொன்னதும் அப்புவைத் தூக்கி சென்று அதன் பெற்றோரிடம் சேர்த்தன புறாக்கள்.

ரொம்ப நேரம் அப்புவைக் காணாமல் தவித்த அம்மா, அப்பா அணில்கள் அதைக் கண்டதும் மகிழ்ச்சியடைந்தன. "அப்பா! நீங்கள் உணவு தேடச் சொல்லியும் நான் கேட்கல. இன்றைக்கு அந்தப் பலனை அனுபவிச்சேன். என்மேல தவறை வைச்சுக்கிட்டு கயலையும் குஞ்சம்மாவையும் விரட்டிவிட்டுட்டேன். இனி நீங்கள் சொல்வதை நான் கேட்குறேன். முதல்ல கயலிடமும் குஞ்சம்மாவிடமும் மன்னிப்பு கேட்டுட்டு வரேன்" என்று சொன்னபடி காகங்களைத் தேடிச் சென்று மன்னிப்பு கேட்டது.

அப்பு திருந்தியதைப் பார்த்துக் கர்கங்கள் மகிழ்ச்சிகொண்டன.

## 5 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்





## தகவல் அறிவோம்



உலகின் எந்தப் பிரதேசத்திலும் வாழும் வல்லமை கொண்ட உயிரினங்களில் சிலந்தியும் ஒன்று. உலகம் முழுவதும் 42 ஆயிரத்து 751 வகை சிலந்தி இனங்கள் உள்ளன.

"அரச்சனீட்ஸ்" இனக்குழுமத்தைச் சேர்ந்த சிலந்திகளுக்கு 8 கால்களும் 8 கண்களும் உள்ளன. அத்துடன் உடல் இரண்டு பாகங்களாக உள்ளன. சில சிலந்திகள் 3 அங்குலம் வரை வளரக்கூடியவை. இவ்வாறு வளரும் இராட்சத சிலந்திகள் 13 வருடங்கள் வரை உயிர் வாழக்கூடியவை. ஆனால் சாதாரண சிலந்திகள் ஒரு வருடமே உயிர் வாழும்.

தினமும் சூரியன் உதிக்கும் முன்பாகவே புதிய வலைகளைப் பின்ன ஆரம்பிக்கின்றன சிலந்திகள். இந்த வலையை நீட்டினால் சுமார் 2,500 கிலோ மீற்றர் வரை நீளுமாம்.

• • •

புவி தனது வாழ்நாளிலேயே சந்திக்காத அளவு மாசாக்கத்தை சந்தித்து வருவது அனைவருக்கும் தெரிந்ததே. இதில் முதன்மையானது வளி மாசாக்கம்தான். வளி மாசாக்கத்தில் வாகனங்களில் இருந்து வெளியேறும் புகை முக்கிய காரணமாக அமைகிறது.

இந்நிலையில் சுற்றுச்சூழலைப் பாதிக்காத, குறைந்த விலையில் பயன்படுத்தக்கூடிய மோட்டார் சைக்கிளை ஜப்பானின் ஹொண்டா நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இது அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயுவினால் (Comprssed Natural Gas) இயங்க வல்லது.

இலங்கை நாணயத்தின் மதிப்பில் சுமார் 2 இலட்சம் ரூபாவில் அறிமுகமாகும் இந்த மோட்டார் சைக்கிள் பெற்றோலில் இயங்கும் வாகனத்தை விட செலவு குறைவு என்கின்றனர். ஒரு கிலோ அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு மூலம் 120 கிலோமீற்றர் பயணிக்க முடியுமாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பிரதிநிதித்துவத்தை மீட்க திருமலைக்கு ரூபனை அனுப்பிய பிரபா



**கூட்டமைப்பும் புலிகளும் 6**

**- தயாளன்**

**யா**ழ்ப்பாணத்திலிருந்து புலிகள் வெளியேறியதும் ஈ.பி.டி.பிக்கு எதிரான அணியொன்றை உருவாக்கத் தமிழ்க் குழுக்கள் முயற்சித்தன. யாழ். மத்திய கல்லூரியில் இதற்கான சந்திப்பு நடைபெற்றது. ஆயினும் உடன்பாடு காணமுடியவில்லை. அது ஈ.பி.டி.பிக்குச் சாதகமாகமுடிந்தது. 1998 ஜனவரி 29ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் ஈ.பி.டி.பி 38, 726 வாக்குகளைப் பெற்றது. இதன் மூலம் ஒன்பது சபைகள் அதன் கட்டுப்பாட்டில் வந்தன. 105 அங்கத்தவர்கள் தெரிவாகினர். எனினும் யாழ்ப்பாண மாநகர சபையையோ, எந்த ஒரு நகரசபையையோ அதனால் கைப்பற்ற முடியவில்லை.

புளொட் 25,576 வாக்குகளைப் பெற்று மூன்று சபைகளைக் கைப்பற்றியது. பச்சிலைப்பள்ளி, பிரதேசசபை மற்றும் சாவகச்சேரி, பருத்தித்துறை நகரசபைகள் என்பனவே இவையாகும். சாவகச்சேரி பிரதேச சபையில் 7 இடங்கள் கிடைத்தன. எனினும் ஈ.பி.டி.பி. 4, ஈ.பி. ஆர்.எல்.எவ். 3, ரெலோ 1 என ஏனைய கட்சிகளுக்கு மொத்தம் என 8 இடங்கள் கிடைத்தன. மொத்தமாக 62 உறுப்பினர்கள் இக்கட்சிக்குக் கிடைத்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணி இரு சபைகளில் மட்டுமே போட்டியிட்டது. வலிவடக்கு பிரதேச சபையைக் கைப்பற்றியது. யாழ்ப்பாணம் மாநகரசபையில் 9 இடம் கிடைத்தது. ஈ.பி.டி.பி. 6, புளொட் 6. ஈ பி.ஆர்.எல்.எப். 2 என 14 ஆசனங்கள் ஏனைய கட்சிகளுக்குக் கிடைத்தன. வல்வெட்டித்துறை நகரசபையை ரெலோ கைப்பற்றியது. சிவாஜிலிங்கம் நகரசபைத் தலைவரானார். எல்லா உள்ளூராட்சிச் சபைகளிலும் அதிக ஆசனங்களைக் கைப்பற்றிய கட்சிகள் நிர்வாகத்தைப் பொறுப்பெடுத்தன.

### பரிதாபமாக நின்ற ஈ.பி.ஆர்.எல்.எவ்.

இந்தத் தேர்தலின் முடிவில் பரிதாபகரமாகக் காட்சியளித்தது ஈ.பி.ஆர்.எல்.எவ்தான். அதனால் ஒரு சபையைக் கூட கைப்பற்ற முடியவில்லை. மொத்தம் 25 அங்கத்தவர்களையே அதனால் பெறமுடிந்தது. இதனை விடக் குறைவான அங்கத்தவர்களைப் பெற்ற (18 பேர்) ரெலோவினால் வல்வெட்டித்துறை நகரசபையையாவது கைப்பற்ற முடிந்தது. சாவகச்சேரி நகரசபை மற்றும் வலி. கிழக்குப் பிரதேசசபை என்பவற்றில் மட்டுமே ஈ.பி.ஆர்.எல்.எவ்வுக்கு எதிர்க்கட்சித் தலைமை கிடைத்தது. வலி.கிழக்கில் ஈரோசின் மிக முக்கிய புள்ளியாக விளங்கியவரும் 'வீடு' முதலான சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்ட எழுத்தாளரும், பத்திரிகையாளருமான கந்தசாமி ஐயர் பால நடராஜ ஐயர் (சின்ன பாலா) எதிர்க்கட்சித் தலைவரானார்.

• • •

### புலிகள் - ரெலோ நெருக்கம்!

தங்களுக்குப் பின்னால் 'ஒட்டுக்குழுக்கள்' என்று தம்மைப் பற்றிக் குசுகுசுக்கும் மக்களின் மனநிலை, உள்ளூராட்சித் தேர்தலில் தமது கனவுகள் உடைந்தமை, புலிகள் பற்றிய பீதியினால் ஒழுங்கான தூக்கமின்மை போன்றவைகளால் ஏற்கெனவே இணைப்பு முயற்சியை ஆரம்பித்திருக்கும் சிவராமை நோக்கித் தள்ளப்பட்டன ரெலோவும் ஈ.பி.ஆர். எல்.எவ்வும். வவுனியாவில் புளொட் - ரெலோ மாணவர் குழுக்களிடையே முறுகலும் ஏற்பட்டிருந்தது. சிவராமின் முயற்சிகளுக்குப் புறம்பாகவும் ரெலோவினருடன் பல்வேறு வகையிலும் நெருங்கி வரத் தொடக்கியிருந்தனர் புலிகள்.

எவ்வகையில் புலிகளும் ரெலோவினரும் நெருக்கமாகினர் என்பதை வெளியிட்டால் அது காட்டிக் கொடுப்பாகிவிடும். பொதுவாகப் புலிகளின் நடவடிக்கைகளுக்குப் பலம் சேர்க்கும் வகையில் உதவினர் என்றளவில் விடுவதே உத்தமம். படையினரின் சந்தேகப்பார்வை ரெலோவினர் மீது திரும்பியது. தாங்கள்தான் படையினரின் அதிதீவிர விசுவாசிகள் எனக் காட்ட முனைந்த புளொட்டினரும் இந்நிலைக்குக் காரணம்.

### வாக்குச் சீட்டால் புளொட்டுக்கு விளாசல்!

நாடாளுமன்றில் அவசரகாலச் சட்ட நீடிப்பை எதிர்த்து வாக்களிக்கத் தொடங்கினார் செல்வம் அடைக்கலநாதன். இதனால் வவுனியாவில் மக்களின் மனநிலை மாற்றமடைந்தது. அத்துடன் புலிகளின் நட்பும் கிடைத்ததால் 2000 ஆண்டுத் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் தைரியத்தை அடைந்தது அக்கட்சி. எப்போது புளொட்டுக்குப் பாடம் புகட்டுவோம் எனக் காத்திருந்த மக்களுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. தமது வாக்குச் சீட்டை விளக்குமாறாக எண்ணி புளொட்டை விளாசித் தள்ளினர் வன்னி மக்கள். புலிகளுடன் யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும் - அவர்களுடன் பேச்சு நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை ரெலோ முன்வைத்ததும் அதன் வெற்றிக்குக் காரணம் .


10.10 .2000 அன்று நடைபெற்ற இந்த 11ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் 21,705 வாக்குகளைப் பெற்ற ரெலோ மூன்று ஆசனங்களைக் கைப்பற்றியது. செல்வம் அடைக்கலநாதன் (15.490) வினோநோகராதலிங்கம் (10,959) ஆர்.குகனேஸ்வரன் (6,739 ) என விருப்புவாக்குகளின் அடிப்படையில் இம்மூவரும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகினர். 1994 தேர்தலில் 11,567 வாக்குகளுடன் முதலிடத்தைப் பெற்று, மூன்று ஆசனங்களைக் கைப்பற்றியிருந்த புளொட் இம்முறை 6,961 வாக்குகளுடன் ஐந்தாம் இடத்துக்குத் தள்ளப்பட்டு, உறுப்பினர் எவரும் தெரிவாகாத நிலைமை ஏற்பட்டது. ரெலோவுக்கு ஏற்பட்ட முன்னேற்றத்தைக் கண்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். சில சந்தேகங்களைக் கடந்து சிவராமின் இலக்கை நோக்கி அடியெடுத்து வைத்தது.

### பிரதிநிதித்துவத்தை மீட்ட அம்பாறை தமிழர் மகா சபை !

1994 பொதுத்தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் 24,526 வாக்குகளை மட்டுமே பெற்றதால் ஆசனம் பெறத் தவறியிருந்தது தமிழர் விடுதலைக் கூட்டணி. ஈரோஸ், புளொட், ரெலோ இணைந்த கூட்டணி போட்டியிட்டு வாக்குகளைப் பிரித்ததும் தமிழர் தரப்பு பிரிந்து நிற்பதால் ஆசனம் கிடைக்கப்போவதில்லை எனக் கருதி வாக்களிப்பில் மக்கள் ஆர்வம் காட்டாததுமே இதற்குக் காரணம். இந்த ஆபத்தை ஏற்கெனவே உணர்ந்ததால்தான் 1989 தேர்தலில் அம்பாறையில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கே எதிராகத் தமது சுயேச்சைக் குழுவைக் களமிறக்கவில்லை ஈரோஸ். அம்பாறை மாவட்ட தமிழர் மகாசபை 1994 நிலைமையை சகல தமிழ்க் கட்சிகளுக்கும் சுட்டிக்காட்டியது. இதனைத் தவிர்க்கச் சகல கட்சிகளும் இணைந்து 2000 தேர்தலில் போட்டியிட வேண்டுமென வலியுறுத்தியது. எந்தக்கட்சிச் சின்னத்தில் போட்டியிடுவதென்ற விடயத்தில் ஒருமைப்பாடு எட்டாததால் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடுவது என்று முடிவாயிற்று. இக்குழு 19,812 வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தைப் கைப்பற்றியது. சுவிசில் இருந்து நாடு திரும்பிய சங்கர் என்று அழைக்கப்படும் காரைதீவைச் சேர்ந்த மார்க்கண்டு குணசேகரன் என்பவர் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் (12,799 ) நாடாளுமன்ற உறுப்பினரானார். தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தையும் முதன் முதலாக ஒன்றிணைத்து போட்டியிட வைத்த வரலாறு அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசபைக்கே உண்டு. இது ஓர் ஆபத்தைத் தவிர்ப்பதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடு.

1977 இல் தமிழ்க் காங்கிரஸ், தமிழர் சுயாட்சிக்கழகம் என்பன தமிழர் விடுதலைக் கூட்டணியை எதிர்த்துத் போட்டியிட்டுயிருந்தன. அம்பாறையின் முன்மாதிரியைப் பின்பற்றிச் சகல தேர்தல் மாவட்டங்களிலும் இயன்றவரை தமிழ் அணிகளை ஒன்றிணைய வைக்க வேண்டும் என்ற இலக்குடன் செயற்படுவதற்குப் பலமான சக்தி ஒன்று பின்னால் இருந்தாலே சாத்தியமாகும் என்பதே நிதர்சனம். அந்த நம்பிக்கையுடனேயே பொட்டம்மானும், சிவராமும் இம்முயற்சியில் இறங்கினர்.

2000 ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10 திகதி நடைபெற்ற 11 ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் திருமலை மாவட்டத்தில் 14,090 வாக்குகளை மட்டுமே பெற்றதால் ஆசனம் பெறத்தவறியது தமிழர் விடுதலைக் கூட்டணி. பொதுஜன ஐக்கிய முன்னணி மூன்று ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி ஓர் ஆசனத்தையும் கைப்பற்றின. இது குறித்து ஆராய்ந்த பிரபாகரன் கணிசமான திருமலை வாக்காளர்கள் வன்னிக்கு இடம் பெயர்ந்து இருப்பதும், மாவட்டத்திலேயே உள்ள தமிழர்கள் வாக்களிப்பில் போதிய ஆர்வம் காட்டாமையுமே இதற்குக் காரணம் எனத் தெரிந்து கொண்டார். எது எவ்வாறிருந்தாலும், தமிழர்களின் தலை நகரில் தமிழரின் பிரதிநிதித்துவம் இல்லாமற்போகும் நிலைமையை அவரால் ஏற்க முடியாதிருந்தது. யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பில்



எவ்வாறு நிலைமை இருந்தாலும் வெல்வது தமிழர்களாக இருப்பர். சிங்களக் குடியேற்றம் போன்ற விடயங்களில் பெரும் பிரச்சினை ஏற்பட வாய்ப்பில்லை. ஆனால் திருமலை, அம்பாறை மாவட்டங்களின் நிலைமை அவ்வாறில்லை. அங்கு தமிழரின் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்படவேண்டும் என்பது அவரது நிலைப்பாடு.

வன்னியில் இருக்கும் திருமலை வாக்காளர்கள் மீண்டும் அங்கே திரும்பிச் செல்வது உடனடியாகச் சாத்தியமில்லை. ஏற்பட்டிருக்கும் ஆட்சி நீண்டநாள் தொடர வாய்ப்பில்லை - ஒரு வருடத்துக்கு அப்பால் இது நகரச் சாத்தியம் குறைவு என அவருக்குக் கிடைத்த அறிக்கைகள் சுட்டிக்காட்டின. எனவே அடுத்த தேர்தலில் தமிழரின் வாக்களிப்பை அதிகரிக்க வேண்டுமென முடிவு கட்டினார் . இதற்குப் பொருத்தமான ஆள் ரூபன்தான் எனத் தீர்மானித்தார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பொறுப்பாளராக இருந்த ரூபனை அழைத்து 2001 ஜனவரி யிலிருந்து மீண்டும் திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பை ஏற்குமாறு

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விஜயின் திரையுலக வாழ்வில் மிகப்பெரிய வெற்றியைக் கொடுத்த படம் கில்லி. இப்படம் வெளியாகி 13 வருடங்கள் கழிந்த பின்னரும் அதன் புகழ் இன்னமும் ரசிகர்கள் மத்தியில் உள்ளது.

இந்நிலையில் கில்லி படத்தின் இரண்டாம் பாகத்துக்கான ஸ்கிரிப்ட் தயார் என்றும் விஜய் ஓ.கே. சொன்னால் இயக்குவதற்கு தயாராக இருக்கிறேன் என தரணி கூறியிருக்கிறார்.

விஜய், த்ரிஷா, பிரகாஷ்ராஜ், தரணி இணையும் இந்தக் கூட்டணி சாத்தியமா? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்கலாம்.



அட்லி இயக்கத்தில் விஜய் 61 படத்தில் 3 வேடத்தில் நடிக்கிறார் விஜய். இதில் ஒரு வேடத்தில் தாடி, மீசை இல்லாது கிளீன் ஷேவுடன் நடிக்கிறாராம்.

சத்யராஜ், எஸ்.ஜே. சூர்யா, வடிவேலு, சத்யன், கோவை சரளா எனப் பலர் நடிக்கும் இந்தப் படத்தில் காஜல் அகர்வால், சமந்தா, நித்யா மேனன் ஆகியோர் நாயகிகளாக நடிக்கின்றனர்.

படக்குழு பாடல் காட்சிக்காக விரைவில் வெளிநாடுகளுக்கு பறக்கவுள்ளதாம்.





தீபாவளிக்கு வெளியாகும் என அறிவிக்கப்பட்ட, எந்திரன் -2 படமான 2.0 எதிர்வரும் 2018 ஜனவரி 25 ஆம் திகதியே வெளியாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சங்கரின் இயக்கத்தில் சுப்பர்ஸ்ரார் ரஜினிகாந், எமி ஜாக்சன், அக்ஷய் குமார் ஆகியோர் நடிக்கின்றனர். இதன் படப்பிடிப்புக் காட்சிகள் அனைத்தும் முடிவடைந்த நிலையில், கிராபிக்ஸ் காட்சிகள் தீபாவளிக்கு முன்னர் முடிவடையாது என்பதாலேயே படம் தாமதமாகிறது.

400 கோடி இந்திய ரூபா மதிப்பில் உருவாகும் இந்தப் படம் 3டி, 2டி தொழில்நுட்பங்களிலும் தயாராகி வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் படத்தைத் தயாரிக்கும் லைகா நிறுவனம் இதுவரை தமிழ்ப் படங்கள் வெளியாகாத நாடுகளிலும் 2.0 படத்தை வெளியிட திட்டமிட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுத்திரக்கனி இயக்கி நடித்த அப்பா படம் கடந்தாண்டு வெளியாகி பெரு வெற்றி பெற்றது. இதையடுத்து அவர் இயக்கி நடித்துள்ள படம் 'தொண்டன்'.

சமுத்திரக்கனி, விக்ராந்த், சுனைனா, நூரி, தம்பி ராமையா, கஞ்சா கறுப்பு ஆகியோர் நடித்துள்ள இப்படம் சமூகக் கருத்துக்கள் பல இடம் பெற்றுள்ளன.

படப்பிடிப்பு அனைத்தும் முடிவடைந்துள்ள நிலையில், இதன் வியாபாரம் சூடுபிடித்துள்ளது. இப்படம் வரும் மே 5 ஆம் திகதி திரைக்கு வரும் என எதிர் பார்க்கப்படுகிறது.



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கரின் வாழ்க்கை வரலாறு ஏ பில்லியன் ட்ரீம்ஸ் என்ற படமாக தயாராகியுள்ளது.

சச்சின் டெண்டுல்கரே நாயகனாக நடித்துள்ள இந்தப் படம் தமிழ், ஹிந்தி, தெலுங்கு, ஆங்கிலம், மராத்தி மொழிகளில் மே 26 வெளியாகிறது.

சுப்பர்ஸ்ரார் ரஜினிகாந்த் தனது ருவிற்றரில் "கடவுள் ஆசீர்வதிக்கட்டும் படம் வெற்றி பெற வாழ்த்துக்கள்" என பதிவிட்டுள்ளார். இதையடுத்து சச்சின் "நன்றி தலைவா" என உடன் மறுபதிவிட்டுள்ளார்.



கமலின் கால்ஷீட்டுக்காக பல இயக்குநர்கள் காத்திருக்கின்றனர். ஆனால் அவரோ தனது மகள் ஸ்ருதியின் கால்ஷீட்டுக்காகக் காத்திருக்கிறாராம்.

சபாஷ் நாயுடு படத்தை இயக்கி நடிக்கிறார் கமல். முதல் கட்ட படப்பிடிப்பு நிறைவுள்ள நிலையில், இரண்டாம் கட்டப் படப்பிடிப்பு ஆரம்பமாகவுள்ளது. இதனிடையே எலும்பு முறிவுக்காக சிகிச்சை பெற்ற கமல், தற்போது பூரணமாகக் குணமடைந்து விட்டார்.

ஆனால் அவரின் மகளான ஸ்ருதி தற்போது தமிழ், தெலுங்கு, ஹிந்தி படங்களில் மும்முரமாக நடித்து வருவதால் இப்படத்துக்கு கால்ஷீட் ஒதுக்க முடிய வில்லையாம். இதனால் கமல் அவரின் கால்ஷீட் டுக்காகக் காத்திருக்கிறாராம்.

வற்றிமாறனின் இயக்கத்தில் சென்னை படத்தில் நடித்து றார் தனுஷ். 3 பாகங்களாக ாகும் இந்தப் படத்தில் கியாக நடிக்க சமந்தா தித்திருந்தார்.

ந்த நிலையில் சைதன்யாவுடன் திருமண பதார்த்தம் நடந்ததால் திலிருந்து அவர் கிவிட்டார். இதையடுத்து லாபால் ஒப்பந்தம் யப்பட்டார்.

னால் அவரும் தற்போது திலிருந்து விலகிவிட்டார். ப்படங்கள் கையில் ப்பதாலேயே அமலாபால் கினார் எனக் கூறப்படுகிறது. போது ஐஸ்வர்யா ராஜேஸ் கியாக ஒப்பந்தமாகியுள்ளார்.



விஜய் சேதுபதி நடிக்கும் 25 ஆவது படம் சீதக்காதி. இப்படத்தின் படப்பிடிப்பு கடந்த வாரம் தொடங்கியது. மேடைக் கலைஞராக நடிக்கும் இந்தப் படத்தில் முக்கிய பாத்திரத்தில் இயக்குநர் மகேந்தின் நடிக்கவுள்ளார்.



சுப்பர் ஸ்ரார் ரஜினிகாந்த் மீண்டும் டான் வேடத்தில் நடிக்கவுள்ளார். ரஜினியின் 161 ஆவது படமான இப்படத்தை கபாலி படத்தை இயக்கிய ரஞ்சித் இயக்கவுள்ளார்.

தமிழரான ஹாஜி மஸ்தான் மும்பையில் கடத்தல் மன்னராக இருந்தவர். அதேவேளை திரைப்படத் தயாரிப்பாளராகவும் பொலிவூட் நட்சத்திரங்கள், அரசியல்வாதிகளுக்கு நெருக்கமானவராகவும் இருந்தவர்.

இவரின் கதையை மையமாகக் கொண்டு கற்பனையும் கலந்ததுததானாம் இப்படத்தின் கதை. இப்படத்தை தனுஷ் தயாரிக்கவுள்ளார்.



லொள்ளு சபா புகழ் ஜீவா நடிப்பில் உருவாகியுள்ள "ஆரம்பமே அட்டகாசம்" படம் விரைவில் வெளியாகவுள்ளது.

படத்தின் பாடல்களை சுப்பர் ஸ்ரார் ரஜினிகாந்த் அவரது வீட்டில் வைத்து வெளியிட்டார். இதற்காக அவருக்கு சமூக வலைத்தளம் ஊடாக நன்றி தெரிவித்துள்ளார் நடிகர் ஜீவா.

தற்போது தமிழ் கதாநாயகிகள் பலரும் படங்களில் வாள்வீச்சு, கத்திச் சண்டை, சிலம்பம் எனப் பாரம்பரிய வீர விளையாட்டுக்களில் பயிற்சி பெற்று நடித்து வருகின்றனர்.

சமீபத்தில், பாகுபலி படத்துக்காக அனுஷ்கா, தமன்னா வாள் பயிற்சி பெற்றனர். இதேபோல் ஸ்ருதி சங்கமித்திரா படத்துக்காக சண்டைப் பயிற்சி பெற்றார்.

நடிகை சமந்தா தற்போது சிலம்பம் கற்று வருகிறாராம். இதை அவர் படத்துக்காக பழகவில்லையாம் பொழுதுபோக்குக்காகவே பழகுகிறாராம். விரைவில் திருமண பந்தத்தில் இணையவுள்ள அவர் முன்னேற்பாடாக சண்டைப் பயிற்சி பெறுகிறாரோ...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்கு தூது அனுப்பிய சம்பந்தன்

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

## கூட்டமைப்பும் புலிகளும்

கூறினார். வாக்களிப்பை அதிகரிக்கச் செய்யவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இருவரும் ஆராய்ந்தனர். ஏற்கெனவே 1990 காலப்பகுதியில் இவர் திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளராக இருந்தவர் என்ற வகையில், மாவட்டத்தின் எல்லா மூலைமுடுக்குகளுக்கும் போய் வந்தவர். ஒவ்வொரு கிராமமும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்ன என்பதும் அவருக்குத் தெரியும். பொருண் மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பொறுப்புக் களைக் கையளித்து முடித்து 2001 மார்ச் 4ஆம் திகதி படகு மூலம் இலக்கந்தையில் போய் இறங்க அவரால் முடிந்தது.

போராட்டத்துக்கான விழிப்பூட்டல், பங்களிப்பு என்பவைகளுடன் தேர்தல்களில் தமிழரின் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாப்பதும் எல்லோரது முக்கிய கடமை என்பதை வலியுறுத்துமாறு பிரதேசப் பொறுப்பாளர்களை ரூபன் வேண்டிக்கொண்டார். பிரபாகரனுக்கு ஏற்கெனவே கிடைத்த அறிக்கைகளை உறுதிப்படுத்துமாற்போல வெகு சீக்கிரமே நாடாளுமன்றம் கலைக் கப்பட்டது. அடுத்த தேர்தல் 2001 டிசெம்பர் 5 ஆம் திகதி என அறிவிக் கப்பட்டது.

**ரூபன் - சம்பந்தன் ஐயா சந்திப்பு !**

இந்நிலையில் புலிகளைச் சந்திக்க (குறிப்பாக ரூபனை) சம்பந்தன் ஐயா செய்தி அனுப்பினார். ஓய்வு பெற்ற கிராம சேவை அலுவலரும், இனப்பற்றாளரும், சமாதான நீதிவானும் தமிழரசுக் கடசியின் நீண்டகால உறுப்பினருமான குணநாயகம் என்பவரையே தமது தூதுவராக 22.10 .2001 அன்று அவர் அனுப்பியிருந்தார். அவரது வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக ரூபன் பதிலளித்தார். அடுத்த நாள் 23.10.2001 அன்று குணநாயகத்துடன் சம்பந்தன் ஐயா புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்றார். கட்டைபறிச்சானில் இருந்த இராணுவக் காவலரணில் தெரிவித்துவிட்டு தனது வாகனத்திலேயே பயணமானார். துரைரட்ணசிங்கம் மாஸ்டரின் சகோதரர் செல்வரட்ணத்தின் இல்லத்திலேயே இந்த முதல் சந்திப்பு இடம்பெற்றது.

சம்பந்தன் ஐயாவுடன் கூடச் சென்ற குணநாயகம் அவர்களையும் வேட்பாளர் பட்டியலில் இடம்பெறச் செய்வது நல்லது என்ற கருத்து ஏற்கெனவே சிலரால் ரூபனிடம் முன்வைக்கப்பட்டிருந்தது. அவரை விடத் துரைரட்ணசிங்கம் மாஸ்டரை வேட்பாளர் பட்டியலில் இடம்பெறச் செய்வது கூடுதல் பயனை அளிக்கும் என்ற கருத்தை ரூபன் முன்வைத்தார். துரைரட்ணசிங்கம் மாஸ்டர் சேனையூரிலேயே இருப்பவர். எதாவது விடயமென்றால் அவரைத் தொடர்பு கொள்வது இலகு எனச் சுட்டிக் காட்டினார். இதனைச் சம்பந்தன் ஐயாவும் ஏற்றுக்கொண்டார். “ஏனைய கட்சிகளில் வேட்பாளராக யாரைப்போட்டாலும் எமக்குப் பிரச்சினை இல்லை - உங்களது சேவை எமது இனத்துக்குத் தேவை. எனவே திருமலையில் முதல் இரு இடங்களிலும் நீங்களும் துரைரட்ணசிங்கம் மாஸ்டருமே வரவேண்டும். இதுசம்பந்தமாகத் தலைவருடனும் உரையாடியுள்ளேன். அவரது விருப்பமும் இதுதான்” எனச் சொன்னார் ரூபன். தொடர்ந்து பரப்புரைகள் தொடர்பான விடயங்கள் பற்றிக் கலந்துரையாடப்பட்டன.

குளக்கோட்டன் எனும் புனை பெயரில் ரூபன் தனது கையெழுத்தில் சிலவிடயங்களைக் குறிப்பிட்டுத் துண்டுப் பிரசுரங்களைத் தயாரித்தார். இவற்றைப் புலிகளின் பகுதி தவிர்ந்த மாவட்டத்தின் ஏனைய இடம் முழுவதற்கும் அச்சிட்டு விநியோகிக்கும் பொறுப்பைச் சம்பந்தன் ஐயா ஏற்றுக்கொண்டார். தேவைக்கேற்றபடிமேலும் ஒரு சில சந்திப்புகள் ரூபன் - சம்பந்தன் ஐயாவுக்கு இடையில் நிகழ்ந்தன. இத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி 56,121 வாக்குகளைப் பெற்றது. 2000 தேர்தலில் 14,090 வாக்குகளைப் பெற்றுத் தோல்வியடைந்த கட்சி 2001 இல் இவ்வளவு வாக்குகளையும் பெற்றதென்றால் அதற்குப் பிரபாகரனின் முடிவும் ரூபன் தலைமையிலான அரசியற் போராளிகளின் உழைப்புமே காரணம். சம்பந்தன் ஐயா 40,111 விருப்பு வாக்குகளைப் பெற்றார். அவரே எம்.பியானார். அடுத்து 28 ஆயிரத்துக்கு அதிகமான வாக்குகளைத் துரைரட்ணசிங்கம் மாஸ்டர் பெற்றார். அதுவரை அரசியலில் பெருமளவு



ஆர்வமில்லாதிருந்த இவர் தனது முதல் தேர்தலிலேயே இவ்வளவு வாக்குகளைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**ரூபனின் கோரிக்கையை ஏற்ற சம்பந்தன் ஐயா !**

இத்தேர்தல் மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்தைப் பெற்றது. கட்சித்தலைவர் மு.சிவசிதம்பரம் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். எனினும் சிறிது காலத்துக்குள் இவர் மரணமடையவே இவரது இடத்தைத் துரைரட்ணசிங்கம் மாஸ்டருக்கு வழங்குமாறு சம்பந்தன் ஐயாவிடம் ரூபன் வேண்டிக்கொண்டார். அவரது வேண்டுகோளுக்கு மதிப்பளித்தார் சம்பந்தன் ஐயா. 11.07.2002 அன்று பதவிப் பிரமாணம் செய்து எம்.பி. ஆனார் துரைரட்ணசிங்கம்

ஆனால் என்ன ஆயிற்று? கடந்த பொதுத்தேர்தல் காலத்தில் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் சம்பந்தன் ஐயாவும் மக்களுமே தன்னை அரசியலுக்கு அழைத்து வந்ததாக அவர் குறிப்பிட்டார். மறந்தும் கூட புலிகள் என்றோ ரூபன் என்றோ உச்சரிக்கவில்லை

**புலிகளுக்குச் சம்பந்தமில்லை - சம்பந்தன் ஐயா**

17.04.2015 அன்று வசந்தம் தொலைக்காட்சிக்கு அளித்த நேர்காணலில் “கூட்டமைப்பு என்பது புலிகளின் தலையீட்டுடன்தான் ஆரம்பிக்கப்பட்டது என்ற உண்மையை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?” என்ற கேள்வி சம்பந்தன் ஐயாவின் முன் வைக்கப்பட்டது . அதற்கு “உங்களது கேள்வி விசித்திரமானது. என்னைப் பொறுத்தவரையில் அவ்விதமான சம்பந்தம் இருந்ததாக எனக்குத் தெரியாது. என்னுடைய மாவட்டத்தில் எவ்விதமான சம்பந்தமுமில்லை. வெவ்வேறு மாவட்டங்களில் சம்பந்தம் இருந்ததோ எனக்குத் தெரியாது. அவர்கள் மூலமாகத்தான் இது ஏற்பட்டது என்பதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது” எனப் பதிலளித்தார் சம்பந்தன் ஐயா.

முதுமைகாரணமாக அவருக்கு மறதி ஏற்பட்டதா? சாத்தியமுண்டு. 1977 இல் தந்தை செல்வாவின் சமாதியில் “தமிழீழ இலட்சியத்தைக் கைவிடமாட்டேன்” என்று கூடத்தான் சத்தியம் செய்தார். அப்போது இளமையோடு நல்ல நினைவாற்றலோடுதான் இருந்தார். அதையே மறந்தவர் இதையா மனதில் வைத்திருப்பார்?” என்று யாராவது கேட்டால் அதற்குப் பதிலளிக்கிறார் கவுண்டமணி - “அரசியல்ல இதெல்லாம் சாதாரணமப்பா” - அதை ஆமோதிப்பார் துரைரட்ணசிங்கம் மாஸ்டர்.

சம்பந்தன் ஐயா வழங்கிய இந்தப் பேட்டியில் மேலும் ஒரு விடயம் கவனத்துக்குரியது. “நான் நிச்சயமாக எல்.ரி.ரி.ஈயினரால் கூட்டமைப்பின் தலைவராக நியமிக்கப்படவில்லை. அதை நான் நிச்சயமாகச் சொல்வேன். 2004ஆம் ஆண்டு தேர்தலின் பின் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப் பட்ட எம்.பிக்களே கூட்டமைப்பின் தலைவராக என்னைத் தேர்வு செய்தார்கள்” எனக் குறிப்பிட்டார் அவர்.

**வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்த புலிகள்**

தன்னைத் தேர்ந்தெடுக்குமாறு புலிகளிடம் சம்பந்தன் ஐயா கூறியிருக்க மாட்டார்தான். ஆனால் இவரைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும் - அதுதான் புலிகளின் விருப்பம் - எதிர்பார்ப்பு என்று புலிகளுடனான கலந்துரையாடல்களில் தெரிந்து செயற்பட்டார்கள். கூட்டமைப்பு உறுப்பினர்கள். அதை மறுக்க முடியாது . 2004 தேர்தலில் யார் யார் போட்டியிடவேண்டும் என்பதையே புலிகள்தான் தீர்மானித்தார்கள். தமது கட்சியின் சார்பில் யார் யார் போட்டியிடுவது எனக் கட்சிகள் புலிகளிடம் பட்டியலைக் கொடுத்தன. இவற்றில் யார் யார் போட்டியிட முடியாது போன்ற விடயங்களை ஏற்கனவே 2001 தேர்தலிலேயே புலிகள் தெரிவித்து விட்டார்கள் . (ரெலோவில் ஜனா, ஈ.பி.ஆர்.எல்.எவ்வில் இரா. துரைரத்தினம்) இத்தேர்தலில் தமது சார்பாக சிலரது பெயர்களைப் புலிகள் வேட்பாளர் பட்டியலில் சேர்த்திருந்தனர்.

அவ்வாறானவர்களில் அம்பாறையிலிருந்து பத்மநாதன், வன்னியிலிருந்து சதாசிவம் கனகரத்தினம், சிவநாதன் கிஷோர், மட்டக்களப்பிலிருந்து கனகசபை, ஜெயானந்தமூர்த்தி, தங்கேஸ்வரி கதிராமன், கிங்ஸ்லி இராசநாயகம், யாழ்ப்பாணத்திலிருந்து கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், சிவநேசன் ஆகியோர் தெரிவாகினர். இவர்களில் பத்மநாதனின் மறைவைத் தொடர்ந்து டாக்டர். வில்லியமும், கிங்ஸ்லி இராசநாயகம் ராஜினாமா செய்ததால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு பாக்கியசெல்வம் அரியநேத்திரனும், சிவநேசனின் படுகொலையை அடுத்து சொலமன் சூ.சிறிலும் தெரிவாகினர். தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து சம்பந்தன் ஐயா, துரைரட்ணசிங்கம், மாவை சேனாதிராசா, ரவிராஜ் ஆகியோர் தெரிவாகினர். ரெலோவிலிருந்து செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம், சிவாஜிலிங்கம் ஆகியோர் தெரிவாகினர். ரவிராஜின் மரணத்தைத் தொடர்ந்து ரெலோ பிரமுகர் ஸ்ரீகாந்தா எம்.பியானார். தமிழ்க் காங்கிரசின் சார்பில் கஜேந்திரகுமார் தெரிவானார். இக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட சீ.வீ.கே.சிவஞானம், விநாயகமூர்த்தி செந்தில்நாதன் ஆகியோர் தோல்வி அடைந்தனர். ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன்,சிவசக்திஆனந்தன் ஆகியோர் தெரிவாகினர். இதற்குப் புறம்பாக ஜோசப் பரராஜசிங்கம் ஈழவேந்தன் ஆகியோரைத் தேசியப் பட்டியல் மூலம் எம்.பிக்களாக்கும் முடிவைப் பிரபாகரன் எடுத்தார். ஜோசப் பரராஜசிங்கத்திற்கு கருணாவால் ஏற்பட்ட நெருக்கடியைத் தொடர்ந்து அவரை அமைதியாக இருக்குமாறும், தேசியப்பட்டியல் மூலமேனும் எம்.பி யாக்குவோம் என்ற உறுதி மொழியைத் தமது உறுப்பினர்கள் மூலம் தெரியப்படுத்தினார். ஜோசப் ஐயாவின் மரணத்தைத் தொடர்ந்து இமாமையும், ஈழவேந்தனின் பதவி இழப்பைத் தொடர்ந்து சந்திரகாந்தனையும் எம். பிக்களாக்கும் முடிவையும் தமது உறுப்பினர்களின்வேண்டுகோளின் பெயரில் பிரபாகரனே எடுத்தார். இப்படியிருக்க, புலிகள் என்னைத் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக நியமிக்கவில்லை. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களே நியமித்தனர் என்றால் அர்த்தம் என்ன?

ஈழநாதத்தின் வார வெளியீடான வெள்ளி நாதத்தில் பிரமுகர்களின் சுயவிவ ரங்கள் அவர்களின் ஓவியங்களுடன் வருவதுண்டு இவ்வாறான பிரமுகர்களில் சம்பந்தன் ஐயாவும் ஒருவர்.

“சம்பந்தா சம்பந்தமில்லாமல் பேசுவதில் சம்பந்தனுக்கு நிகர் எவருமில்லை” எனக் குறிப்பிட்டு இருந்தமைதான் நினைவுக்கு வருகிறது .


யுத்தம் முடிவடைந்ததும் யாழ்ப் பாணத்தில் நடைபெற்ற மே தின நிகழ்வில் ரணிலுடன் சேர்ந்து சிங்கக் கொடியை காட்டினார் சம்பந்தன் ஐயா.

இது பற்றிக் கேட்டதற்கு “நான் பத்திரகாளியின் பக்தன். அதனால் தான் சிங்கக்கொடியைக் காட்டினேன்” எனப் பதிலளித்தார் அவர். சமாதான காலத்தில் திருமலையில் நிகழ்ந்த பொது வைபவமொன்றில் புலிக்கொடியை ஏற்றியவரும் அவரே. அதைப்பற்றி இப்போது கேட்டால் “அப்போது நான் ஐயப்பனின் பக்தனாக இருந்தேன்” என அவர் விளக்கம் அளிக்கக் கூடும்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலத்தில் குதிரைப் பந்தயங்கள்


© Getty Images

சிட்னி நகரம் அவுஸ்திரேலியாவின் அழகிய ஒரு நகரம். இந்த நகரம் என்றால் மனதில் உடன் வந்து போவது அதன் பாலம்தான். வாகனப் போக்குவரத்து என்று மட்டுமே இருந்த இந்தப் பாலத்தில் புதிதாக ஒன்று முளைக்கப் போகின்றது. இங்குள்ள ஆங்கிலப் பத்திரிகை ஒன்றின் செய்தியின்படி இந்தப் பாலத்தில் குதிரை ஓட்டப் பந்தயங்கள் நடக்கப் போகின்றன என்று சொல்லப்படுகின்றது.

இந்த ஆண்டு ஒக்ரோபரில் இடம்பெறவுள்ள உலகின் அதி பணக்காரத்தனமான குதிரைப் பந்தயப் போட்டிகள் நடக்கும் அதே தினமன்று இந்தப் பாலத்திலும் குதிரைகள் ஓடப் போகின்றன என்று அந்தச் செய்தி மேலும் கூறுகின்றது.

10மில்லியன் டொலர் பரிசுத் தொகை சம்பந்தப்பட்ட எவரெஸ்ட் என்னும் இப்போட்டி இடம் பெறும் நாளன்று இப்பாலத்தின் வாகன ஓட்டத்தை ஒரு நாள் முற்றாக நிறுத்திவிட்டு அங்கு பந்தயத்தை நடத்துவதே திட்டமாம்.

2009ஆம் ஆண்டிலும் இப்படி ஒரு முறை முழுநாளும் வாகனப் போக்கு வரத்து நிறுத்தப்பட்டு, உணவுகள் பரிமாறப்பட்டு ஓர் உல்லாசப் பொழுது கழிக்கப்பட்டது.

இரு ஆங்கிலேய நிறுவனங்கள் குதிரைகள் ஓடுபதையை அமைக்கும் பொறுப்பை கையேற்றுள்ளன. லண்டன் மாநகரிலும் இதேபோல பாலங்களில் பந்தயங்கள் நடத்த இந்த நிறுவனங்கள் திட்டமிட்டுள்ளன.

ரி-20 எனப்படும் 20ஓவர் கிரிக்கெட் எப்படி கிரிக்கெட் உலகில் புரட்சி செய்துள்ளதோ அப்படி இந்தப் பாலம் மீதான குதிரைப் பந்தயங்கள் பெரும் புரட்சி செய்யப்போகின்றன என்கிறார்கள் ஏற்பாட்டாளர்கள்.

காலம் மாறுகின்றது. காலத்துக்கு ஏற்ற கோலம் போட்டால்தான் பலரையும் கவரலாம் என்பது இவர்களுக்கு நன்றாகவே தெரியு

**புதினப்பூங்கா**
ராஜேஷ்மணாளன்

# மிரளவைக்கும் நடைபாதை



மனிதர்களுக்கு ஆபத்தோடு விளையாடுவதில் ஆர்வம் இருக்கவே செய்கின்றது. ஆபத்தானது என்று தெரிந்தும் அதைச் செய்ய முனைவது பலரின் சுபாவம் என்று சொல்வோமா ?

உலகிலேயே மிகவும் ஆபத்தான நடைபாதை ஒன்றை உல்லாசப் பயணிகளுக்காக திறந்து வைக்கப் போகிறார்கள். ஆற்றுக்கு மேலாக 330அடி உயரத்தில் இந்த நடைபாதை இருக்கும். ஸ்பெயின் நாட்டில்தான் இந்தப் பாதை இருக்கின்றது. El Caminito del Rey என்று இங்கு அழைக்கப்படும் இந்தப் பாதை 1999க்கும் 2000இற்கும் இடையில் ஐவரைப் பலிகொண்டதால் பாதை மூடப்பட்டு மீண்டும் 2015இல் திறந்து வைக்கப்பட்டது. மீண்டும் இப் பாதை மீது கவனம் செலுத்தப்பட்டு 5.5மில்லியன் யூரோ பணம் செலவிடப்பட்டு பலவழிகளிலும் இப் பாதை பாதுகாப்பானதாக மாற்றப்பட்டுள்ளது.

இப்பொழுது உல்லாசப் பயணிகள் இங்கு நிறைய வருகிறார்களாம். ஒரு நாளில் இங்கு 1100 பேருக்கு மேல் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

இந்த வசந்த காலத்தில் ஏப்ரல் 22தொடக்கம் இந்தப் பாதை திறந்து வைக்கப்பட்டிருக்கும் என்கிறார்கள். இதற்கான நுழைவுச் சீட்டை 10யூரோ கொடுத்து 18தொடக்கம் வருடம் முடியும் வரை வாங்க முடியும் என்று சொல்லப்படுகின்றது. நான்கு மைல் நீளமான இந்த நடை பாதை செவ்வாயிலிருந்து வெள்ளி வரை திறந்திருக்கும்.

தற்போதைய புனர்நிர்மாணப் பணிகளுக்கு முன்பு சாகச விரும்பிகளே இந்தப் பாதையை நடந்து கடந்துள்ளார்கள். பாதுகாப்பு விதிகள் பல இருந்தும், அத்து மீறினால் பெரும் தொகை தண்டப்பணம் செலுத்த வேண்டும் என்று அறிவித்திருந்தாலும் 14 வருடங்களாக ஆபத்தோடு விளையாடுவது தொடர்ந்தபடிதான் இருந்துள்ளது . சிப்ஸ் சுகாதாரத்துக்கு கேடானது என்று தெரிந்தும் முண்டியடித்துக் கொண்டு வாங்குகிறார்களே, அப்படி ஒரு சமாச்சாரம்தான் இது !

# கொறிக்கும் உணவா? கொல்லும் உணவா?



ஒரு பக்கெற் சிப்ஸ் வாங்க சுமாராக 2000 ரூபா வேண்டும் என்று கூறினால் அதை நீங்கள் நம்பத் தயாரா ?

இது கட்டுக்கதை அல்ல உண்மை. ஆனால் ஜப்பானில்தான் இந்த விலையை நீங்கள் கொடுத்தாக வேண்டும். கொறிப்பதற்கு சிப்ஸ் தேடி கடை கடையாக ஏறி இறங்குகிறார்களாம் சிப்ஸ் பிரியர்கள். இந்தத் தட்டுப்பாட்டு நிலையில் அங்கு ஒரு பக்கெற் 1250 யென்னுக்கு விற்பனையாகிறதாம். ஏறத்தாழ பத்து மடங்கு விலை.

என்ன காரணம் ? கிழங்குத் தட்டுப்பாடுதான்.

ஜப்பானுக்கு தேவைப்படும் கிழங்கின் தொகையில் 80வீதமான அளவை வட ஜப்பானின் கொக்கைடோ பிரதேசமே உற்பத்தி செய்து வருகின்றது. இந்தப் பிரதேசம் கடந்த வருடம் சூறாவளியினாலும் தாக்கப்பட்டதே இந்தத் தட்டுப்பாட்டுக்குக் காரணம் என்கிறார்கள்.

நாட்டுக்குத் தேவையான கிழங்கின் 15வீதத்தை ஒரு ஜப்பானிய நிறுவனம் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்து வருகின்றது. இது இந்த நிலைமையை எப்படிச் சமாளிக்கப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

பல்வேறு சுவைகளோடு சிப்ஸ் தயாரிக்கும் நிறுவனங்கள் பல ரகங்களின் உற்பத்தியை அடியோடு நிறுத்தி விட்டன.

பல சுப்பர் மார்கெட்டுகளில் பெயருக்குக் கூட சிப்ஸ் கிடையாது.

இப்படி அலைகிறார்களே. நிஜத்தில் சிப்ஸ் ஓர் ஆரோக்கியமான உணவல்ல, கலோரி அதிகம் கொண்ட இந்தக் கொறியல் உணவில் கொழுப்பு அதிகம்.

15 தொடக்கம் 20 வரையிலான சிப்ஸ் நீங்கள் சாப்பிட்டால் 10கிராம் கொழுப்பு உங்கள் உடம்பில் சேர்ந்து விடும். உங்களைக் குண்டாக்குவதில் பலே கில்லாடி இந்தச் சிப்ஸ். இந்தப் பொல்லாத உணவுக்கு ஏன் இத்தனை அடிபாடு? எதிலுமே பொல்லாதவற்றுக்குத்தான் கவர்ச்சி அதிகம் போலும்.

# திணறும் எவரெஸ்ட்

உயர்ந்து இருப்பது என்றுமே பெருமைக்குரியது. இந்தப் பெருமையால் உலகின் அதி உயர எவரஸ்ட் மலை ஆண்டுக்கு ஆண்டு பல ஆயிரக்கணக்கானவர்களை தன்பால் இழுத்து வருகின்றது. எப்படியாவது இதன் மலை உச்சியை அடைந்து விடவேண்டும் என்பதுதான் அந்த ஆசை.

தெருக்களில் வாகன நெரிசல் போல இப்பொழுது எவரெஸ்ட் மலையிலும் அதிகமான ஆள் புழக்கத்தால் சிக்கல் உருவாகி இருக்கின்றது.

கடந்த வருடத்தோடு ஒப்பிடும்போது இந்த வருடம் இங்கு மலையேற வந்தவர்கள் தொகை அதிகமாகி இருப்பதாகக் கூறுகின்றது உல்லாசப்பயணத்துறை.

காலநிலை சீராக இருந்து அனுமதித்தால் மே மாத நடுப்பகுதியில் மலை ஏறும் பயணம் ஆரம்பித்து விடும். ஆனால் ஒரு மாத காலத்துக்கு மலையடிவாரம் மலை ஏறுபவர்களால் நிறைந்து போயுள்ளதாக ஹிமாலயன் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. 2014இல் இங்கு பனிச்சரிவு ஏற்பட்டதன் காரணமாக அந்த ஆண்டு பதிவு செய்தவர்கள் மலையேற முடியவில்லை. அவர்களும் இந்த ஆண்டு இங்கு வந்திருப்பது தொகை அதிகரிக்க ஒரு காரணம் என்கிறது செய்தி.

2015இல் நேபாள அரசு மலையேறுபவர்களுக்கு 3வருடங்கள் உபயோகிக்கும் வகையில் ஒரு அனுமதிப் பத்திரத்தை வழங்கும் முறையை அறிமுகப்படுத்தி இருந்தது.

8848 மீற்றர் உயரமான எவரெஸ்ட் மலை உச்சியை அடைய 400 பேர் வரையில் காத்திருப்பதாகச் சொல்லப்படுகின்றது. இவர்களோடு வழிகாட்டிகளும் இணைவதால் 1000 பேர் வரையில் மலை உச்சிக்கான பாதையை நிறைக்கலாம் என்று காத்மாண்ட் போஸ்ட் பத்திரிகை கருத்து தெரிவித்துள்ளது. ஏற வந்தவர்கள் தொகையை விட அவர்களுடன் கூடச் செல்பவர்கள் தொகை எப்பொழுதுமே அதிகமாக இருப்பது வழமை.


மலையேற வந்தவர்களில் இதுவரையில் 280பேருக்கு மேல் உயிரிழந்துள்ளார்கள். 1977இல் மாத்திரம் எவருமே உயிரிழந்ததாகத் தெரியவில்லை. ஆனால் இருவர் மாத்திரமே உச்சி வரை சென்று திரும்பினார்கள்.

8000மீற்றர் உயரத்தை தாண்டியதும் இந்த மலை உச்சி எவருக்குமே மரணப் பொறிதான். ஒட்சிசன் அதிகம் தேவை என்பதால், இங்கு நிற்கும்போது மூச்சுத் திணறல் அதிகம். அதிக நேரம் நின்றால் மூர்ச்சை இழந்து மரணிக்க வேண்டிவரும்.

ஆபத்தோடு விளையாடுவதுதான் மனித சுபாவம் இல்லையா ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சசிகலா சாம்ராஜ்ஜியம்: சரிந்த சரித்திரம்

ஜோ.ஸ்டாலின்

**33** ஆண்டு காலம்... அ.தி.மு.கவிலும், அதன் ஆட்சிகளிலும், அந்தக் கட்சியின் இரும்புப் பிம்பமாகத் திகழ்ந்த ஜெயலலிதா வசித்த போயஸ் கார்டன் இல்லத்திலும் தன்னிகரற்ற ஆதிக்கம் செலுத்தியவர் சசிகலா.

அந்த ஆதிக்கத்துக்கு ஆரம்பத்தில் பாதை போட்டுக் கொடுத்தார் சசிகலாவின் கணவர் நடராசன். அந்தப் பாதையில் அடிபிசகாமல் பயணித்தார் சசிகலா. அதன் விளைவு, 'சசிகலா குடும்பம்' என்ற முத்திரையோடு, சக்தி வாய்ந்த ஒரு கூட்டம் தமிழகத்தில் உருவானது. அரசியல், அதிகாரம், தொழில்கள், வியாபாரம் என அனைத்திலும் அந்தக் குடும்பம் ஆதிக்கம் செலுத்தியது. அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் தங்களுக்கு எனத் தனித்தனி ராஜ்ஜியங்களை உருவாக்கி ஆட்சி நடத்தினர். 33 ஆண்டு காலம் மெல்ல மெல்ல எழுப்பப்பட்ட அந்த சாம்ராஜ்ஜியங்கள் அனைத்தும், கடந்த மூன்று மாதங்களில் மளமளவென சரிந்து விழுந்தன.

'சின்னம்மா' என்று அழைக்கப்பட்ட சசிகலா, சிறைக்குள் அடைபட்டுக்கிடக்கிறார். "நாங்கள் குடும்ப ஆட்சிதான் நடத்துவோம்... எங்கள் குடும்பத்தின் ஆட்சிதான் தமிழகத்தில் நடக்கும்" என்று சொன்ன நடராசன், மருத்துவமனைக்கும் வீட்டுக்கும் அலைந்து கொண்டிருக்கிறார். "டெல்லியின் சூழ்ச்சிகளை ஒரு நொடியில் தூள் தூளாக்கினோம்" எனப் பெருமை பேசிய திவாகரன் மர்ம மௌனத்தில் தவிர்க்கிறார். ஜெயலலிதாவின் உடல் அடக்கம் நடந்த அன்று சைரன் வைத்த காரில் பறந்த மகாதேவனை, மரணம் அழைத்துக்கொண்டது. 'இனி, கட்சியும் ஆட்சியும் தன் கட்டுப்பாட்டில்தான் இருக்க வேண்டும்' என்ற எண்ணத்தில் குடும்ப உறவுகளையே ஒதுக்கிவைத்த தினகரனை, அ.தி.மு.க அமைச்சர்கள் ஒதுக்கிவிட்டனர். ஐ.டி துறை அடுத்தடுத்து நடத்திய ரெய்டுகளால் டாக்டர் வெங்கடேஷ், குளிர் காய்ச்சலில் உறைந்துவிட்டார். "தற்போது, அ.தி.மு.க என்ற கட்சியில் அந்தக் குடும்பத்தின் பிடி அறவே இல்லை" என்கிறார்கள் மூத்த அமைச்சர்கள். ஆட்சி அதிகாரத்தில் அவர்களால் ஒரு துரும்பைக்கூட அசைக்க முடியாது என்ற நிலை உருவாகிவிட்டது. எங்கே தொடங்கியது இந்த வீழ்ச்சி?

### மோடியின் நேர்ஸையே மிரட்டிய சசிகலா

2011 ஆம் ஆண்டு, தமிழகத்தில் ஜெயலலிதாவின் ஆட்சி. அந்த நேரத்தில் குஜராத்தில் நரேந்திர மோடியின் ஆட்சி. அரசியலைத் தாண்டி ஜெயலலிதாவும் மோடியும் அக்கறையான நண்பர்களாக இருந்தனர். அந்த வகையில், ஜெயலலிதாவின் உடல்நிலையைக் கவனித்துக்கொள்ள குஜராத்தில் இருந்து நேர்ஸ் ஒருவரை போயஸ் தோட்டத்துக்கு அனுப்பி வைத்தார் மோடி. ஜெயலலிதாவின் டயட், உடற்பயிற்சி ஆகியவற்றை அந்த நேர்ஸ் கவனித்துக்கொண்டார். திடீரென ஒருநாள், மோடியின் அலுவலகத்தைத் தொடர்புகொண்ட அந்த நேர்ஸ், "என்னால் இங்கு இருக்க முடியாது. இந்த வீட்டில் உள்ள இரண்டு பெண்கள் என்னை மிரட்டுகிறார்கள். என் வேலையைப் பார்க்க அவர்கள் விடுவதில்லை" என்று புகார் வாசித்தார். மோடியின் கவனத்துக்கு அந்தப் புகார் போனது. உடனடியாகத் தொலைபேசியில் ஜெயலலிதாவைத் தொடர்புகொண்டார் மோடி. "நான் அனுப்பிய நேர்ஸை அங்கே யாரோ இரண்டு பெண்கள் மிரட்டுகிறார்களாமே... யார் அவர்கள்?" என்று ஜெயலலிதாவிடம் விசாரித்தார். அந்தப் பெண்கள் சசிகலாவும் இளவரசியும்தான் என்பது ஜெயலலிதாவுக்குத் தெரியும். ஆனால், அவர் அதை மோடியிடம் தெரிவிக்கவில்லை. "நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று சொன்ன ஜெயலலிதா, அதன் பிறகு அந்த நேர்ஸைத் திருப்பி அனுப்பிவிட்டார்.

பிறகு, அந்தப் பெண்களில் ஒருவர் சசிகலா என்று மோடி தெரிந்துகொண்டார். சசிகலாவைப் பற்றி அவர் மனதில் நெகட்டிவ் பிம்பமே பதிந்தது. அடுத்தடுத்த நிகழ்வுகளும் மோடியின் எண்ணத்துக்கு வலுச் சேர்ப்பதாகவே நடந்தன. அதன் ஒட்டுமொத்த எதிர்வினையாக, சசிகலாவின் ராஜ்ஜியம் தற்போது சரிக்கப்பட்டுவிட்டது.

### சசிகலாவுக்கு விழுந்த முதல் அடி

2016 செப்ரெம்பர் 22 ஆம் திகதி அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சைக்காக ஜெயலலிதா அனுமதிக்கப்பட்டார். அதற்கு மறுநாளே, அப்போலோ மருத்துவமனையை சசிகலாவின் குடும்ப உறவுகள் ஆக்கிரமித்துக்கொண்டன. அவர்கள் அனைவரும் ஏற்கெனவே ஜெயலலிதாவால் துரத்திவிடப்பட்டவர்கள். கட்சியும் ஆட்சியும் சசிகலாவின் கட்டுப்பாட்டிலேயே இருந்தன. அந்த அசாதாரண சூழலைப் பயன்படுத்திக்கொள்ள நினைத்த பி.ஜே.பி., ஆட்சிக்கலைப்பு என்ற கோஷத்தை தமிழகத்தில் பரவவிட்டது.

பி.ஜே.பியின் முயற்சியை முறியடிக்க நினைத்த சசிகலாவின் கணவர் நடராசன், ராகுல் காந்தியை அழைத்துவந்து அப்போலோ மருத்துவமனை முன்னால் நின்று பேட்டி கொடுக்கவைத்தார். "இந்த இக்கட்டான நேரத்தில் எங்கள் ஆதரவை தெரிவிக்கவே வந்தேன்" என்றார் ராகுல் காந்தி. ஜெயலலிதாவைப் பார்க்கவந்த முதல் அகில இந்தியத் தலைவர் அவர்தான்.

அந்தக் கணமே அ.தி.மு.க-வை அழித்தொழிக்கும் வேலைகளை வேகமாகத் தொடங்கினார் பி.ஜே.பியின் தேசியத் தலைவர் அமித் ஷா. சசிகலாவின் குடும்பத்தை அகற்றினால் மட்டுமே அ.தி.மு.கவைத் தங்கள் இஷ்டத்துக்கு ஆடவைக்க முடியும் என்று பி.ஜே.பி. முடிவு செய்தது. விறுவிறுவெனக் காய்கள் நகர்த்தப்பட்டன. ஜெயலலிதா மரணம் அடைந்துவிட்டார் என்ற தகவல் டெல்லியை எட்டியதும், மத்திய அமைச்சர் வெங்கைய நாயுடு சென்னைக்கு வந்தார். அவருடைய தலைமையில், சசிகலாவுக்கு முதல் தலைவலி ஆரம்பித்தது. 'எடப்பாடி பழனிசாமியை முதல்வர் ஆக்க வேண்டும்' என்பது சசிகலாவின் எண்ணமாக இருந்தது. அதற்கு முட்டுக்கட்டை போட்டார் வெங்கைய நாயுடு. அதன் பிறகு, வேறு வழியில்லாமல் பன்னீர்செல்வத்தையே முதல்வர் ஆக்கினார் சசிகலா. ஜெயலலிதா மரணம் அடைந்த பிறகு, சசிகலா எடுத்துவைக்க நினைத்த முதல் அடியிலேயே அவருக்கு அடி விழுந்தது.

### குடும்பத்துக்குள் குத்துவெட்டு

'ஜெயலலிதா மரணம் அடைந்துவிட்டார். இனி சசிகலாதான் எல்லாம்' என்று அவருடைய குடும்பத்தின் குட்டி ராஜாக்கள் நினைத்தனர். சசிகலாவோடு இருந்து கட்சியையும் ஆட்சியையும் கட்டுப்படுத்த திவாகரன், மகாதேவன், பாஸ்கரன், தினகரன், டாக்டர் வெங்கடேஷ் என ஆளாளுக்குப் போட்டிபோட்டனர். அமைச்சர் விஜயபாஸ்கரை முதல்வர் பன்னீர்செல்வத்திடம் தூது அனுப்பி, சசிகலாவை கட்சியின் பொதுச்செயலாளராக முன்மொழியவைத்தார் திவாகரன். பன்னீர்செல்வமும் அப்படியே செய்தார். சசிகலா பொதுச் செயலாளர் ஆனதும், தினகரனும் டாக்டர் வெங்கடேஷும் கைகோத்துக்கொண்டனர். சசிகலாவை அவர்கள் இருவரும் தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். திவாகரன், பாஸ்கரன், மகாதேவன் என அனைவரையும் ஒதுக்கிவைத்தனர். நடராசனால் இவர்கள் இருவரையும் கட்டுப்படுத்த முடியவில்லை. அதற்கு, அவருடைய உடல்நிலை ஒத்துழைக்கவில்லை. பன்னீர்செல்வத்திடம் இருந்து பதவியைப் பறிக்க தினகரனும், டாக்டர் வெங்கடேஷும் சசிகலாவைத் தூண்டினார்கள். இவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த சசிகலா, அவர்கள் சொன்னதை அப்படியே செய்தார். பன்னீர்செல்வத்திடம் ராஜினாமா கடிதம் எழுதி வாங்கப்பட்டது. பன்னீர்செல்வத்துக்கு பி.ஜே.பி கொடுத்த முதல்வர் பதவியை, தினகரனும் டாக்டர் வெங்கடேஷும் சசிகலாவை வைத்துப் பறித்தனர்.

### ஒபரேஷன் சசிகலா

மத்தியில் இருக்கும் பி.ஜே.பி அரசு, சசிகலா குடும்பத்தின் இந்தச் செயலால் கொதித்துப்போனது. 'ஒப்பரேஷன் சசிகலா' ஆரம்பமானது. புதிய புகார்கள், புதிய வழக்குகள், புதிய சிக்கல்கள் எதுவும் தேவைப்படவில்லை. எல்லாவற்றுக்கும் 1991 - 96 காலகட்டத்தில் சசிகலாவும், அவருடைய குடும்பமும் செய்த காரியங்களே போதுமானவையாக இருந்தன. சட்டமன்ற ஆளும் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் சசிகலா. பன்னீர்செல்வம், கட்சியை உடைத்துக்கொண்டு வெளியேறினார்.


'முதல்வராக வேண்டும்' என்கிற சசிகலாவின் கனவை, சொத்துக் குவிப்பு வழக்கின் தீர்ப்பு தகர்த்தது. ஏழு மாதங்களாக திகதி அறிவிக்காமல் ஒத்திபோடப்பட்டு இருந்த சொத்துக் குவிப்பு வழக்கு மிகச் சரியாக இந்தத் தருணத்தில் தீர்ப்புத் திகதி வெளியானது.

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலாக்

வ.அ.இராசரத்தினம்



பாடசாலைக்கு வெளியே, உச்சிப்போதின் கொடுங் கிரணங்களைத் தடுத்து வீழ்த்தும் புனித சேவையோடு, கர்மயோக சாதகஞ் செய்து கொண்டிருந்த வேப்பமரத்தின்கீழே, பிறைச்சந்திரனாக வளைந்து நிற்கும் சின்னஞ் சிறுசுகட்கு மத்தியில் நின்றுகொண்டு ஜமீலா பாடிக் கொண்டிருந்தாள்.

"கன்னத்தில் முத்தமிட்டால்-
உள்ளந்தான்

கள்வெறி கொள்ளுதடி

உன்னைத் தழுவிடிலோ-மனது

உன்மத்த மாகுதடி"

மகாகவி பாரதியாருக்கு இந்தப் பாட்டு ஆத்ம திருப்தியைக் கொடுத்திருக்கும். ஜமீலாவுக்கு ஆத்ம திருப்தியை மட்டுமல்ல வயிற்றுப் பிழைப்புக்கும் வழிகாட்டிற்று. ஆனால் கைப்பிடிச் சுவர். வைத்த பாடசாலைக் கட்டடத்துள், தன்னை மறந்து, தன் சூழலை மறந்து, அசுணமாச் செவியராகி விட்டிருந்த ஆசிரியர் ஜபாருக்கு ஆத்ம திருப்தியைக் கொடுத்ததோ என்னவோ அதற்கு மேலாக, புழுதியையும் சருகுகளையும் சுழற்றிக் கிளப்பி அல்லாட வைக்கும் புதுக் கச்சான் காற்றை போல, அந்தப் பாட்டு அவர் மனதில் அடித்தளத்தையே சுழற்றி எண்ணப் புழுதியை-இறந்த காலச் சருகுகளை-அலையவிட்டு வேடிக்கை பார்த்தது.

பாட்டின் நயத்திலும், பாடம் நடத்தும் கடமை உணர்ச்சியிலும் தன்னை மறந்து ஒன்றிவிட்ட ஜமீலா திரும்பத்திரும்ப அந்த அடிகளையே பாடிக்கொண்டு இருந்தாள். அவளைத் தொடர்ந்து 'அரிவரி'ப்பிள்ளைகளும் பாடினார்கள். வைகாசி மாதத்துப் புதுத் தளிர்பரப்பிய வேப்பமரத்தின் அடர்த்தியான கிளைகட் கூடாக, வெள்ளிப் பிரிபோன்று ஒழுகும் சூரிய கிரணங்கள், ஜமீலாவின் வட்டித்து நீண்ட முகத்தில் எறிக்கையில் இயற்கையாகவே பளிச்சென்றிருக்கும். அவள் யௌவன முகத்தில், ஓர் அமைதியான சோபை மின்வெட்டிற்று. ஜமீலா அழகிதான். அதுவும் கொண்டற் காற்றிற் குருத்துக்களை ஆட்டி விகசிக்கும் தென்னஞ்சோலை நிழல் கட்டிக் காத்து வளர்த்த ஈழநாட்டுக் கீழ்க்கரை அழகி அவள். அலையாடும் தெளிந்த குளத்தின் உள்ளே ஆடி அசையும் நெடுங்கழியின் நிழலைப்போன்ற உருவம். கண்ணைப் பறிக்கும் கார்த்திகைப் பூவைப் போன்ற கொழுந்து விட்டெரியும் நெருப்புச் சுவாலையைப் போன்ற நிறம். அவள் அழகு யாரையும் மயக்காது. ஆனால் வசீகரிக்கும்.

ஆனால் அவள் அழகு ஆசிரியர் ஜபாரை வசீகரித்ததோ அல்லது மயக்கியதோ! ஆனால் மூன்று மாதங்களுக்கு முன் ஜமீலா முதன் முதலாக அந்தப் பாடசாலைக்கு ஆசிரியையாக வந்தபோது, 'நமது பெண்களும் ஆண்களோடு சரிநிகர் சமானமாக' ஆகிவிட்டார்களே என்ற பெருமிதத்தில் அவர் தன்னையே மறந்துபோனார். அன்று தொடங்கி ஒவ்வொரு நாளும் ஜமீலா, வளர்ந்து வரும் முஸ்லிம் பெண்மையின் இலட்சியமாகக் பாடசாலைக்கு வருவாள். பாடம் படிப்பிப்பாள். பாட்டுப்பாடுவாள். அவசியமேற்பட்டால் தலைமை ஆசிரியர் ஜபாரோடு பேசுவாள். பின்னர் எப்படி வந்தாளோ அப்படியே போய்விடுவாள். ஆனால் அவள் வரவு, புதிதாக வந்த மதயானையின் வரவைப்போல ஜபாரின் மனக்குளத்தைக் கலக்கியது.

இன்றைக்கும் அப்படித்தான். ஜமீலா பாடினாள். ஜபாரின் உள்ளம் கலங்கியது.

ஆனால் இந்தக் கலக்கத்துக்கு ஜமீலா மட்டும்தான் காரணமா?

● ● ●

ஜபார் ஆசிரிய கலாசாலையில் படிக்கையில் எத்தனையோ இலட்சியக் கனவுகளைக் கண்டிருக்கிறான். காதலைப்பற்றி மணித்தியாலக் கணக்கில் பேசியிருக்கிறான். எத்தனையோ அறிஞர்களின் அடுக்குத் தொடர் வாக்கியங்கள் அவனுக்கு மனனமாகக்கூட இருந்தன. அவன் கல்லூரியைவிட்டு வெளியேறுகையில் யாராவது ஒரு பெண்ணை-அவள் ஏழையாகவே இருந்தாலும்-காதலித்துச் சீதனமில்லாமல் மணந்துகொண்டு வாழவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான்.

ஆனால் அவன் தன் கனவுலகிலிருந்து வெளிப்பட்டுப் பிரத்தியட்ச உலகிலே ஆசிரியராக வாழத் தொடங்கிய போதுதான், தன் கனவுகளின் செயலற்ற தன்மையை விளங்கிக் கொண்டான். அப் பலவீனமான கனவுகளின் விளைவுகளை அவன் அனுபவிக்கவும் வேண்டியிருந்தது. ஆம் அவன் புத்தகங்களில் படித்திருந்த கதாநாயகர்களில் ஒருவனைப் போல எவளாவது ஒரு பெண்ணைக் காதலிக்க மட்டக்களப்பு முஸ்லிம் சமுதாயத்தின் சூழ்நிலை இடம்தரவில்லை. எட்டணா அட்டைப் படங்களிலே காதலனும் காதலியும் கடற்கரையில் சந்திக்கலாம். ஆனால் மட்டக்களப்புத் தென் கடற்கரைகளிலே ஜபாருக்கு அப்படியொரு காதலி கிடைக்க முடியுமா?

நாட்டுக் கவிகளில் வரும் காதலைப்போல 'வாய்க் காலில், வயலோரம்-களத்துமேட்டில்' எழுத்தறியாக் கவியரசிகளைக் காதலிக்க ஜபாரின் அந்தஸ்து அவளை விடவில்லை.

முடிபாக ஜபாரினால் எவரையுமே காதலிக்க முடியவில்லை. சாந்தமான மட்டக்களப்பு வாவியிலே தண்ணெற்றெறிக்கும் வெண்ணிலவும், மோனமும் தனிமையும் சேர்ந்து நீட்டி நிற்கும் மாலைவேளைகளும் அவன் மட்டில் எத்தனை பயனுமின்றி அவமே கழிந்தன. இதனால் 'ஆதலினாற் காதல் செய்வீர் உலகத்தீரே' என்று பாடிய பாரதியைத் 'தீயிற் போடு' என்று சொல்ல ஓர் புது இயக்கமே நடத்தி விடுவானோ என்ற அளவுக்கு ஜபாரின் மனம் ஏமாற்றமும் விரக்தியும் அடைந்துவிட்டது.

ஆனாலும் அந்த முஸ்லிம் கிராமத்தின் ஒரே ஓர் ஆசிரியர் என்ற முறையில், கல்யாணச் சந்தையில் ஜபாருக்கு நல்ல மதிப்பு இருந்தது. அவன் மட்டும் விரும்பினால் அக்கிராமத்தின் 'பொலிகாளை'யாகவே இருக்கலாம்போல இருந்தது. ஆனால் அவ்வூர் மக்கள் எல்லாரும் 'கல்யாணத்துக்குப் பிறகுதான் காதல் பிறக்கிறது' என்ற தத்துவத்தில் நம்பிக்கை கொண்டார்களோ என்னவோ, அவர்கள் ஜபாரைக் கல்யாணத்துக்குக் கேட்டார்களே தவிர எவருமே 'காதல் செய்வதற்கு' வழி செய்து வைக்கவில்லை.

இப்படியே இரண்டு வருடங்கள் கடந்து விட்டன.

இப்போதெல்லாம் ஜபாரின் மனதிலே, சொல்லிலே சிறை செய்ய முடியாத மெல்லிசை போன்ற இன்ப நினைவுகள் மெல்ல மெல்லத் தேய்ந்துவிட்டன. ஆனால் அம்மென் நினைவுகளே வயது முற்றிய உடலின் வேட்கையாகத் தசையின் பிடுங்கலாய்த் திரிந்து அவனை வருத்தின. இயற்கை உணர்ச்சிக்கு வகை சொல்லவும், தன் தாய் தந்தையரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யவும் கடைசியாய் அவன் பாத்தும்மாவைக் கல்யாணம் செய்து கொண்டான்.

பாத்தும்மாவும் அழகிதான். ஆனால் அவள் அழகு களியாட்ட விடுதிகளில் தொங்கும் கண்ணைப் பறிக்கும் மின்சார வெளிச்சமல்ல. இருண்ட அறையின் நடுவே, சேவை வைராக்கியத்தோடு அமைதியாகச் சுடர்விடும் குத்துவிளக்கின் ஒளிதான் அவள் அழகு. ஆனாலும் ஏமாறி, விரக்தியடைந்து இருளோடிப் போயிருந்த ஜபாரின் மனத்தை அது ஒளி செய்யவில்லை. இந்த அழகில் குடும்பம் நடந்துகொண்டுதான் இருந்தது.

கெட்டழிந்து திரிபவனுக்குக் கல்யாணஞ் செய்து வைத்தால் அவன் திருந்தி விடுவான் என்று சொல்கிறார்கள். அது எவ்வளவு தூரம் உண்மையோ எனக்குத் தெரியாது. ஆனால் ஜபாரைப் பொறுத்த அளவில் இந்தக் கல்யாணம் அவன் மனதில் குறைந்து கிடந்த ஆசைக் கனவுகட்கு மீண்டும் இயக்கத்தைக் கொடுத்துவிட்டது. அதன் பலன்....

சை! என்ன அநியாயம்! அம்பலவாணனும் அவனொடுதான் கல்லூரியில் படித்தான். அயல் கிராமத்தில்தான் அவனும் இப்போதிருக்கிறான். அவன் எவ்வளவு குதூகலமாய்த் தன் மனைவியோடு பட்டினத்துக்குப் படம் பார்க்கப் போகின்றான்.... கடைக்குப் போகிறாள்.... ஆனால் ஜபார்...?

அவன் மனைவியோடு கூடிக்கொண்டு எங்காவது போக முடியுமா? தன் இன்ப, துன்பங்களிலெல்லாம் மனைவியும் பங்குபற்ற வேண்டும் என்ற நல்லெண்ணம் ஜபாருக்கு இருக்கலாம். தன்னைப் போலத் தன் மனைவிக்கும் எல்லா உரிமைகளும் அளிக்க அவனுக்கு மனதிருக்கலாம். ஆனால் தன் உரிமைகளைக்கூடப் பாத்தும்மா வேண்டாம் என்கிறாளே அது ஏன்?

வீட்டிலேகூட அவளோடு நாலு வார்த்தைகள் இன்பமாகப் பேச முடிகிறதா? 'மனைவி படுக்கையறையில் விபசாரி மாதிரி இருக்கவேண்டும்' என்று யாரோ ஒருவன் எழுதி வைத்திருக்கிறானே. அடடா இந்தப் பாத்தும்மா எப்போதுதான் முக்காட்டைத் திறக்கப்போகிறாளோ.....

பாத்தும்மா-ஏன் முஸ்லிம் பெண்கள் எல்லாரையுமே சித்திரவதை செய்து அந்த வாதையைப் பார்த்துப் பேய்ச் சிரிப்புச் சிரிக்க வேண்டும்போல இருந்தது ஜபாருக்கு.

தன்னைத்தானே சாந்தப்படுத்திக் கொண்டு, எப்போதாவது பாத்துமாவிடம் தன் ஆசைகளை வெளிப்படுத்தினால் அதற்கு மௌனமாகக் கண்ணீர் வடிப்பதே அவள் பதிலாக இருந்தது.

ஜபாரின் மனம் அமைதியற்றுத் தவித்தது!

எண்ணாத எண்ணம் எல்லாம் எண்ணி எண்ணி மனம் குழம்பிக் கொண்டபோது ஆயிரம் சங்குகட்கிடையே முழங்கும் பாஞ்சசன்யச் சங்குபோல அந்த எண்ணம் தலைதூக்கியது: 'இவளைத் தலாக் (விவகாரத்து) பண்ணி விட்டால் என்ன?'

இந்த நிலையில் ஜமீலா அவன் பாடசாலைக்கு உதவி ஆசிரியையாக வரவே பாத்தும்மாவைத் தலாக் பண்ணிவிடும் எண்ணம் அவனுள் நாளுக்கு நாள் வலுவடைந்தது. ஆம் ஜமீலா அவனோடு எத்தனை சரளமாகப் பழகுகிறாள்! சிரிக்கச் சிரிக்க எப்படியெல்லாம் பழகுகிறாள்! சிரிக்கச் சிரிக்க எப்படியெல்லாம் பேசுகிறாள். படித்த பெண்ணல்லவா? இவள் மட்டும் என் மனைவியாகி விட்டால்... ஜமீலாவைக் கட்டியணைத்து அவள் அழகான கன்னத்தில் முத்தமிட வேண்டும் போல இருந்தது ஜபாருக்கு.

பாடசாலை மணியடித்தது. ஜமீலா பாட்டை முடித்தாள். அடுத்ததாக ஓய்வு நேரம்.

மனதில் ஓடி நெளிந்த எண்ணங்களை அறுத்துவிட்ட ஜபார், எதையோ தீர்மானித்தவனாய் ஜமீலாவிடம் வந்து நின்றான்.

ஜமீலா மரியாதைக்காக எழுந்து நின்றாள். "இருக்கலாமே" என்றான் ஜபார்.

"காரியமில்லை."

"நீங்கள் வந்த பின்பு எவ்வளவோ ஆறுதலாக இருக்கிறது."

"தங்கள் வேலையின் பாரத்தைப் பகிர்ந்து கொண்டதாய் இருக்கலாம்."

"நன்றாகப் பேசுகிறீர்களே. தங்களைப் போன்ற ஒருவருக்காகத்தான் நானும் காத்துக் கொண்டிருந்தேன்."

"எதற்கு?"

"ஒன்றுக்குமில்லை. பெண்களும் நன்றாகப் பேச வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன்."

'அப்படியா? துணிந்து ஆசிரியையாகி விட்டேன், பேசாமலிருப்பது எப்படி? அப்படி இருக்கவும் நீங்கள் விட மாட்டீர்களே."

"பேசியாவது இன்பமாயிருக்கலாமல்லவா?"

"ஐயோ! அப்போது தாங்கள் இப்போது துன்பமாயிருக்கிறீர்களாக்கும்?"


"துன்பப்படாமலிருக்க முடியுமா? முஸ்லிம் பெண்கள் எல்லாருமே தங்களைப்போல் இருந்தால்..."

"ஏன்! அவர்கள் எப்படியிருக்கிறார்கள்?" என்று இடைமறித்துக் கேட்டாள் ஜமீலா.

ஜபாரின் சுற்றி வளைத்த பேச்சுக்களின் அர்த்தத்தை ஜமீலா வெகு நாள்களுக்கு முன்னமே விளங்கிக் கொண்டிருந்தாள். இப்போதெல்லாம் அவன் உணர்ச்சிகளைக் கிண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பது அவளுக்கு ஒரு ஓய்வு நேர உபயோகம்.

(19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பவுண்

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

எல்லாமே ஒவ்வொன்றாக வாங்கிச் சேர்த்த பொருள்கள். தலைமுறைகள் வாங்கிப் பாவித்தவை ஏராளம்.

ஆனால் நிறைய ஆள்கள், வாகனங்களில் லோட் லோட்டாகச் சாமான்களை ஏற்றிப் பறித்தார்கள். பொருட்களைக் கொண்டு போனவர்கள் அதையெல்லாம் பாதுகாப்பாக வைக்க முடியாமல் தவித்ததைப் பவுண் கண்டான். சிலர் இந்தச் சாமான்களை ஏற்றவும் பாதுகாக்கவும் என்று போயே ஷெல் விழுந்து செத்திருக்கிறார்கள்.

பவுண் புதுக்குடியிருப்பிலிருந்தபோது ஏதோ அவனையே தேடிக் கொண்டு வருவதைப்போல ஒட்டுசுட்டான், கேப்பாப்பிலவுப் பக்கங்களால் படையினர் வந்தார்கள். அவன் அங்கிருந்து சனங்களோடு சனமாக குடும்பத்தோடு வள்ளிபுனத்துக்குப் போனான்.

அங்கே போய் ஒரு கிழமை இருந்திருப்பார்கள். அங்கே முதலில் ஷெல் வந்தது. ஒண்டல்ல, இரண்டல்ல. ஓராயிரம் இரண்டாயிரமல்ல. மழைபோல. மழைத்துளியை எண்ண முடியுமா? இரத்த வெள்ளமும் ஓலக்குரலும் பவுண் குடும்பத்தை மட்டுமா அலைக்கழித்தது. "தேடித்தேடி மரணப்பொறிக்குள்ளேயா வந்திருக்கிறோம்" என்று அவன் யோசித்தான். அப்படி அப்போது அங்கே நின்று ஆறுதலாக யோசிக்கத்தான் முடியுமா? சனங்கள் தாறுமாறாக ஓடினார்கள்.

ஒருவருக்கும் எங்கே போவதென்று தெரியவில்லை. எல்லா வழிகளிலும் மரணமே சிரித்து வரவேற்றுக் கொண்டிருப்பதாகப் பவுணுக்குப் பட்டது. ஆனால், அதற்காக இப்படி, இந்தச் ஷெல் மழைக்குள் நிற்க முடியுமா?

அவன் குடும்பத்தோடு ஓடத்தொடங்கினான். அது மரண ஓட்டம். நிற்கவே முடியாத ஓட்டம். தன்னோடிருக்கும் பிள்ளைகளைப் பற்றிய கவலை. போர்க்களத்தில் நிற்கும் பிள்ளைகளைப் பற்றிய கவலை. வயதான காலத்தில் போகிற இடங்களில் சமாளிக்க முடியாமல் திணறுகிற தாயைப் பற்றிய, மாமாயாரைப் பற்றிய கவலை. கையிலிருக்கும் காசு கரைந்து, இன்னும் இப்படி எத்தனை நாளைக்குச் சாமாளிக்க முடியுமோ என்ற கவலை. இனி எங்கே போவதென்று தெரியாத கவலை.

முதலில் தெரிந்தவர்களின் வீடுகளுக்குப் போனார்கள். பிறகு? பிறகு யாரும் யாரையும் தேடிப்போக முடியாது. அப்படிப் போயும் எந்தப் பிரயோசனமும் இல்லை. எங்கும் சனம் நிறைந்து விட்டது. எவருக்கும் எங்கே போவதென்று தெரியவில்லை. எங்கே இருந்தாலும் எல்லாமும் ஒன்றுதான். பிளாஸ்ரிக் தறப்பாளுக்கு மாறிய வாழ்க்கையில், வள்ளிபுனம், தேவிபுரம், இரணைப்பாலை (திரும்பவும் புதுக்குடியிருப்புக்கு என்ற விசித்திர நிலை), மாத்தளன், பொக்கணை, வலைப்பாடு, இரட்டை வாய்க்கால், முள்ளிவாய்க்கால் என்று எல்லாத்தையும் கண்டு, களைத்து விட்டான் பவுண்.

இடையில் அவனுடைய இரண்டாவது பிள்ளை போர்க்களத்தில் பலியாகி விட்டதாகச் சொன்னார்கள். கடைசியாக அவர்களின் முன்னிலையில் முள்ளியவளையில், அவர்கள் வீட்டில் அந்தப் பிள்ளை அழுது குழறியபடி போன காட்சி பவுணை அலைக்கழித்தது. அவனுடைய மனைவி பைத்தியக்காரி போலாகி விட்டாள். பவுணுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. எத்தனையோ வேட்டைகளை ஆடிய தன்னை இப்போது யாரோ வேட்டையாடிக்கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணினான்.

மூத்தமகனை அவர்கள் காணவேயில்லை. 'அங்கே நிற்கிறான், இங்கே நிற்கிறான்' என்ற மாதிரி ஆளாளுக்குச் சொன்னார்கள். கடைசியாக அவனைப் பவுண், தேவிபுரத்தில் கண்டிருந்தான். அதற்குப் பிறகு தகவலே இல்லை. ஆனால், பவுணுக்குத் தெரிந்த யாரோ ஒருவரிடம், அவன் தன்னைப் பார்க்காமல் எங்காவது பாதுகாப்பான இடத்துக்குத் தப்பிப் போகச் சொல்லி அனுப்பியிருந்தான்.

அவன் சொன்னதைப் போல அங்கிருந்து எங்காவது தப்பிப் போகத்தான் வேணும். ஆனால், பெத்த பிள்ளையை விட்டுவிட்டு அப்படிச் சுலபமாகத் தப்பிப் போய்விடமுடியுமா? அங்கிருந்து தப்பவில்லை என்றால் மிச்சம் மிகுதியாக இருக்கிற ஆக்களையும் இழக்கவேண்டி வரலாம். இதற்குள் பவுணுடைய மாமியார் வயிற்றுப் போக்கால் துவண்டு விட்டாள். இறுதியில் அந்த முதியபெண் வலைப்பாட்டுக் கடற்கரை மணலில் புதைக்கப்பட்டாள்.

இரண்டு வேளைச் சாப்பாடு ஒரு வேளை ஆகியது. உடுப்புகள் மண்மூடைகளாக மாறின. பவுண் பைத்தியக்காரர்களில் ஒருவனாகினான். போக்கிடமும் வழியுமில்லாத லட்சக்கணக்கான சனங்களில் அவன் எம்மாத்திரம்?

அவனுடைய மைத்துனி இறந்து போனதாகச் சொன்னார்கள். அது போல ஆயிரமாயிரம் சாவுச் செய்திகள். தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் என மாண்டு கொண்டிருந்தனர் எல்லோரும்.

பவுண் முள்ளிவாய்க்காலில் இருந்து வெளியேறியபோது.... அவனுடைய இன்னொரு பிள்ளைக்கு இரண்டு கைகளையும் ஷெல் தின்றது. காயப்பட்ட பிள்ளையோடு வவுனியா, அனுராதபுரம், பொலநறுவை என்று அலைந்தான பவுண்.

முள்ளிவாய்க்காலிலிருந்து வெளியேறியபோது அவனுக்கு ஒரு சுமை குறைந்திருந்தது. ஆனால், இன்னும் பல சுமைகள் கூடின. பிறகு அவன் அகதிமுகாம்களில் இருந்து வவுனியாவிலிருந்த சொந்தக்காரர் வீடுகளுக்கு மாறி, பிறகு அங்கேயிருந்து கனகராயன் குளத்துக்கு வந்திருக்கிறான். கனகராயன்குளத்தில் அவனுடைய அண்ணாவின் காணி இருந்தது. அங்கேதான் குடியிருக்கப் பதிவு செய்து வந்திருக்கிறான். வவுனியாவிலிருந்து கொண்டு அவனால் எதுவும் செய்ய முடியாது. வேறு தொழில்களும் அவனுக்குத் தெரியாது. வேறு தொழில்களைச் செய்யக்கூடிய வசதிகளும் இல்லை.

கனகராயன் குளத்தில் வயல் விதைக்கலாம். வேட்டைக்குப் போக முடியாது. துவக்குமில்லை. இருந்தாலும் அதை வைத்திருப்பதற்கு படையினர் அனுமதிக்க மாட்டார்கள். அது வீண் வம்பாகி விடும்.

அவனிருக்கும் கொட்டிலுக்கருகில் பன்றி வந்து முன்னால் நின்று விளையாடியது. தன்னைப் பார்த்துப் பன்றி கேலி பண்ணுவதாக எண்ணினான். எல்லாம் காலம்தான். முன்னர் என்றால் இப்படி அவனுக்கு முன்னே காட்டெருமை, கரடியென்ன யானைகூட வரமுடியாது. இப்பொழுது குறுமுயல்கூட சீண்டிப்பார்க்கிறது. அவனைப் பொறுத்தவரை இப்பொழுது இரண்டு ஏக்கர் வயல் விதைத்தாலே போதும். அதற்குமேல் எதையும் செய்யக் கூடிய சக்தியில்லை.

அவனுடைய சொந்த வீட்டுக்குப் போவதற்கு இப்போதைக்குப் படையினர் அனுமதிப்பார்கள் போல் தெரியவில்லை. கனகராயன்குளத்தில் 12 கூரைத்தகடுகளைத் தந்தார்கள். அதற்குத் தோதாக வீட்டை அமைத்துக் கொண்டான். குடும்பத்தில் ஆட்களின் எண்ணிக்கை அதிகம் என்று இரண்டு தறப்பாள்களும் தரப்பட்டன. ஒன்றை நிலத்துக்கு விரித்தான். இன்னொன்றை கூரையாக்கின்னான். முள்ளிவாய்க்காலில் விட்டு வர மனமேயில்லாமல் இருந்த மகன் இப்போது ஓமந்தைத் தடுப்பு முகாமில் இருக்கிறான். பவுணின் குடும்பம் மாதத்துக்கு இரண்டு தடவை அவனைப் போய்ப்பார்த்தது.

'கெதியா விட்டிடுவாங்கள் போலக் கிடக்கு!' என்று ஒவ்வொரு முறையும் அவன் பவுணுக்கும் தாய்க்கும் சொன்னான். ஆனால், ஓமந்தையிலிருந்த சிலரை இப்பொழுது பூஸாவுக்கும் கொண்டு போயிருக்கிறார்கள். இந்தச் செய்தி பவுணுக்கு நெஞ்சிலடித்தது. தன்னுடைய மகனையும் பூஸாவுக் குத்தான் கொண்டு போவார்களோ! என்று. பூஸாவுக்குக் கொண்டுபோனால் நான்கு நாள் பயணம். அவனிருக்கும் நிலையில் அந்தளவு தொலைவுக்குப் போய்ப்பார்ப்பது பூமியைச் சுற்றிச் செல்ல முயன்ற மகலனின் கடற்பயணம் போன்றது. அதைவிடக் காசுக் கஸ்ரம் வேறு.

இதற்கிடையில் போனகிழமை அவனுக்குத் தெரிந்த ஒருவர், வவுனியாவில் அவனையும் அவனுடைய கைகளில்லாத பிள்ளையையும் கண்டபோது சொன்னார், 'இந்த மாதிரிப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நண்பர் ஒருவர் உதவிசெய்யிறார். ஆனால், நீங்கள் இந்தப் பிள்ளையின்ர பெயரில ஒரு வங்கிக் கணக்கைத் திறவுங்கள்' என்று.

பிள்ளையைக் கூட்டிக் கொண்டு பவுண் வங்கிக்குப் போனான். அங்கே பிள்ளையின் பெயரில் கணக்கைத் திறக்கும் படிவத்தை வங்கி ஊழியர் நிரப்பினார். எல்லா விவரங்களும் பூர்த்தி செய்யப்பட்டன. மீண்டும் சரிபார்த்தார்கள். எல்லாமே சரி. வங்கி ஊழியர், அந்தப் பிள்ளையின் கையொப்பத்தைக் கேட்டார்.

அப்பொழுதுதான் வந்தது பிரச்சினை.

கையொப்பத்தை இடுவதற்கு அவளிடம் கைகளில்லை. விரல் அடையாளத்தை வைப்பதற்கு விரல்களுமில்லை. தலை சுற்றியது. பூமி சுற்றாமல் நின்றது.

வங்கி மனேஜருக்கு எதுவுமே புரியவில்லை. ஊழியர்கள் திகைத்துப் போய் ஒரு கணம் நின்றனர். எல்லாமே உறைந்து அமைதியாயிற்று.

அவள் எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தாள். என்ன நினைத்தாளோ தெரியாது.

பவுண் குலுங்கிக் குலுங்கி அழுதான். அவனுடைய அழுகை ஒலி அங்கே நிறைந்து கொண்டிருந்தது. அவன் மட்டுமா அழுதான்?

# சசிகலா....

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடராசன் மீதான வெளிநாட்டுக் கார்கள் வழக்கு விசாரணை, வேகம் பிடித்தது. தினகரன், சசிகலா மீதான ஃபெரா வழக்குகளின் விசாரணை சூடுபிடிக்க ஆரம்பித்தது. சொத்துக்குவிப்பு வழக்கில், சசிகலாவுக்கு நான்கு ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டது. அ.தி.மு.க-வின் பொதுச்செயலாளர் நாற்காலியைப் பிடித்த சசிகலாவால், முதல்வர் நாற்காலியில் அமர முடியாமல் போனது. பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறைக்குள் அவர் அடைக்கப்பட்டார்.

### துரத்தப்பட்ட தினகரன்

சசிகலாவோடு அந்தக் குடும்பத்தின் சகாப்தம் முடிந்துவிடும் என்று நினைத்த மத்திய அரசுக்கு, தினகரன் தலைவலியாக மாறினார். கட்சியின் துணைப்பொதுச் செயலாளராக திடீரென வந்த அவர், ஆர்.கே. நகர் இடைத்தேர்தலில் போட்டியிட்டார். பன்னீர் தரப்பு களத்தில் இறங்க, இரட்டை இலைச் சின்னம் பறிபோனது. ஆனால், தினகரன் அசரவில்லை. பணத்தைத் தண்ணீராக இறக்கி, வெற்றி முகம் காட்டினார். 50 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தினகரன் வெற்றி பெறுவார் என்று உளவுத்துறை ரிப்போர்ட் போனது.

இந்த நேரத்தில் தினகரனுக்கு நெருக்கமானவர்களின் வீடுகளைத் தேடித்தேடி ரெய்டு நடத்தப்பட்டது. அமைச்சர் விஜயபாஸ்கரின் வீடுகளில் கிடைத்த ஆவணங்கள், இந்தியாவையே அதிரவைத்தன. ஆர்.கே. நகர் தேர்தலை தேர்தல் ஆணையம் ரத்துசெய்ய, இது போதுமான ஆதாரமாக இருந்தது.

இதற்கிடையில், 'இரட்டை இலைச் சின்னத்தைத் திரும்பப் பெற 60 கோடி ரூபாய் லஞ்சம் கொடுக்க தினகரன் முயன்றார்' என்று சொல்லி, டெல்லிப் பொலிஸ் வழக்குப் பதிவுசெய்தது. தினகரனோடு இருக்கும் அமைச்சர்களின் வீடுகளும் ரெய்ட் பட்டியலில் இருக்கின்றன' என்ற செய்தி கசியவிடப்பட்டது. 'இதற்கு மேல் தினகரனைத் தாங்கிப்பிடித்தால் தங்கள் மடிக்கு ஆபத்து வந்துவிடும்' என்பதை அ.தி.மு.க அமைச்சர்கள் உணர்ந்தனர். தினகரனின் தலையீடு இல்லாமல் கட்சியையும் ஆட்சியையும் இனி நடத்தப்போவதாக அறிவித்தனர். அதே நேரத்தில், ஃபெரா வழக்கு விசாரணையும் தீவிரம் பெற்றது. அதற்குமேல் தாக்குப்பிடிக்க முடியாத தினகரன் "நான் நேற்றே ஒதுங்கிவிட்டேன்" என்று கூலாகப் பேட்டி கொடுத்து சரண்டர் ஆகிவிட்டார்.

### பதுங்கிக் கொண்ட வெங்கடேஷ்

இவ்வளவு சிக்கல்களில் சசிகலா குடும்பம் சிக்கிக்கொண்டதற்கும், அவர்களின் பிடி தளர்ந்ததற்கும், முக்கியக் காரணம் டாக்டர் வெங்கடேஷ் மற்றும் டி.டி.வி.தினகரன்தான். சசிகலாவை, கட்சியையும் ஆட்சியையும் கைப்பற்றத் துண்டியவர்கள் இவர்களே. சசிகலா சிறைக்குப் போனதுமே டாக்டர் வெங்கடேஷ் எங்கும் தென்படாமல் பதுங்கிக்கொண்டார். அதற்கு முக்கியக் காரணம், அடுத்தடுத்து நடந்த ரெய்டுகளால் அவர் அரண்டு போனதுதான். ஏனென்றால், டாக்டர் வெங்கடேஷ் வசம் இருக்கும் சொத்துகள் அப்படி. எதையும் பறிகொடுக்க அவர் விரும்பவில்லை. ஆனால், எந்த நேரத்திலும் அவர் கழுத்துக்குழ் கத்தியை நீட்டுவதற்குத் தயாராகவே இருக்கிறது வருமானவரித் துறை.

முறைகேடாகச் சேர்த்த சொத்துகள், அதிகாரவெறியால் அவசரகதியில் எடுத்த முடிவுகள், குடும்ப உறவுகளுக்குள் ஒருவருக்கொருவர் வெட்டிவைத்த குழிகள் ஆகியவையே சசிகலாவின் ராஜ்ஜியம் சரிந்துவிழக் காரணமாக அமைந்துவிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பார்வைநயம்-20

■ கணபதி சர்வானந்தா

கண்விழித்தபோது. மாலைச் செக்கலில் ஒரு அரிக்கன் லாம்பின் வெளிச்சத்தில் .... அவனது சூழலை அவனால் வரையறுக் முடியாதிருந்தது. ஒரு வீட்டின் தாழ்வாரத் திண்ணையில் தான் படுத்திருப்பதை உணர்ந்தான் பெரியசாமி. கட்டுப்போட்ட வலது கை லேசாக வலித்தது. அவனருகே கைத்தடியும் இல்லை. பலூன்களும் இல்லை. காற்றடிக்கின்ற கைப்பம்பும் இல்லை. ஒரு சிறுவனும் அவனது தாயாரும் நின்று கொண்டிருந்தனர்.

# கைமாறு

பலூனுக்குக் காற்றடித்துக் கொண்டிருந்தான் பெரியசாமி. இதுவரை இரண்டு பலூன்கள் வெடித்துவிட்டன. வ்ழமையாக அப்படி இல்லை. எப்போதாவது ஒருநாள்தான் அப்படி நடக்கும். அதுவும் இன்று பார்த்து. அவன் இருப்பிடத்துக்கு சற்றுத் தொலைவிலுள்ள பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா. காலையிலேயே திருவிழா களைகட்டி விடும். விரைவாகப் போனால்தான் ஏதாவது பார்க்கலாம். இதுபோன்ற சமயத்தில்தான் ஏதாவது தேட முடிகிறது. ஏனெனில் உழைப்பது அவ்வளவும் சுளையாகக் கைக்கு வரும். தண்ணீர், சாப்பாடு என்று செலவுமில்லை. கோயிலுக்குப் போகிற வழி வழியே தண்ணீர்ப் பந்தல். கோயிலில் அன்ன தானம். திரும்பி வரும்போது தூக்குக் காவடி எடுத்த டிரக்டர் வண்டியில் ஏறினால் வந்து அவனது வீட்டுக் கருகாமையில் இறங்க லாம். ஆனால் இன்று, “இந்த தொடர் பலூன் வெடிப்பு கள் இலாபத்தின் ஒரு பகுதியை தின்று விடுமோ?” என்று பயப்பட்டான் பெரியசாமி. இருந்தும் பொறுமையாக ஒவ்வொன்றாகக் காற்றடித்து அந்தக் கைத்தடியில் கட்டிக் கொண்டிருந்தான் அவன்.

ஹற்றன் பகுதிக்குப் படிப்பிக்க வந்தவர் நடராஜா மாஸ்டர். அவர் யாழ்ப்பாணம் கரவெட்டியைச் சேர்ந்தவர். அங்கு அவருக்குத் துணை யாக இருந்தவன், பின்னர் அவரோடு புறப்பட்டு கரவெட்டிக்கு வந்துவிட்டான். இன்றுவரை ஊருக்குத் திரும்பிப் போகாமல் அவர் வீட்டிலேயே தங்கியிருக்கிறான். அவர் மரணம்வரை ஒரு சுதந்திரப் பறவையாக வலம் வந்து கொண்டிருந்தான் பெரியசாமி. அதற்குப் பிறகு அவனுக்கு அங்கு வேலை இல்லாமற்போக, இராத் தங்கலுக்கு மாத்திரம் அங்கு வருவான். ஊர் அவனுக்குப் பழக்கப் பட்டுப் போனதால், வருமானத்திற்காக ஏதாவது செய்வது அவனுக்குப் பிரச்சினையான விடயமாக இல்லை. பருவத்திற்கேற்றாற்போல ஏதாவது செய்து வாழப் பழகிக் கொண்டான் பெரியசாமி.

கடந்த வருடமும் இந்தக் கோயில் திருவிழாவுக்குப் பலூன் விற்க வந்திருந்தான். அன்று வியாபாரம் அவ்வளவாக இல்லை. மாலை, வீடு திரும்ப முன், கோயில் வாசலிலுள்ள அரச மரத்தடியில் உட்கார்ந்திருந்தான். அவனுக்கு முன்னே ஒரு சிறுவன் வந்து பின்னே கைகளைக் கட்டிக் கொண்டு கண் இமைக்காமல் பெரிய சாமியையும் பலூன்களையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனது தாயார் வந்து அவனது கைகளைப் பிடித்து இழுத்தாள். அவன் போக மறுத்துவிட்டான். “என்ன” சிறுவனைப் பார்த்துப் பெரியசாமி கேட்டான். “பலூன் வேணும்” தாயின் பிடியிலிருந்து விடுபட எத்தனித்தவாறு பதிலளித்தான் அந்தச் சிறுவன். அவனுக்கு பலூன் வேண்டும். அவனது அம்மாவுக்கும் அதை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்ற விருப்பமும் இருப்பதாகத் தெரிந்தது. ஆனால்...! அவர்களை அறிந்து கொண்டான் பெரியசாமி. தனது தடியிலுள்ள பலூன்கள் மூன்றை மூன்று கலரில் கழட்டி எடுத்துக் கொண்டு, அருகிலுள்ள இனிப்புக் கடைக்காரரிடம் சில இனிப்பு வகைகளையும் வாங்கிக் கொண்டான். தாயின் கைப்பிடியில் இறுகி அடம்பிடிக்கும் அந்தச் சிறுவனின் கைகளில் அவற்றைத் திணித்தான் பெரியசாமி. சிறுவன் இனிப்பை மென்றபடி பலூன்களை காற்றில் பறக்கவிட்டு விளையாடிக் கொண்டிருந்தான். அவனது தாயார்தான் தன் கண்களால் பெரியசாமிக்கு நன்றி சொல்லிக் கொண்டிருந்தாள்.

இன்றும் அதே கோயிலில் தேர்த் திருவிழா. வீட்டிலிருந்து நடந்து செல்வதென்று தீர்மானித்தான் பெரியசாமி. போற வழியிலுள்ள பந்தலுக்குள் கூடி இருக்கும் சிறுவர்களுக்கு பலூன்களை விற்கலாம். அத்துடன் பந்தலில், சாப்பாடு, தண்ணீர் பார்த்துக் கொண்டும் போகலாம். அவ்வளவு களைப்பாகவும் இருக்காது. புறப்பட்டவன், நான்கு பந்தல் தாண்டியும் வந்தாயிற்று. இடையிடையே ஒன்று இரண்டு என, வியாபாரமும் அவ்வளவு சிறப்பாக இல்லை. சரீரம் களைத்ததாக இல்லை. மனம்தான் சோர்வாக இருந்தது. “திருவிழா முடிந்து திரும்பேக்கை அவையள் வாங்குவினம்” தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டு அந்த பனை வடலிப் பாதையிலே நடந்து கொண்டிருந்தான்.

இம்முறை சித்திரையிலேயே சோளகம் பெயர்ந்திருந்தது. கடல் அலைகள் அடித்துக் குமுறுவதைப் போலக் காவோலைகளின் சத்தம் காது களை அடைத்துக் கொண்டிருந்தது. ஆரோ விண் கட்டி பட்டத்தையும் ஏற்றியிருந்தனர். விண்ணின் ஒலியும் காவோலைச் சத்தத்துக்குப் பக்கப் பாட் டுப் பாடுவதாக இருந்த இரைச்சலில், காவோலை விழுந்த சத்தம் யாருக்கும் கேட்டவில்லை. அதைத் தொடர்ந்து பலூன்கள் வெடிக்கின்ற சத்தம் மட்டும் கேட்டது.

கண்விழித்தபோது, மாலைச் செக்கலில் ஒரு அரிக்கன் லாம்பின் வெளிச்சத்தில் .... அவனது சூழலை அவனால் வரையறுக்க முடியாதிருந்தது. ஒரு வீட்டின் தாழ்வாரத் திண்ணையில் தான் படுத்திருப்பதை உணர்ந்தான் பெரியசாமி. கட்டுப்போட்ட வலது கை லேசாக வலித்தது. அவனருகே கைத்தடி யும் இல்லை. பலூன்களும் இல்லை. காற்றடிக்கின்ற கைப்பம்பும் இல்லை. ஒரு சிறுவனும் அவனது தாயாரும் நின்று கொண்டிருந்தனர்.

“இந்த மாமாவைத் தெரியுமே?” அந்த இளம் தாய் மகனைப்பார்த்துக் கேட்டாள்.” ஓம். போன திருவிழாவிலை எனக்கு பலூனும், இனிப்பும் வாங்கித் தந்த மாமா” பதிலளித்த சிறுவன் கைகளால் பெரியசாமியின் காயத்தைத் தடவிக்கொண்டிருந்தான்.



# தலாக்

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜமீலா இன்றைக்கும் அப்படித்தான் பேசினாள்.

“எப்படியாயினும் அவர்கள் இருக்கட்டும். ஆனால் அவர்கள் எல்லாரும் தங்களைப்போல இருந்தால் என்னைப் போன்ற பலர் ‘தலாக்’ பண்ணவேண்டிய அவசியமே இராது” என்றான் ஜபார் நயமாக.

“ஓ! அப்போ ‘தலாக்’ பண்ண முடிவு செய்து விட்டீர்களா?” என்றாள் ஜமீலா விஷமத்தோடு.

“தாங்கள் மட்டும் இஷ்டப்பட்டால் இன்றைக்கென்றாலும் சரிதான். ஏன் நம் மதமும் அதை அனுமதிக்குதுதானே”

ஜமீலா அடிபட்ட பெண் புலியைப்போல ஜபாரை முறைத்துப் பார்த்தாள். அவள் உதடுகள் துடித்தன. புருவங்கள் விறைத்து நிமிர்ந்தன. பொங்கியெழுந்த ஆத்திரத்தையெல்லாம் சேர்த்துத் தன் முன்னால், நியாயவாதியின் தீர்ப்பை எதிர்பார்த்து நிற்கும் குற்றவாளியைப் போல நிற்கும் ஜபாரைப் பார்த்து “நீரும் ஓர் ஆசிரியரா? நம் சமுதாயத்தையே சீர்திருத்தும் புனிதமான ஆசிரியத் தொழிலைச் செய்யும் நீரா இப்படிப் பேசுகிறீர். பலதார மணத்தையும் தலாக்கையும் எத்தனையோ காரணங்களுக்காக மதம் அனுமதித்திருக்கலாம் ஆனால் உங்கள் சௌகரியத்துக்காக பழைய சட்டையைக் கழற்றி எறிவதுபோல, நினைத்தவுடனேயே ஒரு பெண்ணைத் தள்ளிவைக்க உம் மனச்சாட்சி இடந்தருகிறதா? சரளமாகப் பேசினால் உடனே நப்பாசை கொள்ளும் உம்மைப் போன்றவர்கள் நம் சமூகத்தில் இருக்கும்வரை முஸ்லிம் பெண்கள் வாய்மூடி ஊமைகளாகவே இருந்து விடட்டும். இனிமேல் பாடசாலை விடயத்தைத் தவிர வேறு எதையுமே என்னிடம் பேச வேண்டாம். போம், போம்” என்று பொரிந்து தள்ளினாள்.

மழை பெய்து ஓய்ந்ததுபோல இருந்தது வகுப்பறை. சூடுகண்ட பூனையாய் நழுவினார் ஜபார்.

இப்போது ஜபார் பாத்தும்மாவைத் தலாக் பண்ணி விட்டாரோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் அதன்பிறகு அவர் ஜமீலாவிடம் நெருங்கவில்லை என்பது மட்டும் எனக்கு நன்றாகத் தெரியும்.

நன்றி : ஈழகேசரி வெள்ளி விழா மலர் -'56

கருணையும் அன்பும் இடையிட்டு வருவத[illegible] ...றது ஆன்மிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவிதி

# மறுமலர்ச்சி இயக்கம்: கலந்துரையாடல் வழிமுறைகள் அபிலாஷைகள்

சிங்கள மூலம் :
விக்டர் ஐவன்
தமிழில் :
சபாபதி சிவகுருநாதன்





மறுமலர்ச்சி இயக்கம் தனது கிளைகளை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்ச்சியாக அமுல்படுத்தி வருகிறது. இத்தகைய நிகழ்ச்சித்திட்டத்துக்கு, உதவி பெறக்கூடிய சர்வதேச நிதி நிறுவனத்தின் உதவியின்றி தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல முடியாது என்று எண்ணிய ஒருசிலரும் எம்மத்தியில் இருந்தனர். ஆனால், மறுமலர்ச்சி இயக்கத்தை வெளிநாட்டு உதவிமீது தங்கிவாழும் அரசசார்பற்ற நிறுவனமாக உருவாக்கக் கூடாது என்ற கருத்து மறுமலர்ச்சி இயக்கத்தில் பணியாற்றும் பெரும்பான்மையினரின் கருத்தாக அமைந்தது. மறுமலர்ச்சி இயக்கத்தை கறுப்புப் பணக்காரர்களிடம் இருந்து நிதி உதவி பெறும் அமைப்பாகவும் மாற்றக்கூடாது என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாக இருந்தோம். நாம் தெரிவுசெய்த பாதை கடினமானதாக இருந்தாலும், இதுவரை, நாம் பெரும் நிதி நெருக்கடியை எதிர்நோக்கவில்லை. நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று கிளைகளை அமைக்கும் நிகழ்ச்சித்திட்டம் குறிப்பிட்ட வேகத்தில் தொடர்ச்சியாக முன்னோக்கிச் செல்கின்றது.

**கலந்துரையாடல் வழிமுறை**

கடந்த மார்ச் 17, 18, 19 ஆகிய மூன்று நாள்களில் கண்டி மாவட்டத்தில் 7 கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. மாத்தளை மாவட்டத்தில் ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது. 'ஹெலிஓய' பிரதேசத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல் முஸ்லிம் பிரசைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. சுமார் 80 பேர் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர். அது உற்சாகமூட்டக்கூடிய கலந்துரையாடலாக அமைந்தாலும், கலந்துரையாடல் சபையின் அதிக எண்ணிக்கை காரணமாக, தெரிவு செய்யப்பட்டோரைத்தவிர எல்லோரும் கருத்துத் தெரிவிப்பதற்கு அங்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

மேல் பேராதனையில் (உட பேராதனை) நடந்த கலந்துரையாடலும் அந்தக் கிராமத்தவருக்கு மட்டுப்படுத்தப்பட்ட கலந்துரை யாடலாக அமைந்தது. பேராசிரி யர் சரத் அபயக்கோனின் வீட்டு வாசலில் கலந்துரையாடல் இடம்பெற்றது. அந்தப் பிரதேசத்தைச் சார்ந்த பேராசிரியர் லியனகே அமரகீர்த்தியும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினார். இக்கலந்துரையாடலின்போது அந்தக் கிராமத்தைச் சேர்ந்த வயதுவந்த ஆண்களும், பெண்களும், இளைஞர் யுவதிகளும் பங்குபற்றினர். அது உற்சாகமான கலந்துரையாடலாக இருந்தது. ஆனால், பங்குபற்றியோரின் எண்ணிக்கை அதிகமாக இருந்த காரணத்தால் தெரிவுசெய்யப்பட்ட ஒருசிலரைத்தவிர எல்லோருக்கும் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு அங்கு சந்தர்ப்பம் கிட்டவில்லை.

மறுமலர்ச்சி இயக்கத்தின் கண்டி மாவட்டத்தின் முக்கியஸ்தராக செயற்படும் நவரத்ன பண்டாவின் கிராமத்திலும் (வேபத்தன) கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது. அதுவும் அக்கிராமத்தவருக்கு மட்டுப்படுத்தப்பட்ட, வயதுவந்த ஆண்களும் பெண்களும். இளைஞர் யுவதிகளும் பங்குபற்றிய உற்சாகமான கலந்துரையாடலாக அமைந்தது. இது, 1989 - 1990 காலகட்டத்தில் இடம்பெற்ற ஜே.வி.பியின் இரண்டாவது கிளர்ச்சியின்போது, பாரதூரமாகப் பாதிக்கப்பட்ட ஒரு கிராமமாகும். கிளரச்சியின்போது, இக்கிராமத்தின் 40 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. நவரத்னவின் வீடும் இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக திகன, பிலிமத்தலாவை மற்றும் குண்டகசாலை கைத்தொழில் குடியேற்ற நகரத்திலும் 3



கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. திகன, மாத்தளை மற்றும் பிலிமத்தலாவையில் இடம்பெற்ற கலந்துரையாடல்களில் 35 அல்லது 40 பேர் பங்குபற்றியமையால். அக் கலந்துரையாடலில் பங்குபற்றிய அனைவருக்கும் கருத்துக்கூற சந்தர்ப்பம் கிடைத்தது.

அதிக எண்ணிக்கையிலான மக்கள் பங்குபற்றும் கலந்துரையாடல்களை நாம் ஏன் நடத்துவதில்லை? என்ற வினாவை சிலர் கேட்கின்றனர். இத்தகைய வினாக்கள் சில கலந்துரையாடல்களின்போதும் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதுவும் விளக்கிக் கூறவேண்டிய ஒரு முக்கியமான பிரச்சினையாகும். மறுமலர்ச்சி இயக்கம் என்ற வகையில் நாம் எமது ஆரம்பக் கலந்துரை யாடல்களின்போது சிறிய ஒரு கிளையை அமைப்பதையே நோக்கமாகக் கொண் டோம். மறுமலர்ச்சி இயக்கத்தின் கேந்திர சக்தியைத் தயாரிப்பதற்கு அவசிய மான மனிதர்களைக் கண்டறிவதே இதன் நோக்கமாகும். சிறந்த சமூக இயக்கத்திற்கு பலம்வாய்ந்த ஓர் கேந்திர சக்தி இருத்தல் வேண்டும் அல்லது சக்திவாய்ந்த ஓர் அத்திபாரம் இருத்தல் வேண்டும். தற்போது நாம் எமது அமைப்பின் கேந்திர சக்தியை அல்லது அத்திபாரத்தை உருவாக்கு வதிலேயே ஈடுபட்டுள்ளோம். அத்தி வாரத்தை உருவாக்கிய பின்னரே கட்டடத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டும். கை தட்டும் அனுதாபிகள் - ஆள்களைவிட சுமைகளை தாங்கும் மனிதர்களே இன்றைய கட்டத்தில் தேவைப்படுகின்றனர். எனவே, தற்போது நாம் அனுதாபிகளை தேடிச் செல்லவில்லை. கேந்திர சக்தியையே நாடிச் செல்லுகின்றோம். மறுமலர்ச்சி இயக்கம் முன்வைக்கும் கருத்துக்களுக்கு இருக்கும் சமூக அங்கீகாரத்தை அளவிடு வதற்கும், பல்வேறு பிரதேசங்களில் சிறு கிளைகளை உருவாக்கும் இந்த நிகழ்ச்சித்திட்டம் உதவுகிறது.

கேந்திர சக்தியை உருவாக்கி, எமது கண்ணோட்டத்தைப் பட்டை தீட்டிய பின்னரே பெரும் எண்ணிக்கையுடன் மக்களை சென்றடைய நாம் தீர்மானித்துள்ளோம். இது நிலைமாற்றுக்கால சிறு சபைகளேயொழிய, கருத்தரங்குச் சபைகளோ அல்லது பொதுக்கூட்டங்களோ அல்ல. பெரிய சபைகள் இத்தருணத்தில் எதிர்பார்க்கப்படவில்லை. கேந்திர சக்தியை உருவாக்குவதற்கு முன்னர் எமது அளவைவிட நாம் எம்மை பெருப்பித்துக்கொள்ள முயற்சிக்கவில்லை. எனவே, நாம் இத்தருணத்தில் சுவரொட்டிகளை ஒட்டுவதில்லை. பத்திரிகை மாநாடுகளை நடத்துவதுமில்லை. எமது கலந்துரையாடல்களைப்பற்றி ஊடகங்கள்மூலம் முற்பிரசாரம் செய்ய எதிர்பார்க்கவுமில்லை.

**கிளைகளை அமைத்தலும் அவற்றுக்கான ஆகுசெலவுகளும்**

சிறு சபைகளில் சபையோர் அனைவருக்கும் கருத்துத் தெரிவிக்கும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. இக்கருத்துப் பரிமாற்றம் சூடான விவாதங்களாக மாறும் சந்தர்ப்பமும் கொண்டவை. இவற்றின் ஊடாக கலந்துரையாடல் சபைகளில் பங்குபற்றும் மிகச் சிறந்த மனிதர்களை நாம் அடையாளம் காணமுடியும். மற்றையோரை சாதாரண அங்கத்தவர்களாக இணைக்கும்போது, விசேட திறமை கொண்டவர்களை மறுமலர்ச்சி இயக்கத்தின் கேந்திர சக்தியாக உருவாக்கும் ஆற்றல் எமக்குக் கிடைக்கிறது.

பல்வேறு பிரதேசங்களுக்குச் சென்று கிளைகளை அமைக்கும் நிகழ்ச்சித்திட்டத்தில் மறுமலர்ச்சி இயக்கம் முன்வைக்கும் கருத்துக்களை பொதுமக்கள் மத்தியில் பட்டைதீட்டும் ஆற்றலும் எமக்குக் கிடைக்கிறது. மறுமலர்ச்சி இயக்கம் முன்வைக்கும் கருத்துக்கள் இலங்கையின் அரசியல் இயக்கங்கள் முன்வைக்கும் கருத்துக்களைவிட வித்தியாசமானவை. அநேகமான கருத்தியல் இயக்கங்கள் முன்வைக்கும் கருத்துக்களைவிடவும் வித்தியாசமானவை.

வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்து நிதி உதவிபெறும், அரச சார்பற்ற நிறுவனங்கள் உருவாக்கி இருக்கும் கலாசாரத்துக்கு, அமைய ஒரு கூட்டத்தை நடத்துவதற்கு நிதி உதவி வழங்காத, கூட்டத்தில் பங்குபற்றுவோருக்கு சிறந்த உணவையும் பானங்களையும் வழங்காத, அவர்களுக்கு போக்குவரத்துச் செலவு வழங்காத, எந்தவொரு இயக்கத்துக்கும் வெற்றிகரமாக கிராமங்களுக்குச் செல்லும் ஆற்றல் கிடையாதென்ற கருத்து அங்கீகரிக்கப்பட்ட கருத்தாக உருவாகியிருந்தது. மறுபுறம், வெளிநாட்டு நிதி உதவி நிறுவனத்தில் இருந்து கிடைக்கும் நிதி உதவியைக்கொண்டு செயற்படும் அமைப்பைத் தவிர, தமது சுயசக்தியில் மாத்திரம் செயற்படும் அமைப்பை முன்னெடுத்துச் செல்ல முடியாதென்ற கருத்தும் சமூகத்தில் வேரூன்றி இருந்தது.

ஆனால், இந்த இரண்டு கருத்துக்களும் சரியானவையல்ல என்பதை நிறுவுவதற்கு மறுமலர்ச்சி இயக்கம் ஆற்றல் பெற்றுள்ளது. கலந்துரையாடல்கள் மூலம் கிளைகளை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை நாம் அமுல்படுத்தத் தொடங்கி சுமார் 3 மாதங்களாகின்றன. தற்போது 60 க்கும் மேற்பட்ட கிளைகளை நாம் உருவாக்கியிருக்கிறோம். அவை ஒரு பிரதேசத்திற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டவையல்ல. பல்வேறு பிரதேசங்களில் குறிப்பாக மிகக் கஷ்டமான பிரதேசங்களில்கூட கிளைகளை அமைப்பதில் நாம் வெற்றியீட்டி உள்ளோம். மிக முக்கியத்துவம் வாய்ந்த விடயம் சிங்கள மக்களுக்கு மாத்திரம் எம்மை வரையறுத்துக் கொள்ளாமல் தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் பிரதேசங்களிலும் நாம் கிளைகளை அமைத்துள்ளோம். திருகோணமலை மூவினங்களும் சம எண்ணிக்கையில் வாழும் ஒரு பிரதேசமாகும்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்களும் மனிதர்கள்தான்...



அம்பாறை நீலாவணைப் பிரதேசத்துக்கு அண்மையில் பயணப்பட வேண்டியிருந்தது. அங்கு மக்களுடன் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. அங்குள்ள மக்களின் வாழ்க்கை முறை பற்றி அறிய முடிந்தது. அங்குள்ள மக்களிடையே சாதியம் அதிகளவில் இழையோடிக்கிடந்ததை அவதானிக்க முடிந்தது. அச்சாதிய வரிசைகளில் ஒன்று - ஆடை துவைக்கும் சாதிய முறைமையைச் சேர்ந்த குழாம். அம்மக்கள் மழை நீர் தேங்கி நிற்கும் கால்வாய்களில் ஆடைகளை துவைத்து கடற்கரை மணலில் காயவைத்து பின்பு மக்களின் வீடுகளில் சென்று கொடுப்பதை முறைமையாகக் கொண்டிருந்தனர். இவர்கள் பொதுச்சபையில் இருந்து ஒதுக்கிவைக்கப்படுவதுடன் திருமணம் மற்றும் மரண வீடுகளின் பண்பாட்டு அடிப்படையில் கருமங்களை ஆற்றுவதுடன், அவர்கள் சாதிய அடையாளத்துடன் தனித்த குழுமமாக வாழ்வது குறிப்பிடத்தக்கது.

தொழிலின் அடிப்படையில் சமூக அந்தஸ்தை தீர்மானிக்கும் தமிழ் சமூகத்தில் மக்கள் இந்தத் தொழிலை செய்யும் மக்களைப் பெரிதாக மதிக்காதபடியால் இவ்வர்க்கத்தை சேர்ந்த மக்களின் பிள்ளைகள் இந்தத் தொழிலை செய்ய விருப்பமின்றி கல்வி கற்று வேறு தொழில்களை நாடுவதால் இவர்களின் பரம்பரை புதிய சகாப்தத்துக்குள் பயணிக்க ஆரம்பிக்கின்றது. மக்களை மதிக்கத் தெரியாத தமிழ்ச் சமூகம் பொருள் முதல் வாத அடிப்படையில் மக்களை பாகுபடுத்தி இருப்பது பெரும் முட்டாள்தனத்தின் உச்சகட்ட வெளிப்பாடு.

யாழ்ப்பாண நகரத்தில் குப்பை அள்ளும் நண்பர் ஒருவரை சந்திக்கக் கிடைத்தது. நாங்கள் இவர்களையெல்லாம் நண்பர்கள் தோழர்கள் என ஒருமுறையாவது சொல்லத் துணிவோமா..? அல்லது அவர்களுடன் ஒன்றாக அமர்ந்து உணவருந்துவோமா என நினைத்துப்பாருங்கள். எங்களில் எத்தனை பேருக்கு இப்படி நினைத்துப் பார்க்க முடியும் என்று உங்கள் மனசாட்சிகளை ஒரு முறையாவது கேட்டுப் பாருங்கள். ஆம்! உங்களுக்கு நினைத்துக்கூட பார்க்க முடியாமல் இருக்கும். அவரும் மனிதன்தான் அவருக்கும் உங்களைப் போன்றே உள்ளம் இருக்கின்றது, காதல் இருக்கின்றது, ஆசை இருக்கிறது, சுய கௌரவம் இருக்கின்றது. ஆம்! அவரும் உங்களைப் போன்ற மனிதர் தான். அவரும் காலில் செருப்பணியாது உங்கள் குப்பைகளைத்தான் அள்ளிக் கொண்டிருக்கின்றார் என்பதைச் சிந்தியுங்கள் நண்பர்களே! அவரிடம் எத்தனை பேர் பக்கத்தில் சென்று பேசியிருக்கிறீர்கள். என்ன எனது கேள்வி உங்கள் முகத்தில் அறைந்தது போன்று இருக்கின்றதா...? அவர்கள் உங்களால் மனிதத் தன்மையில்லாமல் கழிக்கப்பட்ட கழிவைத்தான் அள்ளுகிறார்கள். அவர்களும் மனிதர்தான் என்பதை நினைக்க மறவாதீர்கள். வாலொடு முன் தோன்றிய தமிழர்களே குப்பைகளை அகற்றப்படக்கூடிய வகையில் போடுங்கள் இனியாவது...



## வீதி விழிப்புணர்வு வேண்டும்

யாழ். நகரின் ஆரிய குளப்பகுதியில் உள்ள வீதி சமிக்ஞையில் சிவப்பு விளக்கு எரிகிறது. அதையும் மீறி ஒருவர் துவிச்சக்கரவண்டியில் பயணப்படுவதை ஒளிப்படம் காட்டுகிறது. இப்படி நாளாந்தம் ஏராளமானவர்கள் வீதியில் செல்பவர்கள் "செல்" என்று பச்சை விளக்கு "சைகை" காட்ட முன்பே பயணப்பட ஆரம்பித்து விடுகிறார்கள். வீதி விபத்தை தவிர்க்கத்தான் சமிக்ஞை விளக்கின் பயன்பாடு இங்கு கொண்டு வரப்பட்டது அதையும் மீறி இங்கு எம்மவர்கள் வீதியில் பொறுப்பின்றி பயணிப்பது குறிப்பிடத்தக்கது.




## காணாமற்போகும் குளங்கள்

ரவுண்ட் அப்

திருச்செந்தூரன்

யாழ்ப்பாணத்தில் குளங்கள் காணாமற்போதல் என்பது சர்வ சாதாரணமாக நிகழ்ந்து கொண்டு இருக்கின்றது. எம்மவர்கள் படித்தவர்கள் என்று அதிகம் பிதற்றுவார்கள். ஆனால், இப்படி இயற்கை அம்சங்கள் பறிபோகும்போது, நாங்கள் வீதிக்கு இறங்கி அலட்டிக் கொள்வது கிடையாது. தேர்தல் வரும்போது மட்டும் சும்மா விழிப்புள்ளவர்கள்போல் நடந்து கொள்வோம். ஆனால், அதையடுத்த நாள்களில் இது குறித்துப் பேசுவது கூடக் கிடையாது. இப்படித்தான் எம்மிடம் இருந்து யாழ்.வின்ஸர் சந்திக்கு அருகாமையிலுள்ள வண்ணான்குளம் தொலைக்கப்பட்டு இருக்கின்றது.

அரசின் முக்கிய நிறுவனமான-மாநாகர சபைக்குச் சொந்தமான கட்டடம் கஸ்தூரியார் வீதியில் அக்குளத்தின் முற்பகுதியை மூடிக்கட்டப்பட்டு இருக்கின்றது. வண்ணான் குளத்தின் ஒரு பகுதி இந்தக் கட்டடத்தினுள் காணாமல் போயிருக்கின்றது. இந்தக் கட்டடம் கட்டப்பட்டது கூட பெரும் அரசியல் பின்னணியுடன்தான் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? இது குறித்து எத்தனை பேர் சிந்தித்து இருக்கின்றோம். நாங்கள் ஒவ்வொருவரும் சுயநலத்தின் ஒட்டுமொத்த வெளிப்பாட்டவர்களே, எங்கள் காணியின் ஓர் அங்குலத்தை தானும் பக்கத்து வீட்டுக்காரன் ஆக்கிரமித்தால் நீதிமன்றம் செல்லும் நாங்கள் இது குறித்து சிந்திப்பதுகூட கிடையாது. கேட்டால் நேரமில்லை என்று வீர வசனம் பேசிடும் பரம்பரை நாங்கள். எது எப்படிபோனால் எங்களுக்கென்ன. இது வீதியில் செல்லும் மக்களின் குரல். அந்தக்குளம் குப்பை நிறைந்து, தண்ணீர் தேங்கி நோய் பெருக்கும் தொழிற்சாலையாக உருப்பெற்றிருக்கிறது சுகாதார அதிகாரிகளின் கவனத்துக்கு [illegible].



## சுவரொட்டிகளால் நிறையும் யாழ்ப்பாணச் சுவர்கள்




யாழ்ப்பாணச் சுவர்கள் சுவரொட்டிகளால் நிறைந்த வண்ணம்தான் இருக்கின்றன. மக்கள் அழகாக சுவர்களை வர்ணம் பூசி வைத்திருந்தாலும் சுவரொட்டிக்காரர்கள் இது குறித்து சிந்திப்பது கிடையாது. ஒட்டிய மறுநாள் வீட்டின் சொந்தக்காரர்கள் திட்டிய வண்ணம் உரிக்கிறார்கள். சுவரும் பழுதாகிறது சுவரொட்டியும் கிழிபடுகிறது இங்கு எவருக்கும் பயனில்லை. இது ஒட்டுபவர்களின் கவனத்துக்கு.




இது மட்டக்களப்பு கடற்கரையொன்றில் நாய் இறந்து நாறிக் கிடக்கும் காட்சி. இந்த நாய் இறந்து சில நாள்கள் யாரும் அகற்றுவார் இன்றி பிணத்தை ஒவ்வொரு முறையும் அலை முத்தமிட்டுச் செல்கிறது. எல்லோரும் மூக்கில் கை வைத்துக் கொண்டு செல்கின்றனரே தவிர அகற்றுபவர் எவருமின்றி துர்நாற்றம் நீள்கிறது. இப்படித்தான் எங்கள் நீரகங்கள் மாசடைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கல்வாரி யாகம்: மாயம் செய்த ஆற்றுகை

■ அரங்கன்



அரைத்த மாவை அரைத்தல் என்பது சுலபமான விடயமாக இருக்கலாம். திரைப்படம், நாடகம் என்பவற்றை விமர்சிக்கும் போது அதில் சொல்லப்பட்ட கதை, விடயம் என்பன முன்னைய காலங்களில் பயன்படுத்தப்பட்டு, மீண்டும் இந்தப் படைப்பிலும் கையாளப்பட்டு சலிப்பை ஏற்படுத்தினால் 'அரைத்த மா' என்ற ஒற்றைச் சொல்லில் குறித்த படைப்ப்ப கேலி செய்வார்கள். ஆனால் அப்படி அரைத்த மாவை முன்னரை விடவும் புதுமையாகவும், ரசனையாகவும் அரைப்பதென்பது மிகக் கடினமான ஒன்று. ஏற்கனவே பரிச்சயமான கதை., களம், காட்சிகள் என்பவற்றை மீளவும் நிகழ்த்தும்போது அதனை ரசிகர்கள் முன்னைய ரசிக நிலை முன்னனுபவம் காரணமாக சலிப்பின் புள்ளிக்குச் செல்லக்கூடும். அபட்டிச் செல்லாமல் மந்திரக் கயிற்றால் கட்டிப் போட்டு அவர்களை படைப்புக்குள் இழுத்து வருவது 'மலையைக் கெல்லி எலியைப் பிடிப்பது' போலத்தான். எனினும் தமிழ் மரபில் இந்த 'அரைத்த மாவைத் திரும்ப அரைக்கும்' போக்கு பாரம்பரிய ஆற்றுகைகளில் ஒருபோதும் படைப்பாளிகளைக் கைவிட்டதில்லை. வடமோடிக் கூத்தாக இருந்தாலென்ன, காத்தவராயன் சிந்துநடைக் கூத்தாக இருந்தாலென்ன, அரிச்சந்திர மயான காண்டம் போன்ற இசை நாடகங்களாக இருந்தாலென்ன இவை எவையுமே ஒவ்வொரு ஆற்றுகையின் போதும், வெவ்வேறு கலைஞர்களின் கைகள் பட்டபோதும் பட்டை தீட்டப்பட்ட வைரமாக இன்னுமின்னும் ஜொலித்தன. மாறாக ஒளி மங்கவில்லை. எனினும் இவை எப்போதும் ஒரே பிரதியையே தம்முடைய மையமாகக் கொண்டு அதன் வழியே அச்சுப் பிசகாமல் பயணித்தன. ஆனால் ஒரு கதைக்கருவை மையமாகக் கொண்டு, வெவ்வேறான ஆற்றுகைகளை, வெவ்வேறு கலைஞர்களை வைத்து ஆற்றுகை செய்வதென்பதும் அதை ரசிகர்களின் மனோநிலையோடு ஒட்ட வைத்து வெற்றிபெறச் செய்வதும் அத்துணை இலகுவல்ல.

ஆனால் பல வருடங்களாக இப்படியான கத்திமேல் பயணமாக தவக்கால ஆற்றுகைகளை நிகழ்த்தி வருகின்றது திருமறைக் கலாமன்றம். இயேசு கிறிஸ்து வின் தவக்காலப் பாடுகளையும், அவர் மீதான விசாரணைகளையும், சிலுவையேற்றத்தையும், மீளுயிர்ப் படைதலையுமே கதைக்கருவாகக் கொண்டு, தவக்கால ஆற்றுகைகள் மேடையேறுகின்றன. இந்த முறை அந்த வரிசையில் திருமறைக் கலாமன்றத்தின் தயாரிப்பில், தைரியநாதன் யஸ்ரின் ஜெலூட்டின் இயக்கத்தில், மன்றக் கலைஞர்களின் பங்களிப்பில், அரங்கேறியிருக்கிறது 'கல்வாரி யாகம்' திருப்பாடுகளின் காட்சி.

150 அடிக்கும் அதிக நீளமான மேடை, நான்குக்கும் மேற்பட்ட களங்கள், 200 வரையிலான கலைஞர்களின் பிரசன்னம், பிரமிக்க வைக்கும் காட்சியமைப்பு, தத்ரூபமான ஒப்பனை மற்றும் காட்சிப்பொருள்கள், நெஞ்சுருகி சிலிர்க்க வைக்கும் பின்னணி இசையும் பாடல்களும், காட்சிகளுக்கு வலுச்சேர்க்கும் ஒளிவிதானிப்பு என வழக்கமான அதே அம்சங்கள் இந்தமுறை இன்னும் மெருகேறியிருந்தன. இயேசுவாக பாத்திரமேற்ற யஸ்ரின் மினோசன் சிலுவையை மட்டுமல்லாது ஒட்டுமொத்த ஆற்றுகையையும் தன் தோளில் சுமந்து ஆற்றுகைக்கு வலுச்சேர்த்தார். உண்மையாகவே மீண்டும் இயேசுவை நேரில் பார்ப்பது போன்ற அனுபவத்தை அரங்கில் தன் நடிப்பின் ஊடாக மினோசன் வெளிப்படுத்தினார். இருப்பினும் அவர் சவுக்கடி வாங்கும் சந்தர்ப்பத்திலும், சிலுவை சுமக்கும் போதும் கொஞ்சம் அதிகமாகவே வலியால் துடிப்பது போன்ற மிகைநடிப்பு வெளிப்பட்டிருந்தது. இருப்பினும் அதுவொன்றும் பெரிய குறையல்ல. ஏனைய கலைஞர்களும் தங்கள் பொறுப்புணர்ந்து நடிப்பை வழங்கினர். பிலாத்துவாக நடித்தவர் கடந்த காலங்களில் பிலாத்துவாக நடித்தவரின் சாயலைப் பின்பற்ற முனைந்தமை கொஞ்சம் செயற்கையாக இருந்தது. எல்லோரையும் விட, சின்னச்சின்ன முக அசைவுகள் ஊடாக உணர்வுகளை வெளிப்படுத்தினார் கைப்பாஸாக பாத்திரமேற்ற விஜயகுமார்.

ஆற்றுகை தொடங்கி முடியும் வரை பார்வையாளர்கள் மகுடிக்கு மயங்கிய பாம்புகளாகக் கட்டுண்டு கிடந்தார்கள். அந்தளவுக்கு ஆற்றுகைக்குள் அவர்கள் அனைவரும் ஈர்க்கப்பட்டிருந்தார்கள். தனியே நடிப்பு மட்டுமல்லாது ஏற்கனவே சொல்லப்பட்டது போன்று, காட்சிவிதானிப்பு, ஒலி – ஒளி அமைப்புகள், ஒப்பனை, இசை, வசனங்கள் என்பனவும் இணைந்தே இந்த மாயத்தை நிகழ்த்த முடிந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக மனித உயிர்களுக்கு செய்யப்பட்ட கொடுமைக்களுக்கு 'பொறுப்புக்கூறுதல்' கட்டாயம் என்று சமகால நிகழ்வுகளும் இணைக்கப்பட்டிருந்தமை , போரால் நொந்து போயிருப்பவர்களுக்கு மட்டுமே புரிந்து கொள்ளும் செய்தியாகச் சொல்லப்பட்டமை சிறப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னை நீயே அறிவாய்




**ஒரு** தொழில் வெற்றிகரமாக நடக்க வேண்டும் எனில், அதற்கு ஏழு முக்கியமான மேலாண்மைத் திறமைகள் அவசியம். கடந்த இதழில் ஊழியர்கள் மேலாண்மை பற்றி விரிவாகப் பார்த்தோம். அதற்கு அடுத்தபடியாக, மூலப்பொருள்களை மேலாண்மை செய்வது எப்படி என்பதை இப்போது பார்க்கலாம்.

பொருள்கள் மேலாண்மை என்பது ஒரு தொழிலுக்கு மிக முக்கியமானது. ஏனெனில், பொருள்கள் விடயத்தில் நாம் காட்டும் அசட்டுத்தனம் நம்முடைய தொழிலில் மிகப் பெரிய நஷ்டத்தைக் கொண்டு வந்துவிடும். பெரும்பாலான தொழில்முனைவோர்கள் நஷ்டமடைவது பொருள்களை மேலாண்மை செய்யத் தெரியாத காரணத்தினால்தான்.

மூலப்பொருள்கள் மேலாண்மையில் திட்டமிடல், கொள்முதல் செய்தல், கட்டுப்படுத்துதல், விரைவுபடுத்துதல், போக்குவரத்து, பொருள்களைக் கையாளுதல் ஆகிய ஆறு நிலைகள் உள்ளன. இந்த ஆறு நிலைகளையும் திறம்படச் செய்வதன் மூலம் ஒரு தொழிலுக்கு உள்ளே வரும் பொருள்களிலிருந்து, வெளியே செல்லும் பொருள்கள் வரையிலான மேலாண்மையை வெற்றிகரமாகவும் இலாபகரமாகவும் செய்ய முடியும்.

**எவையெல்லாம் மூலப்பொருள்கள்?**

மூலப்பொருள்கள் மேலாண்மையைச் செய்வதற்குமுன் எவையெல்லாம் மூலப்பொருள்கள் என்பதில் தெளிவு தேவை. பிளாஸ்ரிக் பொம்மை தயாரிக்கும் தொழிலை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். அதில் பொம்மையைத் தயார் செய்யப் பயன்படுத்தப்படும் பிளாஸ்ரிக், பெயின்ட் மற்றும் பிற அலங்காரப் பொருள்கள் ஆகியவை மட்டுமே மூலப்பொருள்கள் அல்ல. மாறாக, உற்பத்தியின் போது ஊழியர்கள் தங்கள் கைகளில், கால்களில் மாட்டிக்கொள்ளும் கையுறை, காலுறைகள்கூட மூலப்பொருள்கள்தான். அதாவது, நம்முடைய தொழிலில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ நாம் பயன்படுத்தும் அனைத்துப் பொருள்களுமே மூலப்பொருள்கள்தான்.

மேலும், பொருள்களில் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் வெளியிலிருந்து வாங்கப்பட்ட மூலப்பொருள்கள், உற்பத்தி செய்வதற்கு துணைபுரியும் உபகரணங்கள், உதிரிப்பாகங்கள், நிறைவு செய்யப்படாத உற்பத்திப் பொருள்கள், நிறைவடைந்த, விற்பனைக்குத் தயார் நிலையில் உள்ள பொருள்கள், விற்பனை ஆகாமல் திரும்ப வரும் பொருள்கள், விற்பனை ஆகி சில காரணங்களால் வாடிக்கையாளர்களால் திருப்பித் தரப்படும் பொருள்கள் எனப் பல வகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன. பொருள்கள் எந்த வகையாக இருந்தாலும், அதற்குத் தேவையான மேலாண்மையைச் செய்தே ஆகவேண்டும். இனி பொருள்கள் மேலாண்மையைப் பற்றி விளக்கமாக தெரிந்துகொள்ளலாம்.

**கொள்முதல் திட்டமிடல்**

ஒரு தொழிலின் மொத்த முதலீட்டில் பொருள்கள் மட்டுமே 60 சதவீத முதலீட்டைக் கொண்டவையாக உள்ளன. எனவே, அவற்றைச் சரியாக மேலாண்மை செய்ய வேண்டியது அவசியம். அதற்கு முதலில் என்ன பொருள், எங்கிருந்து கொள்முதல் செய்யப்போகிறோம், என்ன அளவில் கொள்முதல் செய்யப்போகிறோம், என்ன தரத்தில் அந்தப் பொருள் இருக்க வேண்டும் என்பது போன்ற விடயங்கள் முக்கியமானவை. நம்முடைய தொழில் அளவு என்ன, நம்முடைய இலக்கு என்ன, சந்தையில் உள்ள வாடிக்கையாளர்களின் சதவீதம் எவ்வளவு, நம்முடைய பொருளை எவ்வளவு பேர் வாங்குவார்கள் எனப் பல விடயங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதற்கேற்ப பொருள்களை கொள்முதல் செய்து, உற்பத்தியைத் திட்டமிட வேண்டும்.

கொள்முதல் செய்வதற்கு முன் பொருளின் தரம் மற்றும் விலை உள்ளிட்ட விடயங்களை நான்கைந்து இடங்களில் விசாரித்த பின்னர் முடிவு செய்யவேண்டும். கொள்முதல் செய்பவரிடம் விலை குறித்து தெளிவாகப் பேசவேண்டும். உங்களுடைய தொழிலைப் பற்றி அவருக்கு எடுத்துச் சொல்லி இந்த விலையில் கொடுத்தால் கட்டுப்படி ஆகாது என்று பேசி, விலையைக் குறைக்கப் பார்க்கலாம். ஆனால், உங்கள் விலைக் குறைப்பு, தரத்தில் எந்த சமரசத்தையும் ஏற்படுத்துவதாக இருக்கக்கூடாது. முடிந்தவரை உற்பத்தி செய்யும் இடத்துக்குப் பக்கத்திலேயே பொருள்களைக் கொள்முதல் செய்யும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். இது போக்குவரத்துச் செலவுகளைக் குறைக்கும். சரியான நேரத்தில், சரியான அளவில் தரமான பொருள்களாகக் கொள்முதல் செய்யவேண்டும். கொள் முதல் செய்யும்போது நாம் செய்யும் இது போன்ற சிறு விடயங்கள் மூலம் நாம் சேமிக்கும் ஒரு சதவீதும், நமக்கு ஐந்து சதவீத இலாபத்தைத் தரும்.

**இருப்பு முகாமைத்துவம்**

இருப்பு முகாமைத்துவம் என்பதுதான் பொருள்கள் மேலாண்மையில் முக்கியமான இடம். பொருள்களின் இருப்பைத் தொடர்ந்து கணக்கில் வைத்துக்கொள்ள வேண்டும். எவ்வளவு பொருள்கள் இருக்கின்றன, எவ்வளவு பொருள்கள் விற்பனைக்குப் போயிருக்கின்றன, எவ்வளவு திரும்பி வந்திருக்கின்றன என்கிற விவரங்கள் அத்தனையும் பதிவுப் புத்தகத்தில் அல்லது மைக்ரோ சொஃப்ட் எக்ஸெல் ஷீட்டில் குறிக்கப்படவேண்டும். மேலும், பொருள்கள் வாங்கிய மற்றும் விற்பனை ஆன அனைத்து சிட்டைகளும் சேர்த்து வைக்கப்பட வேண்டும்.

இந்தக் கணக்குப் பதிவுகள்தான் நமது தொழிலைப் பிரதிபலிக்கும். தொழிலில் முன்னேற்றத்தைத் திட்டமிட இந்த விவரங்கள் உதவியாக இருக்கும். இவற்றைக் கணக்கு வைக்காமல் போனால், எந்தப் பொருள் எங்கே போகிறது, எவ்வளவு பொருள் வீணாகிறது என்பது போன்ற எந்த விவரமும் நமக்குத் தெரியாது. அதேபோல், இப்படிக் கணக்கு வைப்பதன் மூலம் சந்தையில் எவ்வளவு பொருள்கள் தேவையாக இருக்கின்றன என்பதையும், பொருள்கள் திரும்பி வந்தால் அதற்கான காரணங்களையும் நம்மால் அறிந்துகொள்ள முடியும். மேலும், பொருள்களைக் கையாளும்போது பொருளின் தன்மைக்கு ஏற்ப கையாளவேண்டும். பொருள்கள் கையாளப்படும்போது மேற்பார்வை செய்யப்பட வேண்டும். இதன் மூலம் பொருள்கள் உடைவது, கிழிவது போன்றவற்றைத் தடுக்கலாம்.

மேலும், பொருள்கள் குறித்த கணக்குகளைப் பதிவு செய்வதன் மூலம் தடை இல்லாமல் உற்பத்தி செய்யவும், சந்தைத் தேவையைப் பூர்த்தி செய்யவும் முடியும். புதிய வாய்ப்புக்களைக் கண்டறியவும், செயற்பாடுகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தத் தேவையான புதிய திட்டங்களைத் திட்டமிடவும் முடியும். மிக முக்கியமாக, காப்புறுதி, வரிச் சலுகை போன்ற விடயங்களுக்கு இன்வென்ட்ரி கணக்கு வழக்குகள் மிகவும் உதவிகரமாக இருக்கும்.

மாறாக, பொருள்களின் வரவு செலவு கணக்குகளைப் பதிவு செய்யாமல் இருந்தாலோ, ஊழியர்கள் பொருள்களைக் கையாளும்போது கண்காணிக்காமல் இருந்தாலோ பொருள்கள் சேதமடைவதற்கும், சில ஊழியர்கள் எளிதில் தங்கள் கைவரிசையைக் காட்டவும் அதிக வாய்ப்புள்ளது. அத்துடன், கடிவாளம் போட்ட குதிரையைப்போல, வாய்ப்புகளைக் கண்டறிந்து செயற்படுத்த முடியாமல் ஒரே பாதையில் போய்க் கொண்டிருப்போம். இதனால், கொஞ்சம் கொஞ்சமாக நம் முதலீடு நஷ்டமடைய ஆரம்பிக்கும். பின்னர் நம்முடைய முதல் மொத்தத்துக்கும் மோசம் வந்து, பெரும் நிதி நெருக்கடியில் சிக்க வேண்டியிருக்கும்.

விற்பனை ஆகாமல் திரும்பவரும் பொருள் களையும், ஏதோ சில காரணங்களால் வாடிக்கையாளர்களால் திரும்பத் தரப்படும் பொருள்களையும் அலட்சியப்படுத்தாமல் அவற்றை எப்படி மீண்டும் தொழிலுக்குப் பயன்படுத்தலாம் என்பதை யோசிக்க வேண்டும். வாடிக்கையாளர் திரும்பத் தருவதற்கான காரணங்களைத் தெரிந்துகொண்டு அவற்றைச் சரிசெய்ய முயற்சிக்கலாம்.

**பொதியிடலும் விநியோகமும்**

பொருள்களை பொதியிடல், விநியோகத்துக்கு கொண்டுசெல்வதிலும் கவனம் அவசியம். பொருள்களின் தன்மைக்கு ஏற்ப பொதியிடப்பட வேண்டும். அப்போதுதான் பொருள்கள் வாடிக்கையாளரைச் சென்று சேரும் வரை எந்தச் சேதாரமும் ஆகாமல் இருக்கும். மேலும், வண்டியில் பொருள்களை ஏற்றும்போதும் இறக்கும்போதும் மேற்பார்வை அவசியம். அதேபோல், பொருள்களைக் கொண்டு செல்லும் வாகனம், பொருளின் தன்மை மற்றும் அளவுக்கு ஏற்றதாக இருக்க வேண்டும். செலவைக் குறைக்கிறேன் என்று அதிக அளவில் ஏற்றி அனுப்பவோ அல்லது ஏதோ ஒரு வாகனத்தில் ஏற்றி அனுப்பவோ கூடாது.

பொருள்கள் மேலாண்மையில் இதுபோன்ற நடவடிக்கைகளைத் தீவிரமாகச் செயற்படுத்தும் போது, பொருள்கள் விநியோகம் செய்யப்படுவதில் தாமதம் ஏற்படும். இதனால் வாடிக்கையாளர்கள், விநியோகஸ்தர்கள் சற்று சங்கடப்படுவார்கள். ஆனால், அதற்காக சமரசம் செய்து கொள்ளாதீர்கள். அப்போது அது சங்கடத்தை ஏற்படுத்தினாலும் இரு தரப்பினருக்குமே இலாபம் தரக்கூடியதாகவே இந்த மேலாண்மை நடவடிக்கை இருக்கும்.

இப்படி நம்முடைய தொழிலில் உள்ள பொருள்கள் அனைத்தையும் டிமாண்ட் மற்றும் சப்ளை ஆகிய இரண்டையும் பொறுத்து தொடர்ந்து திட்டமிட்டு மேலாண்மை செய்யும் போது பொருள்கள் வீணாகாமலும், நஷ்டம் ஏற்படாமலும் பார்த்துக்கொள்ள முடியும். இதில் ஒரு தொழில்முனைவோர் சாதித்துவிட்டாலே தொழிலில் வெற்றிதான்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரசிகரின் தள்ளுபடி

இந்திய ரசிகர்கள் போல் கிரிக்கெட்டை விரும்புபவர்கள் வேறு யாராகவும் இருக்க முடியாது. அணி வெற்றி பெற்றால் வீரர்களுக்கு கோயிலும் கட்டுவார்கள். அணி தோற்றுப்போனால் கொடும்பாவி எரித்து வீரர்களின் வீடுகளுக்கு கல்லும் எறிவார்கள். இப்படிப்பட்ட பெரும்பாலான ரசிகர்களுக்கு மத்தியிலும் தாம் விரும்பும் வீரருக்காக தமது வாழ்க்கையையே தியாகம் புரிந்த தீவிர ரசிகர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

அவ்வாறான ஒருவர்தான் சுதீர் கௌதம். சச்சின் டெண்டுல்கர் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதற்கு முன்னதாக இந்தியா பங்குபற்றும் ஒவ்வொரு போட்டியிலும் தனது உடலில் இந்திய மூவர்ணக் கொடியை வண்ணம் தீட்டிக்கொண்டு டெண்டுல்கர் என்ற பெயரையும் 10 என்ற எண்ணையும் அதன் மீது எழுதி கையில் சங்குடன் காணப்படுபவர் தான் சுதீர் கௌதம். நாம் அடிக்கடி தொலைக்காட்சியில் இவரைப் பார்த்தும் இருக்கின் றோம். ஆனாலும் இது சுதீர் கௌதம் பற்றிய பதிவல்ல. மாறாக இன்னொரு ரசிகர் பற்றிய பதிவு.

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் உள்ள வல்சாட் நகரத்தைச் சேர்ந்த ஓட்டோ ஓட்டுநர்தான் ஜாவிட் ஷா. இவர் இந்திய அணியின் சகலதுறை வீரர் யூசுப் பதானின் தீவிர ரசிகர். தனது ஓட்டோவை வண்ணமயமாக அலங்கரித்து அதற்கு யூ.பதான் என்று பெயரிட்டும் உள்ளார். கடந்த வருடம் பரோடா அணிக்காக ரஞ்சி கிண்ணத்தொடரில் விளையாட யூசுப் பதான் குஜராத்திற்குச் சென்றிருந்தார். அப்போது எப்படியாவது தனது ஆதர்ஷநாயகனைச் சந்தித்து விட வேண்டும் என்ற ஆசையில் ஜாவிட் ஷா போட்டி நடைபெறும் மைதானத்துக்கே சென்றுள்ளார். எப்படியோ ஒருவழியாக யூசுப் பதானை அவர் சந்தித்துமுள்ளார். பழகுவதற்கு எளிய மனிதரான யூசுப் பதான் தனது ரசிகருடன் அதிகளவு நேரத்தைச் செலவிட்டும் உள்ளார். இதுபோதாதென்று ஜாவிட் ஷா தனது ஓட்டோவில் யூசுப் பதானை ஏற்றிக்கொண்டு வல்சாட் நகர வீதிகளை வலம்வந்துள்ளார்.

இந்த வருடம் ஜாவிட் ஷா, யூசுப் பதான் மீதான தனது அன்பை இன்னொரு விதத்தில் வெளிப்படுத்தி உள்ளார். அதுதான் விழாக்கால தள்ளுபடி போல தற்போது நடைபெற்று வரும் ஐ.பி.எல். போட்டிகளைக் கருத்தில்கொண்டு சிறப்புச்சலுகை ஒன்றையும் அறிவித்துள்ளார். இம்முறையும் யூசுப் பதான் கொல்கத்தா நைற்றைடர்ஸ் அணிசார்பில் விளையாடி வருகின்றார். கொல்கத்தா அணி விளையாடும் போட்டிகளில் யூசுப் பதான் 30 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டால் கட்டணத்தில் 25 சதவீத சலுகையும் 50 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டால் கட்டணத்தில் 50 சதவீத சலுகையும் போட்டி நடைபெற்று முடிந்த அன்றைய இரவுக்கு தன்னிடம் ஓட்டோ தேடி வருபவர்களுக்கு உண்டு என்றும் - போட்டியில் சதம் அடித்தால் போட்டிக்கு மறுநாள் இலவசமாகத் தனது ஓட்டோவில் பயணிக்கலாம் என்றும் தனது ஓட்டோவின் பின்புறத்தில் எழுதி ஒட்டியுமுள்ளார்.

எனவே இந்த ரசிகரின் விசுவாசத்தை எண்ணி மகிழ்ச்சி அடைவதா அல்லது அவரது ஜீவனோபாயத்துக்கே வேட்டு வைக்கும் அளவுக்கு கண்ணை மறைத்த கிரிக்கெட் மோகத்தை குற்றஞ்சொல்வதா என்று தெரியவில்லை.

ஆனாலும் தனது ரசிகர் இலவசமாக ஓட்டோ ஓட்டி நட்டப்பட்டு விடக்கூடாது என்பதற்காகவோ என்னவோ இந்த ஐ.பி.எல். தொடரில் யூசுப் பதான் இன்னமும் சதம் அடிக்கவே இல்லை.

தொகுப்பு: **சி.விமலன்**

# பெருமையான தருணம்

ரினிடாட் அண்ட் டுபாகோ நாட்டின் விளையாட்டுத்துறை அமைச்சர் டரில் சிமித் சில தினங்களுக்கு முன்னர் அமைச்சரவையில் வெளியிட்ட அறிவிப்பு கிரிக்கெட் ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. அதுதான் எதிர்வரும் மே மாதம் 13ஆம் திகதி பிறைன் லாறா தலைமையிலான பதினொ ருவர் அணியும் சச்சின் டெண்டுல்கர் தலைமையிலான பதினொருவர் அணியும் ஒரு இருபதுக்கு 20 காட்சிப்போட்டியில் விளையாடவுள்ளதான அறிவிப்பு.


2007 ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளுக்காக ரினிடாட் அண்ட் டுபாகோ நாட்டின் தறூமா நகரத்தில் ஒருமைதானம் புதிதாக அமைப்பதற்கான பூர்வாங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனாலும் பல்வேறு தடங்கல்கள் காரணமாக இவ்விளையாட்டு மைதானத்தை கட்டிமுடிக்க முடியவில்லை. தற்போது ஒரு தசாப்த காலத்தின் பின்னர் இதனைக் கட்டி முடித்து அதற்கு பிறைன் லாறாவின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் சார்பில் டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்களைப் பெற்றவர் பிறைன் லாறா. 131 டெஸ்ட் போட்டிகளில் 34 சதங்கள் அடங்கலாக 11953 ஓட்டங்களை அவர் பெற்றிருந்தார். அத்தோடு டெஸ்ட் போட்டிகளில் இங்கிலாந்துக்கெதிராக தனிநபர் சாதனையாக ஆட்டமிழக்காமல் 400 ஓட்டங்களைப் பெற்ற உலகசாதனைக்கும் சொந்தக்காரர். எனவே அவரின் பெயர் இந்த மைதானத்துக்குச் சூட்டப்பட்டமை மிகப்பொருத்தமான ஒன்றே.

பதினையாயிரம் பேர் அமர்ந்து பார்க்கக் கூடிய வகையில் அமைக்கப் பட்டுள்ள இந்த மைதானத்தில் ஏனைய மைதானங்களைவிட அதி நவீன வசதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. நீச்சல் தடாகம், உள்ளக ஜிம்னாஸ்ரிக் கூடம், மெய்வன்மைப் போட்டிகளுக்கான பயிற்சி மையம், பெரிய கார் தரிப்பிடம் என்பவற்றோடு அச்சு, வானொலி, தொலைக்காட்சி ஊடகங்களுக்கு விசேடமாக வடிவமைக்கப்பட்ட பகுதிகள் எனப்பல்வேறு வசதிகளும் இந்த மைதானக்கட்டமைப்பில் திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த மைதானத் திறப்பு விழாவை முன்னிட்டே அன்றைய தினம் மேற்படி போட்டிக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்தப் போட்டியை உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் ஒளிபரப்புவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்தோடு விரைவில் இப்போட்டிகளுக்கான ரிக்கெட்டுகளும் விற்பனை செய்யப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. என்னதான் சச்சினும் லாறாவும் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றாலும் அவர்களுக்கிருக்கும் நட்சத்திரமதிப்பு இன்னமும் குறையவே இல்லை என்பதையே இந்தப் போட்டி வெளிப்படுத்துவதாக உள்ளது.






கடந்த வாரம் பிக்ஸோவும் பிரவுண் ஸ்ரோமனும் மோதிய WWE போட்டி ஒன்றில் மேடை உடைந்ததனால் வீரர்களோடு நடுவரும் நிலைகுலைந்து விழுந்துள்ளார். WWE போட்டிகளில் மேடை உடைவது ஒன்றும் புதிதில்லை என்றாலும், சுமார் 6 வருடங்களின் பின்னர் தற்போது இந்தச் சம்பவம் மீளவும் நிகழ்ந்துள்ளது. முன்னதாக 2003ஆம் ஆண்டு பிக்ஸோவும் புறொக் லெஸ்னரும் மோதிய SMACKDOWN போட்டி ஒன்றில் மேடை உடைந்திருந்தது. அதுபோல 2011ஆம் ஆண்டு பிக்ஸோவும் மார்க் ஹென்றியும் மோதிய WWE போட்டி ஒன்றிலும் மேடை உடைந்திருந்தது. இந்த மூன்று மேடை உடைவுச் சம்பவத்திலும் உள்ள ஒரே ஒற்றுமை இந்த மூன்று போட்டிகளிலும் பிக்ஸோ கலந்துகொண்டமைதான்.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறிண்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 29.04.2017 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org